Jude

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
ஆக. 08-14,1999

வாரமலர்
தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 321

முற்றுகை போரும் முகமூடிகளும்

இங்கும் வருகிறது அமெரிக்க படை!

அபாயமான வியூகம்

பிடித்தமான நடிகைகள்

களமுனை அனுபவம்

படிப்பகம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

முரசம்

கைதும், காவலும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

மட்டக்களப்பில்
முஸ்லிம் இளம் பெண்
பாலியல் வல்லுறவுக்கு
உள்ளானது பற்றி
'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது!

இது தொடர்பாக
தொல்லை தவிர்ப்புக்குழு
கவனத்தில் எடுத்து
படை அதிகாரிகளுடன்
தொடர்பு கொண்டது.

இதன் காரணமாக
படையினர் சிலர்
கைதாகியும் உள்ளனர்!

இதேபோல
மன்னார் தமிழ்ப்பெண்
கமாலிட்டாமீதான
பாலியல் வல்லுறவுக்கும்
படுகொலைக்கும் காரணமான
படையினர் சிலரும் கைதாகினர்.

இவ்வாறான செய்திகளால்
உடனுக்குடன் நடவடிக்கை
எடுக்கப்படுவது போன்று
நமக்குத் தோன்றலாம்!

மனித உரிமை அமைப்புக்களும்
இத்தோடு திருப்திப்பட்டு
வாயை மூடிக்கொள்கின்றன!

அத்து மீறல்கள் தொடர்பாக
படையினர் கைதாவது
என்பது புதுமையல்ல!

சில அத்துமீறல்களுக்கு
வழக்குகள்கூட தொடுக்கப்பட்டு
சில மாதங்களாக
விளக்க மறியலிலும் இருந்தனர்!

உதாரணத்திற்கு
சிலவற்றை மட்டும்
திரும்பிப் பார்ப்போம்!

கிழக்கில் கோணேஸ்வரியின்
கோரக் கொலை தொடர்பாக
படையினர் கைதாகினர்!

யாழ்ப்பாணத்தில்
ராஜினியை வல்லுறவு புரிந்து
மலசலகூட குழிக்குள் போட்ட
படையினரும் கைதாகினர்!

தென்னிலங்கையில்
தமிழ் இளைஞர்களை
கோரமாக கொன்றுவிட்டு
ஏரிகளில் வீசியெறிந்த
அதிரடிப்படையினரும்
கைதாகி சிறையில்
சிலகாலம் இருந்தனர்!

கைதானதையும்
காவலில் வைத்ததையும்,
வழக்குத் தொடுத்ததையும்,
அரசு பிரசாரம் செய்தது!

"ஆஹா, மனித உரிமை
இங்கு பேணப்படுகிறது!"
என்று நாமும்
மெய் சிலிர்த்துப் போனோம்!

பின்னர் என்ன
நடந்தது?

காவலில் இருந்தவர்கள்
காதும் காதும் வைத்தமாதிரி
விடுதலையானார்கள்?

வழக்குகளும்
இழுத்தடிக்கப்பட்டு
வலுவிழக்கச் செய்யப்படுகின்றன!

கமாலிட்டா
படுகொலை விடயத்திலும்
சாட்சிகள் மிரட்டப்பட்டதாக
செய்தி கிடைத்துள்ளது!

எனவே, கைதுகள்,
காவலில் வைத்தல்
போன்றவை மட்டும்
தண்டனை என்று
ஏமாந்துவிடக்கூடாது!

சிறையில் இருப்பது
படையினருக்கு
சிரமமான விஷயமல்ல!

உள்ளேயும்
சுதந்திரமாக இருக்கலாம்!

தமிழ்க் கைதிகளுக்கு
மட்டும்தானே
சிறையில் பாதுகாப்பில்லை!

அல்லது, ராஜபக்ஷபோல
உண்மைகளை அம்பலமாக்கும்
படையினருக்கு வேண்டுமானால்
சிறையில்
அச்சுறுத்தல்கள் நேரலாம்!

ஆகவே, மனித உரிமை
அமைப்புக்களது பணி
கண்துடைப்பு நடவடிக்கைகளை
நம்பி வாய்மூடி இருப்பதல்ல!

இதுவரை,
மனித உரிமை மீறல்கள்
தொடர்பாக கைதானவர்களில்
எத்தனைபேருக்கு
தண்டனை வழங்கப்பட்டது?

கடும் குற்றங்களுக்காக
கைதான படையினர்
இப்போது எங்குள்ளனர்?

வழக்குகள் ஏன்
தாமதமாகின்றன?

இவை போன்ற உண்மைகளைக்
கண்டறிந்து,
துரிதமான நீதி நடவடிக்கைக்கு
அரசை நிர்ப்பந்திப்பதே
மனித உரிமை அமைப்புக்களது
பணியாக இருக்க வேண்டும்!

சர்வதேச மன்னிப்புச்சபை
போன்றவற்றின்
கவனத்திற்கு
இவற்றைக் கொண்டு செல்வதும்
இங்குள்ள மனித உரிமை
நிறுவனங்களது கடமையாகும்!

கிருஷாந்தி வழக்கை
விரைவாக நடத்தி முடிக்க
அரசு முன்வந்தமைக்கும்
வெளியுலக
அழுத்தங்களே காரணமாகும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

ஆன்மீகம்

பிரபஞ்சத்தின் ஒளி

பிரபஞ்சத்தின் சகல ஆட்டத்துக்கும் காரணம் ஒரே ஒரு பராசக்திதான். அந்த ஈஸ்வரனுடைய ஆக்ஞைப்படி தான் உலக இயக்கம் முழுவதும் நடக்கிறது. அவன் பல விஷயங்களைச் சம்பந்தப்படுத்தி விடுகிறான். இந்த உலகத்தில் எதுவுமே தொடர்பில்லாமல் நடக்கவில்லை. நமக்கு சம்பந்தமில்லாதவையாகத் தோன்றுவதை எல்லாம் உள்ளூரச் சம்பந்தப்படுத்தி வேடிக்கை பார்க்கிறான் சர்வேச்வரன்.

ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுக துக்கங்களுக்கு முதல் காரணம். இதற்கே துணைக்காரணமாக அல்லது அடையாளமாக கிரகசாரம், தெய்வ குற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன. ஜாதகரீதியில், வைத்தியரீதியில, மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். நம் கர்மா தீர்கிறபோது அவை பலன் தரும்.

பகவான் விட்ட வழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டு பேசாமல் கிடக்கிற பக்குவம் இருந்தால், எல்லாவற்றையும்விட அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம், உண்மையான பரிகாரம். பூர்வ கர்ம சமாச்சாரம் எப்படிப் போனாலும் இனிமேலாவது கர்மபாரம் ஏறாமல் பார்த்துக்கொள்வதே முக்கியம். பழையதற்கு பரிகாரம் தேடுவதைவிட புதிய சுமை சேராமல், பாபம் பண்ணாமல் ஈஸ்வரனைத் துணை கொள்வதே முக்கியம். பூர்வ கர்மத்தால இப்போது ஏற்பட்டுள்ள துக்கத்துக்கும் உண்மைப்பரிகாரம் ஈஸ்வர தியானம்தான். இனிமேல் துக்கத்துக்கு விதை போட்டுக் கொள்ளாமல் இருக்கிற உபாயம் ஈஸ்வர தியானம்தான்.

அங்கே துக்கமும் இல்லை, சுகமும் இல்லை. இரண்டுக்கும் ஆதாரமான சத்தியம் மட்டும் சுயம்பிரகாசமாக இருக்கும். சத்தியத்தின் கடரை வணங்கி வழிபடுவோமாக! உலகில் அன்பும் அமைதியும் நிலவட்டும்.

தொகுப்பு: கொஸ்லந்தை-எஸ்.என். ராஜரட்னம்.

இறையச்சம்

"அல்லாஹ்வின் அச்சத்தால் விடப்படும் கண்ணீர், ஓர் ஈயின் தலையளவு இருந்தாலும், அது வெளிப்பட்டு அது முகத்தில் விழுந்தால், அல்லாஹ் அந்த முகத்தை நரக நெருப்பை விட்டுத் தடுத்துவிடுவான்."

ஒரு முஸ்லிமுடைய உள்ளம் அல்லாஹ்வின் அச்சத்தால் அதிர்ச்சியுறுமானால், ஒரு மரத்திலிருந்து உதிரும் இலைகளைப் போல அவரது பாவங்கள் உதிர்ந்து போகும்.

ஒரு மனிதன், அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவானேயானால், அவன் நரகம் புகுவது, கறந்த பால் மீண்டும் மடியில் புகுவது போல கடினமாகிவிடும்.

அல்லாஹ்விடத்தில் இருவகைத் துளிகளைக் காட்டிலும் வேறுவகைத் துளிகள் பிரியமானதாயில்லை; அதிலொன்று, அல்லாஹ்வின் அச்சத்தால் விடும் கண்ணீர்த் துளி; மற்றொன்று அல்லாஹ்வின் பாதையில் வெளிப்பட்ட இரத்தத் துளி.

அல்லாஹ்விடத்தில் நல்லாதரவு வைக்காமல் உங்களில் எவரும் மரணமடைய வேண்டாம். (நபி மொழிகள்)

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

கவிதைப் போட்டி இல. 318

பரிசுக்குரிய கவிதை

இடம் உள்ளவரை
இடம் பிடித்துள்ள
வியக்க வைத்த

எங்கே!

அம்மப்பா....
அப்பப்பா...
அப்பா
எப்போ வருவார்?
அம்மா...?
போனதெங்கே?
உண்மையை
சொல்லுங்கள்!

கயல்வண்ணன்-
வவுனியா.

நோக்கம்

உற்றுப் பார்ப்பது என்ன?
ஷெல்லடியா?
பீரங்கியா?
சிறகை விரித்து
நெருப்பை கக்கும்
வெண் புறாவா?

பி.சண்முகநாதன்-கோணகலை,
கந்தப்பளை.

கலங்காதே!

அகதி என்று வருந்தாதே!
போரைக் கண்டு தயங்காதே!
நாளைக்கே விடிவு வரும்
நமக்கும் சம உரிமை தரும்!

அ.சதர்சன்- கல்லடி-வேலூர்,
மட்டக்களப்பு.

இங்கேயும் காணலாம்!

சுடுகாட்டுச் சோகங்கள்!
சோறு காணாவயிறுகள்!
சொந்தங்களை இழந்த
சுற்றங்கள்!
சூடான்-சோமாலியாவில்
மட்டுமல்ல;
இப்போது இங்கேயும்தான்!

நா.ஜெயபாலன்-
பிபிலை.

திறப்(கிடைப்)பது எப்போ!?

படை தடுத்த
பாதை திறப்ப தெப்போ....??
பாண்துண்டு கிடைப்பதெப்போ...??
பச்சிளம் பாலகிக்கு
பால்மா கிடைப்பதெப்போ!?

களுவாஞ்சி நாதன்-கல்லடி, உப்போடை.

இல்லையோ?

பொன் கொஞ்சும்
இலங்கா புரியில்
நீ கொஞ்ச
தாய் தந்தை இல்லையோ?

கி.கலைமகள்-நாவற்குடா,
மட்டக்களப்பு.

மு(வி)டியுமா?

பஞ்சுகளும் பிஞ்சும்
பதறிப் பரிதவித்து
பயத்தோடும் பசியோடும்
நெஞ்சிலே பாரத்தோடும்!
இன்னும் எத்தனை நாள்
படை தடுத்து நிற்கும்
பாதை திறப்புக்கு?!

ராஜானந்தன், தபாலகம், கல்குடா.

இன ஒழிப்பு

ஓர்இனத்தை அழிப்பதில்
ஓர் அசத்தலான வழி முறை
பெற்றோரைக் காக்க
பிள்ளைகளில்லை...!
பிள்ளைகளைக் காக்க
பெற்றோர்களில்லை.....!

எஸ்-முருகையா - சுவிண்டன்,
ஓ ஜகலை.

ஒதுங்கி நிற்கும் காலம்!

ஊருக்கெல்லாம் சோறு போட்ட
உழைப்பாளி நாங்கள்-இன்று
ஒரு வேளை சோற்றுக்காய்
ஒதுங்கி உள்ளோம் முகாம் தனிலே!

வே.கணபதிப்பிள்ளை-
வவுனியா.

கவிதைப் போட்டி இல.321



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 14.08.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.321
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

ஏமாற்றம்!

இங்கு-மூன்று
தலை முறைகள்
காத்திருக்கின்றன.
சமாதானத்தைத் தேடி...

எஸ்.பி.பாலமுருகன்- பதுளை.

முத்திரை

படரும் செடி கொடிகள்;
வந்தேறு குடிகள்;
குடியிருக்க வந்த
வாடகை வாசிகள்;
இன்னும் என்னென்ன
முத்திரைகள்
குத்தப்படுமோ.....?

வை.சித்திகிருஷ்ணா, பாண்டிருப்பு-01.

போ(ஊ)ரின் தா(ஏ)க்கம்

தேர்தல் வரும் பின்னே
போர் வரும் முன்னே!
யார் வந்தால் என்ன
ஊர் விட்டு ஓடாத
நிலை வந்தால் போதும்!

ரவீந்திரநாத் அரவிந்தன்-
"உதயா"- அக்கரைப்பற்று-08.

உயிரே உனக்காக

ஆறும் அறுபதென்று(ம்)
சிறிதும் போருக்குத் தெரியாது
ஒரு பொருளும் எடுக்காமல்
ஓடு ஓடென்று விரட்டும்!

க.நாகராசா-நுணாவில், சாவகச்சேரி.

உண்மை

எதிர்பார்த்து உட்கார்ந்தால்
ஏதும் கிடைப்பதில்லை!
எழுந்து போராடினால் உலகில்
என்றும் துன்பமில்லை!

ஏறாவூர் ஸபீர் ஹாபிஸ்.

தவிப்பு

பூவும் தவிக்குது
பிஞ்சும் தவிக்குது
போகும் இடம் தெரியாமல்
வேரும் தவிக்குது!

சபரி- நல்லூர்

உதிர்வு

யுத்தத்தின்
சத்தத்தில்
உதிர்ந்ததோ
உன் எதிர்காலம்?

ஸ்ரீராம்-வவுனியா.

வாசக(ர்)சாலை

நூலாக வருமா?

டயானாவின் கதையை தந்த புவனா அசத்திவிட்டார். இந்தத் தொடரை புத்தகமாக வெளியிட்டால் சில பகுதிகளை தவறவிட்ட எமக்கு படிக்கக் கிடைக்கும். என்றென்றும் அரிய ஆவணமாக வீட்டில் இருக்கும். வெளியிடுவீர்களா?

கோ.புவனேஸ்வரி, வெலிமடை.

அன்பு முரசுக்கு!

'கண்ணீரில் கரைந்த இரவுகள்' நிறைவு பெற்றதும் எமது இரவுகளும் கண்ணீரில் கரைந்தன. 'சாள்ஸ்-டயானா' திருமணத்தை நேரிலும், தொலைக்காட்சிகளிலும் கண்டவர்களைவிட, டயானாவின் இறுதிச் சடங்கை கண்டவர்கள் தொகை பல மடங்கு அதிகம்' எனும் போது எமது உள்ளம் நெகிழ்ந்தது. டயானாவை எனது மனத்திரையில் என்றும் நீங்காமல் பதியவைத்தமைக்கு, எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புவனாவின் புதிய தொடரை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன் ஏமாற்றி விடாதே!

ச.ஜெகநாதன், பேராதனை.

கூட்டு நாடகம்

வன்னி மக்கள் பட்டினியால் வாடிய போதும் பாரா முகமாய் இருந்தன தமிழ்க் கட்சிகள். இதனால் தமிழ் மக்களிடையே தமது சுயரூபம் அம்பலமான கட்டத்தில்தான் கூடிப்பேசுவதாக நாடகம் ஆடி, தமது சுயரூபங்களை மறைக்கப் பார்த்தார்கள். அரசையோ, அதன் செயற்பாடுகளையோ கண்டித்து எதிர்த்து நிற்க இக் கட்சிகளுக்கு திராணியில்லாத போது, இந்த நாடகங்கள் எதற்காக? இது என் கேள்வி மட்டுமல்ல; என்னைப்போல சிந்திக்க தெரிந்த அனைவரது கேள்வியுமாகும். சிலரை பல காலம் ஏமாற்றலாம். பலரை சில காலம்தான் ஏமாற்றலாம். தமிழ் மக்களை முட்டாள்களாக்க முடியாது.

பி.தேவராஜா, யாழ்ப்பாணம்.

இவர்களா பிரதிநிதிகள்?

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். பாவம் தமிழ் கட்சிகள்- அமைச்சரது காரியாலயத்தில், குளிர் சாதன அறையில் கூடிப்பேசினார்கள். வன்னி மக்களுக்கு உணவு அனுப்புமாறு அம்மையாரிடம் கருணை மனுக் கொடுத்தார்கள். இவர்களா மக்கள் பிரதிநிதிகள் என்று கேட்பதில் என்ன தவறு?

ஆ.தியாகலிங்கம், கொழும்பு-03.

அன்பின் முரசிற்கு,

இளவரசி டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகளை' 'புவனா' மூலம் முரசு வாசகர்களாகிய எமக்குக் கொடுத்ததற்கு முதலில் நன்றி. அத்தொடரினை 'முற்றும்' மூலம் நீ முடித்து விட்டாய். ஆனால் எமக்கு அதன் நினைவுகள் தொடர்கின்றன...

'புவனா'வின் அடுத்த தொடரை 'உன் மூலம்' ஆவலாக எதிர் பார்க்கும்வாசகி

ந.மதி, மோதர.

பெரிய கைகள்

'வீர விதான' வேகமாக வளரவில்லை. ஆளும் தரப்பின் யுத்த பின்னடைவை திசைதிருப்ப பாலூட்டி வளர்க்கப் படுகின்றது. இது அனேகமான மக்கள் அறிந்ததே! ஆனால் பதவி ஒன்றே குறியாகக் கொண்டுள்ள இ.தொ.கா. உட்பட அனைத்து தமிழ் கட்சிகளும் இதை அறிந்தும் ஊமையாகிவிட்டார்களே? இவர்கள் செயலுக்கு பரிதாபப் படுவதா, ஆத்திரப்படுவதா? நிச்சயமாக நாம் இவர்களுக்கு வாக்களித்ததற்கு வெட்கப்பட வேண்டும்.

மாத்தளை, மோகன்.

இளவரசி டயானாவின் கண்ணீர் கதை நம் குடும்பம் முழுவதையும் கவலையில் ஆழ்த்திவிட்டது. புவனாவின் கைவண்ணம் வெகு நேர்த்தி. ரசிகனுக்கு சரியான போட்டி.

இ.நிரோஷா-மட்டக்களப்பு.

!7 வாரங்கள் எப்படிப் போயின என்பதே தெரியவில்லை. கண்ணீரில் எங்களை கரைய வைத்து விட்டார் டயானா. கடைசி அத்தியாயம் சோகமோ சோகம். புவனாவுக்கு எம் நன்றி.

பி.குமாரதாஸ்,
மொரட்டுவ.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

படிப்பகம்

பொருளாதார முற்றுகை! மக்கள் எதிர்ப்பு!

தமிழ்க் கட்சிகளுக்கு நெருக்கடி நிலை

வன்னி மக்கள்மீதான பொருளாதார முற்றுகை தொடர்வது தமிழ்க் கட்சிகளை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

வன்னி மக்கள்மீதான பாதைத் தடைக்கு எதிராகவும், பொருாளாதார முற்றுகைக்கு எதிராகவும் தமிழ் மக்களிடையே நாடெங்கும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மாணவர்கள், மதகுருமார்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள் உட்பட பல்வேறு மக்கள் பகுதியினர் தாமாக முன்வந்து போராட்டங்கள், பிரார்த்தனைகள், உபவாசங்கள் என்பவற்றை மேற்கொண்டுள்ளனர்.

அரசாங்கமும், படையினரும் மக்களுக்கான பாதைத் திறப்புக்காக என்று தமது பாரிய படை நடவடிக்கைகளை பிரசாரப் படுத்தினார்கள். தற்போது ஏற்கனவே உள்ள பாதையை மூடிவைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என்று கூறி அவர்களை ஒழிக்கவே அரச படைகள் போரிடுகின்றன. அப்படி

(நமது நிருபர்)

யிருக்க பாதைத் திறப்புக்காக புலிகளே பச்சைக்கொடி காட்ட வேண்டும் என்று வன்னிக்கான படை தளபதி கூறுவது பொருத்தமாக இல்லை என்று கண்டனங்கள் தோன்றியுள்ளன.

இந்நிலையில் அரசை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள் மீது என்றுமில்லாதளவு அதிருப்திகள் ஏற்பட்டுள்ளன.

முன்னர்போல ஜனாதிபதிக்கு தெரிவிப்பு, ஜனாதிபதியுடன் சந்திப்பு, அறிக்கை வெளியீடு என்று தமிழ்க் கட்சிகள் அரசியல் நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

வன்னிக்கு அரச அதிபர்களாக படை அதிகாரிகளை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. நேர்மையாக செயற்பட்டதாலும், தமது பகுதியில் உள்ள மக்களின் துயர்களை மறைக்காது வெளியிட்டதாலும் தமிழர்களான அரசாங்க அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை சிவில் அதிகாரிகளை வைத்து இராணுவ நிர்வாகம் நடைபெற்றது. இனி மேல் நேரடியாக இராணுவ அதிகாரிகளே நிர்வாகம் நடத்தப் போகிறார்கள்.

இனிமேலும் தாம் மௌனமாக இருந்தால், அடுத்துவரும் தேர்தல்களில் முற்றாக நிராகரிக்கப்படும் நிலைதான் ஏற்படுமோ என்று தற்போது தமிழ்க் கட்சிகள் யோசிக்கத் தொடங்கிவிட்டன.

பாராளுமன்றத்தில் வன்னி மக்களது நிலை குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்போவதாக புளொட் அறிவித்திருந்தது.

அதற்கு முன்னர் கொழும்பில் தமிழ் கட்சிகள் ஒன்றுகூடி ஜனாதிபதிக்கு கடிதம் தயாரித்து அனுப்பியிருந்தன.

இவையெல்லாம் வன்னி மக்கள்மீது தாமும் அக்கறை காட்டுவதாக மக்களை நம்பவைக்கும் மேலோட்டமான முயற்சிகள் என்றே விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நாடெங்கும் தமிழ் மக்கள் தாமாக முன்வந்து போராடத் தொடங்கியபின்னர், தற்போது காலம் கடந்த ஞானமாக தமிழ்க் கட்சிகள் மக்களுக்கு போக்கு காட்டுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

"கட்சிகள் முன்னால் செல்ல வேண்டும். மக்கள் அவற்றின் பின்னால் செல்ல வேண்டும். இங்கு மக்கள்தான் முன்னால் நிற்கிறார்கள். எனவே அரசியல் கட்சிகள் என்று கூறப்படும் தகுதியை இக் கட்சிகள் இழந்துவிட்டன" என்றும் விமர்சகர்கள் கூறியுள்ளனர். ■

அமைச்சர்கள் வெளியிட்ட தகவல்கள்

கூட்டணி வட்டாரம் சங்கடம்

கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வத்தின் மறைவின் பின்னர் அவரது செயற்பாடுகள் பற்றி அமைச்சர்கள் பல தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

நீலனைக் கௌரவிப்பதற்காகவும் தமக்கு அவர் ஆற்றிய சேவைகளை நினைவுகூரவுமே அமைச்சர்கள் அத் தகவல்களை வெளியிட்டனர்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையை சரியென்று ஆதரித்தவர் நீலன் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கூறியிருந்தார்.

இலங்கையின் வெளிவிவகார கொள்கையை முன்னெடுக்க நீலன் முக்கிய ஆலோசனைகளை வழங்கியதாக வெளிநாட்டமைச்சர் கூறியிருக்கிறார்.

நீலன் உயிரோடு இருந்தவரை தன்னை அரசோடு இணக்கம் உள்ளவராக தமிழ் மக்களிடம் வெளிப்படுத்தவில்லை. பொதி உருவாக்கத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றே கூட்டணி தலைவர்களும் கூறிவந்தனர். இந்நிலையில் நீலன் பற்றி அரச தரப்பு கூறியுள்ள விபரங்கள் கூட்டணி வட்டாரத்தை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

"மறுக்கவும் முடியாமல், ஏற்கவும் முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறோம்" என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். ●

மூவர் பலி

புலிகள் தண்டனை

யாழ்ப்பாணம் நல்லூரில் சங்கிலியன் வீதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஓடியோ, வீடியோ மற்றும் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை நடத்திவந்த மார்க்கண்டு லோகேஸ்வரன் (41) என்பவரே கொல்லப்பட்டார்.

கடந்த வருடம் சங்கிலியன் வீதியில் இரு புலிகள் படையினரால் கொல்லப்பட்டனர். இவர்கள் அங்கு தங்கியிருந்தது பற்றி மார்க்கண்டு லோகேஸ்வரனே தகவல் கொடுத்ததாக புலிகள் அறிந்தனராம்.

தன்மீது புலிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது என்று அறிந்து லோகேஸ்வரனும் கவனமாகவே நடமாடியுள்ளார்.

நீண்டகாலமாகையால் அவரது கவனம் குறைந்திருந்தது. சம்பவதினம் இவர் வீட்டுக்குச் செல்வதை அவதானித்த புலிகள், அங்கு சென்று சுட்டுக் கொன்றுள்ளனர்.

02.08.99 அன்று மட்டக்களப்பு கன்னங்குடாவிலும் இரண்டுபேருக்கு புலிகள் மரண தண்டனை வழங்கியுள்ளனர். குதவராசா (28) வி.சிதம்பரப்பிள்ளை (49) ஆகியோருக்கே தண்டனை வழங்கப்பட்டது.

படையினருக்கு தகவல்கள் கொடுத்ததாக ஆறு மாதத்தின் முன்னர் இவர்கள் புலிகளால் கொண்டு செல்லப்பட்டனர். தற்போதே தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

யார் அந்தக் கரும்புலி

விசாரணையாளர்கள் திணறல்

கூட்டணி பா.உ. நீலன் திருச்செல்வம் மீதான தாக்குதலில் பலியான கரும்புலி யார் என்பது இன்னமும் விசாரணையாளர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர் என்றும் விடுதி ஒன்றில் தங்கியிருந்தவர் என்றும் கூறப்படுவது ஊகம்தான். அத் தகவல்கள் தெரியுமானால் தங்கியிருந்தவர் யார் என்பதையும் கண்டுபிடித்திருப்பார்கள்.

மட்டக்களப்பில் ராசிக் மீதான தாக்குதலில் ஈடுபட்ட கரும்புலி யார் என்பதையும் பொலிசார் கண்டுபிடிக்கவில்லை. ஜெயந்தன் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் அரசப்பனே பலியான கரும்புலி என்று புலிகள்தான் அறிவித்தனர்.

நீலனை தாக்கிய கரும்புலி அடையாள அட்டையையோ, தன்னை இனம் காட்டக் கூடிய வேறு தடயங்கள் எதனையுமோ கொண்டு செல்லவில்லை.

நீலனது வாகனம் அவரது வீட்டிலிருந்து புறப்பட்ட தகவல் அறிந்த பின்னரே கரும்புலி தாக்குதல் நடைபெறும் பகுதிக்கு கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளார்.

நீலனது வீட்டுக்கு அருகேயும் புலிகள் நின்று அவதானித்தே கரும்புலிக்கும், அவரை குறிப்பிட்ட இடத்தில் கொண்டுவந்து சேர்ப்பவருக்கும் தகவல் கொடுத்துள்ளனர். செல்லிடப்பேசி மூலம் தகவல் பறந்துள்ளது.

கரும் புலியை இறக்கிவிட்டவர் தாக்குதல் முடியும் வரை குறிப்பிட்ட பகுதியில் நின்று அவதானித்துவிட்டே சென்றிருக்கலாம் என்று ஊகங்கள் கூறப்படுகின்றன. ●

நீலன் செய்திருந்த முடிவு

கரும்புலித் தாக்குதலில் பலியாகாது இருந்திருந்தால், இம் மாத இறுதிக்குள் குடும்பத்தோடு அமெரிக்கா செல்வதற்கு நீலன் திருச்செல்வம் திட்டமிட்டிருந்தாராம்.

கொழும்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரித்ததையடுத்தே சிலகாலம் அமெரிக்காவில் தங்கியிருக்க திட்டமிட்டாராம்.

அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழகத்தில் நிரந்தரமாக பணியாற்றுவதற்கான அனுமதியையும் சமீபத்தில் பெற்றுக்கொண்டார்.

வன்னியில் திட்டமிட்டபடி பரீட்சை

மாணவர் போராட்டத்திற்கு வெற்றி

வன்னிக்கான பொதுமக்களது போக்குவரத்து பாதையை படையினர் மூடி வைத்துள்ளனர்.

புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் ஊடாக பாதையைத் திறக்குமாறு படையினர் கோரி வருகின்றனர்.

இந்நிலையில் வன்னிக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுமா என்பது கேள்விக் குறியானது.

வன்னியில் பரீட்சை நடத்துமாறு கோரி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் பரவலான போராட்டங்களில் ஈடுபட்டனர். வன்னியிலும் மாணவர் போராட்டங்கள் நடந்தன.

"தன்னியல்பாக மாணவர்கள் நடத்திய இப் போராட்டங்கள்தான் அரசுக்கு அழுத்தம் கொடுத்தன. வன்னியில் பரீட்சை" நடத்த காரணமாக இருந்தன என்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் இணைப்பதிகாரி பொன். சபாபதி கூறியுள்ளார்.

மாணவர்களது போராட்டத்தின் பின்னர்தான் பரீட்சை நடத்தும் சூழ்நிலை தோன்றியது என்றும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு எதிர்ப்பு!

பாதுகாப்பும், தமிழ்– முஸ்லிம் உறவும் தீர்வில் வேண்டும்!

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் முஸ்லிம் மக்களுக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் அல்லது சந்திரிக்கா அரசினால் முன் வைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ.ல.மு.காவினால் கூறப்படும் தென் கிழக்கு முஸ்லிம் மாகாணக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வடக்கு-கிழக்கு தழுவிய போராட்டத்திற்கான அமைப்பொன்று முஸ்லிம் காங்கிரஸின் பிறப்பிடமான காத்தான்குடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தென் கிழக்கு என்ற தீர்வுக்கு எதிராக வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரசியல் நடுநிலையாளர்கள், புத்திஜீவிகள் போன்றோரால் துவங்கப்பட்டுள்ள இவ்வமைப்பினர் கடந்த 01.08.99 அன்று "தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலமும்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கையும் பின்னர் பத்திரிகையாளர் மாநாட்டையும் நடாத்தினர்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தென் கிழக்கு மாகாணக் கோரிக்கை தென்கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற ஒட்டுமொத்தமான வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பாக அமையாது. மாறாக வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களை அப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களிடமிருந்து மேலும் பிரித்துப் பிளவுகளை ஏற்படுத்தும்.

இதன் காரணமாக ஸ்ரீ.ல.மு.கா. இந்தத் தீர்வுத்திட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். அத்துடன் தமிழ்-முஸ்லிம் சமூகங்களை இணைத்து; கூடிய பாதுகாப்புடன் கௌரவமாக வாழக்கூடிய தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்.

சமூகப் பாதுகாப்பொன்றை வழங்காத தென்கிழக்கு முஸ்லிம் மாகாணக் கோரிக்கையைக் கைவிட்டு வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் இரு சமூகங்களையும் கூறுபோடாத நிரந்தரத் தீர்வொன்றுக்கான கோரிக்கைகளை ஸ்ரீ.ல.மு.கா. முன் வைக்க வேண்டும்.

தற்போதுள்ள தென்கிழக்கு முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை வாபஸ் பெற வேண்டும் என்ற வெகுஜனப் போராட்டத்தை நாம் நடாத்தவுள்ளோம். இது விடயமாக எமது போராட்டம் யாழ்ப்பாணம், மன்னார், திருக்கோணமலை என்று விரிவுபடுத்தப்படும்!" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

பேச்சு என்பது புரளி

போர் ஓய்வும் நடக்காது

இலங்கை அரசாங்கம் புலிகளோடு பேசுவதற்கு முற்படுவதாகவும் எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் பேச்சுக்கள் நடக்கக் கூடும் என்றும் புரளிகள் கிளம்பியுள்ளன.

தேர்தல் வெற்றிக்காக போர் வெற்றிகளையே தற்போதைய அரசாங்கம் நம்பியிருக்கிறது என்ற உண்மைகளை மூடி மறைக்கவே இவ்வாறான புரளிகள் கிளப்பப்படுவதாக தெரிகிறது. எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர் அப்படியொரு யோசனை அரசுக்கும் அறவே கிடையாது.

இலங்கை அரசாங்கத்தோடு நேரடியாக பேச்சு நடத்த புலிகள் முன்வரப்போவதில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாகவே பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று புலிகள் முன்னரே அறிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி, தேர்தல்களை சுலபமாக நடத்துவதற்காக போர் ஓய்வு ஒன்றை அரசு விரும்பினால்கூட புலிகள் அதற்கு இணங்கமாட்டார்கள்.

அவ்வாறு செய்வது அரசாங்கம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள இடமளித்துவிடும் என்பதாலேயே புலிகள் இணங்கமாட்டார்கள்.

சந்திரிக்கா அரசாங்கம்தான் இதுவரை கால அரசாங்கங்களில் மிக மோசமானது என்று புலிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் அரசாங்கத்திற்குத் தோதான உத்திகளுக்கு புலிகள் இணங்கப் போவதில்லை, என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதி சபைக்கு வராது!

வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

"**அ**ரசியல் தீர்வு தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய பொதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக சில அரச வட்டாரங்களிலிருந்து வதந்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அரசாங்கம் பொதியை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரும் என்று உறுதியாகக் கூறமுடியாது. அரசாங்கம் இதற்கான திட்டவட்டமான திகதியைக் கூட அறிவிக்கவில்லை!"

இவ்வாறு ஆளும் பொதுஜன முன்னணியில் அங்கம் வகிக்கும் நவலங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் வர்சுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அமைதிக்கான வழிமுறைகளை ஏற்படுத்தும் நோக்குடன் சில வர்த்தகப் பிரமுகர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் மக்களைப் போதுமான அளவு பிரதிநிதித்துவப் படுத்துவதாக எனக்குத் தோன்றவில்லை. இவர்களை அமைதிக்கான முயற்சிகளில் ஈடுபடும்படி மக்கள் அதிகாரம் எதுவும் வழங்கவுமில்லை.

வர்த்தகப் பிரமுகர்களைப் பொறுத்தமட்டில் இவர்கள் பொதுமக்களைச் சுரண்டிப் பிழைப்பவர்கள். இத்தகையோருக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரம் இல்லை!" என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி பேச்சாளரான கருணசேன கொடித்துவக்கு கருத்து வெளியிடுகையில், "தீர்வுப் பொதியை அரசாங்கம் எப்போதோ குப்பைத் தொட்டியில் வீசிவிட்டது. குப்பைத் தொட்டியிலிருந்து அதனை மீட்டெடுக்க அரசாங்கம் முன்வருவதானால், அக்கட்சியின் சொந்த நலனுக்காகவே அவ்வாறு செய்கிறது. ஆளும் கட்சியினர் போதுமான அளவு நாட்டு மக்களை ஏமாற்றி விட்டனர்!" என்று கூறினார். ●

கெடுபிடிகள் தளரவில்லை

கேட்பதற்கு நாதியில்லை

ஆகஸ்ட் முதலாம் திகதியுடன் மன்னார் மாவட்டத்தில் பாஸ் நடைமுறை முற்று முழுதாக நீக்கப்பட்டு விடும் என எதிர்பார்த்திருந்த மன்னார் மக்கள் தற்போது இலவு காத்த கிளிகளாகிவிட்டனர்.

பழைய பாஸ் நடைமுறையிலிருந்து அண்மையிலும் மாற்றம் ஏற்படவில்லை. மேலும் பல இறுக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கெடுபிடிகள் இன்னும் தீவிரமடைந்துள்ளன.

மன்னார் மக்கள் அனைவருக்கும் என்னதான் பாதகம் ஏற்பட்டாலும், எடுத்துக் கேட்க எவருமின்றி அரசியல் அநாதைகளாகி விட்டதாக மக்கள் அதிருப்தியுடன் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புத் தரப்பினரும் தாம் விரும்பியவாறு நாளுக்கொரு சட்டத்தை அமுல்படுத்துகின்றனர். அரச அதிகாரிகளோ, பொது நல அமைப்புக்களோ துணிந்து கேட்க அஞ்சுகின்றனர் என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு நடைமுறை என்ற பெயரில் மக்களை வாட்டி வதைக்கும் பாஸ் கொடுமைகள் குறித்து மன்னார் மாவட்ட நீதிக்கான அமைப்பு சர்வதேச மன்னிப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர ஆலோசித்து வருவதுடன் மனிதவுரிமைகள் பணியகத்திற்கும் அறிவித்துள்ளது.

மன்னாரில் மீள்குடியேறி வாழும் முஸ்லிம்களில் சிலருக்கு வன்னி மக்களுக்கான பயண நடைமுறையினை பின்பற்றுமாறு பாதுகாப்புத் தரப்பால் கூறப்படுகிறது. ●

இருவர் ஓட்டம்

புலிகள் சோதனை!

மட்டக்களப்பு-தாந்தாமலை ஆலயத்திருவிழா இம்முறையும வெகு சிறப்பாக நடைபெற்றது. 28.07.1999 அன்று இடம்பெற்ற கடைசி நாள் திருவிழாவில் வழக்கத்திற்கு மாறாக அதிக எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் குழுமியிருந்தார்கள்.

களுவாஞ்சிக்குடி பஸ் டிப்போ போக்குவரத்துச் சேவைகளை நடாத்தியது. புலிகளும் பஸ் சேவை நடாத்தினர். (புலிகள் சில காலங்களுக்கு முன்னர் கைப்பற்றிய திருமலை டிப்போவிற்குச் சொந்தமான லேலண்ட் பஸ் பயன்படுத்தப்பட்டது.)

இது ஒருபுறமிருக்க படையினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ் இயக்க மொன்றைச் சேர்ந்த நான்கு பேர் மக்களோடு மக்களாக கோயிலுக்குள் நுழைந்திருப்பதை அறிந்த புலிகள், அவர்களைக் கைது செய்து தடுத்து வைத்திருந்த வேளை இருவர் மக்கள் கூட்டத்தின் நடுவே தப்பியோடி விட்டனர்.

அவர்களைக் கைது செய்வதற்காக ஆலயத்தில் திரண்டிருந்த அத்தனை பொது மக்களையும் புலிகள் சோதனையிட்டார்கள்.

வாய்க்குள் சூடு

வவுனியாவில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தாண்டிக்குளம் பகுதியில் இரண்டுபேர்மீது துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. முகிலன் ராசேந்திரன் (24) உங்கிரியான் (47) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

முகிலன் முன்னர் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்தவர். பின்னர் இயக்கத்தை விட்டு விலகி திருமணம் செய்து கொண்டார்.

படையினருக்கு இவர் ஒத்துழைப்பு வழங்கி வந்திருக்கிறார். இதனை அறிந்த புலிகள் 29.09.99 அன்று இரவு பத்து மணியளவில் வீடு தேடிச் சென்றனர். தூங்கிக் கொண்டிருந்த இவரை தட்டி எழுப்பி வாய்க்குள் பிஸ்டலை வைத்து சுட்டுள்ளனர். அது வாயின் ஒரு பக்கமாக பட்டதால் இவர் உயிர்தப்பினார்.

முகிலனின் மாமனாரான உங்கிரியான் மருமகனுக்காக வாதிட்டபோது சுடப்பட்டார்.

தற்போது இருவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். ●

துப்பாக்கிகள் மாயம்!

மட்டக்களப்பு-அரசடி பார்வீதிச் சந்தியிலுள்ள பொலிஸ் காவல் சாவடியில் இருந்து T-56 ரக துப்பாக்கிகள் இரண்டு மாயமாய் மறைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

சம்பந்தப்பட்ட துப்பாக்கிகளைக் கையாண்ட பொலிஸாரின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ள்தோடு இரகசியப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இதுவரை துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்படவுமில்லை யாரும் கைது செய்யப்படவுமில்லை.

ஏற்கனவே கடமையிலிருந்த பொலிஸ் குழுவொன்று கடமை முடித்து மற்றைய குழு கடமைப்பொறுப்பேற்ற தறுவாயிலேயே இந்தத் துப்பாக்கிகள் காணாமல் போயிருப்பது தெரியவந்திருக்கிறது.

இந்த பொலிஸ் காவல் நிலையத்தைச் சூழவுள்ள பொதுமக்களின் வீடுகளில் 01.08.1999 அன்று மாலை தீவிரமான தேடுதல்கள் இடம்பெற்றன. எவருமே உள்ளே செல்லவோ வெளியேறவோ முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தி சோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆண், பெண் பொலிஸாரே சோதனையிலும், தேடுதலிலும் ஈடுபட்டனர். ■

படிப்பகம்

திருட்டுக் கும்பல் மாட்டியது!

சூதாடும்போது மடக்கப்பட்டனர்

(நமது நிருபர்)

ஓட்டமாவடி, வாழைச்சேனை போன்ற பகுதிகளில் தமது கைவரிசையைக் காட்டி கன கச்சிதமாகத் திருட்டுச் செயல்களில் ஈடுபட்டு வந்த கும்பலொன்று வகையாக மாட்டிக்கொண்டது.

வாழைச்சேனையில் எதிரும் புதிருமாக தமிழ்-முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான கடைகள் உள்ளன. பகலில் சனப் புழக்கம் இருந்தாலும் இப்பகுதியில் அவ்வப்போது மோதல்கள் வெடிப்பதால் பதற்றமாகக் காணப்படும்.

இரவு வேளையில் பொதுமக்கள் எவருமே நடமாடுவதில்லை. மோதிக் கொள்ளும் ஆயுத பாணிகளின் நடமாட்டமே காணப்படும்.

அப்படியிருந்தும் கடைகளில் திருடப்படுவதுண்டு. இதனால் பொதுமக்களின் சந்தேகம் ஆயுத பாணிகளான சண்டையிடும் சகல தரப்பார் மீதும் விழுந்தது. சீருடையினரோ அல்லது அவர்களுக்கு எதிரான தரப்பினரோதான் இக்காரியங்களை ஒருவர் மீது பழி போடுவதற்காகச் செய்கின்றனர் என்ற சந்தேகம் வலுத்தது.

ஆயினும் கடந்த வாரம் உண்மை புலப்பட்டது. கடைசியாக பலசரக்கு மொத்த விற்பனவுக் கடையொன்றும், துணிக்கடையொன்றும் துணிகரமாகக் கொள்ளையிடப்பட்டன.

திருடப்பட்ட புடவைத் தொகுதியில் இருந்த ரீ-சேர்ட் ஒன்றுதான் திருட்டுக் கும்பலை மாட்டுவித்தது. திருட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் அதை அணிந்தபோது அடையாளம் கண்டு கொண்ட கடைச் சிப்பந்தி, உடனடியாகப் பொலிஸுக்குத் தகவல் கொடுத்ததும், அதே குழுவைச் சேர்ந்தவர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கைது செய்தனர்.

இதுவரையில் மொத்தம் ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவர் தலைமறைவாகியுள்ளனர். இவர்கள் ஊருக்கு ஊர் பெரியதொரு சுழற்சிக் குழுவாக இயங்குவது தெரியவருகிறது. விசாரணைகள் தொடர்கின்றன. கைதான ஆறுபேரும் ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள்.

இந்தத் திருட்டு ஆசாமிகள் தமிழ்-முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் வண்ணமும் தமது திருட்டுத் திட்டங்களைத் தீட்டியிருந்தார்கள் என்று அப்பகுதித் தமிழ்- முஸ்லிம் மக்கள் கருதுகிறார்கள். ■

'பனிப்பாறைகளும் சுடுகின்றன'

சுவிஸில் வெளியீடு!

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சனைகளை கருப்பொருளாகக் கொண்டு, சுவிஸில் வசிக்கும் கல்லாறு சதீஸ் எழுதிய 18 சிறுகதைகளைக் கொண்ட 'பனிப்பாறைகளும் சுடுகின்றன' என்ற நூலின் வெளியீட்டுவிழா அண்மையில் சுவிஸ்-லுசேர்ணில் வெளியிடப்பட்டது.

சென்னை மணிமேகலைப் பிரசுராலயத்தின் வெளியீடான இந்நூலின் வெளியீட்டு விழாவுக்கு மணிமேகலைப் பிரசுராலயப் பொறுப்பாளர் ரவி தமிழ்வாணன் தலைமை தாங்கினார்.

டாக்டர் இந்திரகுமார், மதி கணபதிப்பிள்ளை, 'வணக்கம்' ஆசிரியர் பொன்ராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ரவி தமிழ்வாணன் பேசுகையில், இந்நூல் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெறும் தகுதியைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார். ■

தமிழுக்கு இடமில்லை

(திருமலை நிருபர்)

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் பற்றுச்சீட்டுகளில் மருந்துக்கும் தமிழ் இல்லை என்றாகி விட்டது. தமிழ் பேசும் மக்களை நம்பி நடைபெறும் இந்தக் கம்பனியே தமிழுக்கு இருட்டடிப்புச் செய்தால் பெரும்பான்மையோர் தமிழுக்கு இடங்கொடுக்கவில்லை என அழுவதில் என்ன நியாயம் இருக்கிறது. அரசு தமிழ் மொழியைப் புறக்கணிக்கிறது என்று கூற எங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? என்று கேட்கிறார்கள் பயணிகள்.

கல்முனை, திருக்கோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் ஆசனப் பதிவு செய்யச் செல்பவருக்கு ஆங்கிலம் சிங்களம் ஆகிய மொழிகளில் விளக்கங்கள் கொண்ட பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது. பற்றுச்சீட்டை எழுதுபவர்கள் கூட தத்தித் தத்தியாவது ஆங்கிலத்தில்தான் நிரப்புவேன் என்று நேர்த்தி வைத்துக்கொண்டவர்கள் போல் செயல்படுவது விசனத்தை ஏற்படுத்துகிறது.

விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி

ஸ்ரீ வள்ளி அன்னதான மடம் 57சி புதிய நகரம் பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் அமைத்துள்ளோம். உணவு இலவசம். விரும்பியோர் மரக்கறி முதலியவை கொடுக்கலாம்.

சிவப்பிரகாசம் 448352

முத்திரை விற்பனைக்கு

வெளிநாட்டு அழகிய பலவர்ண முத்திரைகள் 50 வகை ரூபா 70/=; 100 வகை 160/=; 200 வகை 350/=; 300 வகை 600/=; தபால் செலவு மேலதிகம்.

Y.L.MOHAMED NAYIEM
A60 KIRIGALA ROAD
MAWANELLA.

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

SHAKTHY SARAVANA,
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை

மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் ஆகஸ்ட் 22 முதல் 29 வரை சந்திக்கலாம்

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

கல்முனை செப்டெம்பர் 5,6ம் திகதிகளில் சந்திக்கலாம்

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

வவுனியாவில் ஆகஸ்ட் 7, 8ம் திகதிகளில் சந்திக்கலாம்

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கடிதத்தொடர்பு:- **Resident T.P. 065-24019**
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

2வது பிறந்த நாள் வாழ்த்து

06.08.99

ஏழாலையைச் சேர்ந்த சுகாகாந்தன்-தமயந்தி தம்பதியினரின் செல்வப்புதல்வன் **தருக்ஷன்** தனது 2வது பிறந்ததினத்தை 06.08.1999 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டி, அப்பப்பா, அம்மம்மா பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார்,

தருக்ஷன் சுகாகாந்தன்

அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் துர்க்கை அம்மன் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- சுகாகாந்தன்.
538/G6-Aluthmawatha Road
Colombo-15.

சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளி நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு - N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P 2974924,
HP 97546610. HP 97651074

Nursery Teacher Training Course (NTTC)

முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி

ஆறு மாத கால தபால் மூலக் கல்வி

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் தபால் மூலம் கற்பதன் மூலம் ஆறுமாத கற்கை நெறியை பூர்த்தி செய்வதோடு LONDON பட்டதாரியின் DIPLOMA IN NURSERY TEACHER TRAINING சான்றிதழையும், சுயமாக தொழில் செய்யும் தகுதியையும் பெறமுடியும்.

விபரங்களுக்குத் தொடர்புகொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, COLOMBO
CENTRAL SUPER MARKET COMPLEX.
P.O. BOX NO:162, COLOMBO - 11 TELE: 434770.

திருகோணமலை

உப்புவெளி - 3 ஆம் கட்டையில்

காணி விற்பனைக்கு உண்டு

திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியில் கண்ணாடித் தொழிற்சாலைக்கு முன்பக்கமாக குடியிருப்புக்கு உகந்த சமதரையான வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பேர்ச் விலை ரூபா. **35,000/=** (முப்பத்தையாயிரம்).

சோலையடியில் (ஜெயந்தி கொம்மியூனிகேஷனுக்கு பின்புரமாக) அதாவது கடற்கரைப் பக்கமாகவும், சீலோட் ஹோட்டலுக்கு முன்பக்கமாகவும், நல்ல காற்றோட்டமான சுற்றாடலில், குடியிருப்புக்குப் பொருத்தமான வீடுகள் அமைக்க உகந்த, சமதரையான வெற்றுக்காணித் துண்டுகளும் விற்பனைக்கு உண்டு. ஒரு பேர்ச் விலை ரூபா. **25,000/=** (இருபத்தையாயிரம்).

நித்தியபுரியில் திருகோனமலை - நிலாவெளி பிரதான வீதிக்கு மிக அருகாமையில் குடியிருப்புக்கு ஏற்ற காணித்துண்டு விற்பனைக்கு உண்டு. ஒரு பேர்ச் விலை ரூபா. **40,000/=** (நாற்பதாயிரம்).

மேலும் விபரங்கள் நேரில்:
ஆர். எம். துரை - போன்: **026-21846** அல்லது **026-20872**

GRAYON

கொழும்பு மாநகரில் பாதுகாப்பானதும் கண்ணியமானதுமான தங்குமிடவசதிகளுக்கு

THAMPI'S BOARDING HOUSE
177, 2/1, 3/1, OLD MOOR STREET,COLOMBO-12.
TEL:341272-3-4,343125 (AUTO LINES)

வட மாகாணத்திலுள்ள உங்கள் உறவினர்களுக்கு இலவசமாக தகவல்களை அனுப்பி தொடர்பு கொள்வதற்கும் மிக மலிவு விலைகளில் தொலைப்பேசித் தொடர்புகளை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்வதற்கும்

THAMPI COMMUNICATIONS
90, KANTHAPPASEGARAM ROAD, JAFFNA.(NEAR SAMPANTHAN CLINIC)
TEL : 021-2504, 2040, 2823 FAX : 0094-21-2040
177,1/3, Old Moor Street, Colombo -12.
Tel : 343125 (Auto Lines) Fax :337465, E-mail: thampi@sltnet.lk

சகல நாடுகளுக்குமான விமான டிக்கட்டுக்களை -மலிவு விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு

THAMPI AIR TOURS (PTE) LTD.

தொலைத்தொடர்பு நிறுவன உரிமையாளர்களுக்கு- சகல தொடர்புகளையும் பதிவு செய்து இலக்கம், கட்டணம், திகதி, நேரம் முதலியவற்றுடன் கடந்த 250 நாட்களுக்குரிய தகவல்களுடனான, பலதரப்பட்ட PCO MONITORS எம்மிடம் மலிவு விலைகளில் உண்டு

100 ACCOUNTS CAN BE MAINTAINED, WARRANTY & AFTER - SALE SERVICE, APPROVED BY FORIEGN & SRI LANKA TELECOM AUTHORITIES.

THAMPI HOLDINGS (PTE) LTD.
"THAMPI BUILDING"
177, OLD MOOR STREET, COLOMBO-12.
Tel: 343125 (AUTO LINES) FAX: 337465 E-mail: thampi@sltnet.lk

அழகிய தோற்றத்தை உருவாக்கும்

சந்தனாலேப்ப

குளிர்ச்சியைத் தரும் இயற்கை மூலிகைத் தைலம்

சந்தனத் தைலம், குங்குமப்பட்டை, மஞ்சள் கொடி, கஸ்தூரி மஞ்சள் உட்பட (மிருதுவான) தேசிய மருந்து வகைகள் பலவற்றைப் பயன்படுத்தித் தயாரித்த சந்தனாலேப்ப பூசுவதன் மூலம் முகப்பரு, மச்சம், தழும்பு, தேமல, உண்ணி, பித்தவெடிப்பு, தோல் சுருக்கம் முதலான சரும வியாதிகளுக்கும் வெயிலில் பிரயாசைப்படுவதால் தோல் கருமையடைவதும் நீங்கி, சருமத்தை மிருதுவாக்கி, பிரகாசப்படுத்தி, மனங்கவர் எழில் முகமாக மாற்றி அமைக்கலாம். உடல் எழிலையும் பாதுகாக்கும்.

ஆண்களும் சவரம் செய்தபின் பூசுவதன் மூலம் பிளேட் விஷத்தை அகற்றி, கரடுமுரடான தன்மை உள்ள சருமத்தை மென்மையாக்கி-அடுத்த சவரத்தை எளிதாக்கும். கடற்தொழில் செய்யும் மீனவர்களது உதடு, வாய் வெடிப்புகளுக்கும் அருங்குணம் பெறலாம். சந்தனாலேப்ப உலகில் எங்கும் எக்கால நிலையிலும் வாழும் சகலருக்கும் அருங் செல்வமாகும்.

சந்தனாலேப்ப

விநியோகஸ்தர்
சஞ்ஜீவக்க தயாரிப்பு

சஞ்ஜீவக்க ஆயுர்வேத
தயாரிப்பு
152 சி, பாம்குறோவத்த
பத்தளகெதற, வெயன்கொட
தொலைபேசி இல: 033-87567
ஆயு/உற்/இல: 231

31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 17.09.1966

இறப்பு: 30.06.1999

காற்றில் கலந்தே
கண்மூடி துயில்பவனே!
மண்ணுலகம் உள்ளவரை
மறக்காது எம்நெஞ்சம்.

பிரிவால் துயருறும்:- அப்பா, அம்மா, சகோதரர்கள் துணைவியர் பிள்ளைகள், நண்பர்கள்.

கணபதிப்பிள்ளை பேரின்பராசா

வாழைச்சேனை

(பொலிஸ் உத்தியோகத்தர்-
பொலிஸ் நிலையம் வவுனியா)

தகவல்:- மனோகரன் (பொலிஸ்)
134 தேக்கவத்தை,கண்டிறோட்
வவுனியா.

மரண அறிவித்தலும், 3ம் நாள் நினைவாஞ்சலியும்

தோற்றம்: 08.01.1961

மறைவு: 09.07.1999

அமரர் திரு. சுப்பிரமணியம் பன்னீர்செல்வம் சிவபதமடைந்து விட்டார். இவர் யாழ் இராமநாதன் வீதியை பிறப்பிடமாகவும் பிரான்ஸில் 6 RUE BARON 95380 LOUVRES என்ற முகவரியை வசிப்பிடமாகக் கொண்டவரும் திரு.திருமதி சுப்பிரமணியம் பாக்கியம், அவர்களின் அருமைப் புதல்வனும் திரு.திருமதி பொன்னையா துரையம்மாவின் அன்பு

அமரர் திரு.சுப்பிரமணியம் பன்னீர் செல்வம்

மருமகனும், அருள்வதனியின் அன்புமிகு கணவரும் விவேக்ஸ்ஸன், சிவேயா (டாலி) சுவேக்ஸ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி கிருஷ்ணபேபி வரதராஜன், சாந்தி, மஞ்சு, கேதீஸ், மேகன், ஆகியோரின் சகோதரனும் திருமதி கந்தசாமி கமலா, இராசரத்தினம் உஷா, யோகரட்ணம் தேவபாலா, சற்குணராசா, விக்ரர், அன்ரன், விஜயன், சாந்தி, அருந்ததி, உஷா ஆகியோரின் மைத்துனரும், பிரதீபா, ஜெசிந்தா, சுபாஜினி ஆகியோரின் சகோதரனும், பேனாட் விஜிதா, கிருபாகரன் சுஜாதா, முரளி, கவிதா, சுவிதா, சுபீதர், சோபிதா ஆகியோரின் சித்தப்பாவும் அமலன், நிமலன், எஸ்தர், எட்வின், யெடீஸ்சன், ஹரீஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிருயைகளில் கலந்துகொண்டோருக்கும், 08.08.1999 நடைபெறும் 31ம் நாள் நினைவாஞ்சலியில் கலந்து கொள்வோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் குடும்பத்தினர்.

தொடர்புகள்
0603723755
0603330962
0145912259
0612444822

கொழும்பு விலாசம்
N.KANDASAMY
19/9 MOSQUE LANE
MUTHUWELLA MAWATHA, CO-15.

படிப்பகம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

புலிகளைக் கோபப்படுத்திய நீலனின் நகர்வுகள்

நாரதர்

கறுப்பு ஜூலைக்கு எங்கு குண்டுகள் வெடிக்குமோ என்று பாதுகாப்பு தரப்பு மிகவும் விழிப்பாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் படை முகாம்கள், வன்னியில் படை நிலைகள் யாவும் அதி உச்ச விழிப்பு நிலையில் இருந்தன.

கொழும்பில் சந்திக்கு சந்தி பாதுகாப்பு இறுக்கமாக்கப்பட்டிருந்தது. தீவிர தேடுதல்களில் பெருமளவானோர் அள்ளிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

வீதித் தடைகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு தோண்டித் துருவப்பட்டன.

ஒரு விதமாக, கறுப்பு ஜூலை மாதம் முடிவடையப்போகிறது என்று நினைத்து பாதுகாப்புத் தரப்பு பெருமூச்சுவிட நினைக்கையில் 29.07.99 அன்று காலையில் கரும்புலித் தாக்குதல் ஒன்று கொழும்பில் நடந்துவிட்டது.

அதுவும் சாதாரண பகுதியில் நடக்கவில்லை. மிக முக்கிய பிரமுகர்களது குடியிருப்புக்களும், நடமாட்டங்களும் உள்ளதால், மிக உச்ச பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு உள்ள பகுதியில்தான் தாக்குதல் நடந்திருக்கிறது.

கொழும்பு-07 றோஸ்மீட் பிளேஸ். கொழும்பின் மிக மிக உயர்தரமான பகுதி அது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வீட்டுக்கு அருகேதான் நீலன் திருச்செல்வத்தின் வீடும் இருக்கிறது.

அங்கிருந்து சற்றுத் தொலைவில் மற்றொரு உயர்தரப்பகுதியான கின்சி ரெறஸில் நீலனின் காரியாலயம் இருக்கிறது.

றோஸ்மீட் பிளேஸில் இருந்து பத்து நிமிடத்தில் கின்சி ரெறசுக்கு சென்றுவிடலாம்.

இதற்கு இடைப்பட்ட தூரத்தில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

29.07.99 அன்று காலை 9.05 மணிக்கு தனது இல்லத்தில் இருந்து, அலுவலகத்திற்கு புறப்பட்டுள்ளார் நீலன்.

புத்தம்புதிய நிசான்சனி காரில் பின் பக்கத்தில் இடது புறம் அவர் அமர்ந்து கொள்ள, சாரதியும், சாரதிக்கு அருகே சப்-இன்ஸ்பெக்டர் முஹமட் பாருக்கும் அமர்ந்து கொண்டனர்.

இவர்களுக்கு பின்னால் பாதுகாப்பு பிரிவினரின் வாகனம் பாதுகாப்புக்கு சென்றது. அதில் நான்குபேர் ஆயுதங்களுடன் இருந்தனர்.

நீலன் எம்.பியாக இருந்தாலும் ஒரு அமைச்சருக்குரிய பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த வாகனத் தொடர் றோஸ்மீட் பிளேஸில் உள்ள காவலரணைத் தாண்டியது. அதன் பின்னர் றோஸ்மீட் பிளேசுக்கும், கின்ஸி வீதிக்கும் இடையிலான சந்தியை கடந்துதான் கின்ஸி ரெறசுக்கு செல்ல வேண்டும்.

சந்தியை அடைந்துவிட்டால் மேலும் ஐந்து நிமிடத்தில் கின்சிரெறஸ் அலுவலகத்தை அடைந்துவிடலாம்.

சந்தியில் சிறு திருப்பம் ஒன்று இருக்கிறது. இடது புறம் பெரும் சுவரும் அதனையொட்டி நடைபாதையும் இருக்கிறது.

வாகன நெரிசல் இருந்தமையால் சந்திக்கு அருகில் மெதுவாகத்தான் கார் சென்றது. அப்படியே திருப்பத்தில் மேலும் மெதுவாக திரும்பியபோதுதான், இடதுபக்க நடைபாதையில் இருந்து கரும்புலி காரை நோக்கி விரைந்திருக்கிறார்.

பின்னால் வாகனத்தில் வந்தவர்களுக்கு கரும்புலி காரை நோக்கி செல்வது முதலில் தெரியவில்லை. ஏனெனில் திருப்பம் காரணமாக பார்வை அவர்மீது படவில்லை.

காரை மிக நெருங்கிய போதுதான் பின்னால் வாகனத்தில் இருந்த பாதுகாப்பு பிரிவினர் கரும்புலியைக் கண்டுள்ளனர்.

அவரது போக்கும், பரபரப்பும் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதை உணர்த்தியதால் 'அடேய், அடேய் என்று குரல் கொடுத்தபடி, 'சூட் சூட்' என்றும் கத்தியிருக்கின்றனர்.

ஆனால் துப்பாக்கியை எடுப்பதற்கோ, சுடுவதற்கோ போதிய அவகாசமே இருக்கவில்லை. மிக அருகில் சுடக்கூடிய தூரத்தில்தான் கரும்புலி இருந்தார். இடையே வேறு வாகனங்களும் இல்லை. சுட முடிந்திருந்தால் தாராளமாக சுட்டிருக்கலாம்.

ஆனால் அவ்வாறு சுடுவார்கள் என்று தெரிந்துதான் அதற்கேற்ற துரிதத்தில் கரும்புலி செயற்பட்டுள்ளார்.

'சூட்சூட்' என்று சொல்லி வாய் மூடுவதற்கிடையே, கரும்புலித் தாக்குதலின் குணடோசை கேட்பதற்கும் சரியாக இருந்தது. பின்னால் பாதுகாப்பாக வந்தவர்களும் குண்டு அதிர்வில் வாகனத்திற்குள் சரிந்துவிட்டனர்.

காரில் நீலன் அன்று அமர்ந்திருந்தது காரின் இடது புறம்தான். ஆனால் அவர் வலதுபுறம் அமர்ந்திருந்தாலும் பலியாகியே இருப்பார்.

நீலன் எந்தப் பக்கம் அமர்ந்திருக்கிறார் என்று பார்த்து கரும்புலி காரை நெருங்கவில்லை. அந்த சந்தித் திருப்பத்தில் இடதுபுறம் இருந்துதான் காரை விரைவாக நெருங்க முடியும்.

வலது புறம் இருந்து நெருங்கினால் தெருவை கடந்து, மறுபக்க .வாகனங்களை தாண்டி ஓடிவர வேண்டும். அதற்குள் கார் சந்தியை விட்டு நகர்ந்து விடலாம். அல்லது பின்னால் வாகனத்தில் உள்ள பாதுகாப்பு பிரிவினர் துப்பாக்கிச் சூடு நடத்தி தடுத்து விடலாம்.

எனவேதான் கார் செல்லும் பக்கமாக உள்ள இடது புறத்தால் காரை நெருங்கியுள்ளார்.

வாகன நெரிசல் இல்லாவிட்டால்கூட திருப்பத்தில் கார் மெதுவாகவே சென்றிருக்கும்.

குறிப்பிட்ட நடவடிக்கையும் ஈடுபட்ட கரும்புலி மிக நிதானமாக செயற்பட்டுள்ளார். காரின் பின்பக்க கதவை சரியாக நெருங்கி நின்றுதான் வெடித்திருக்கிறார்.

நீலன் கதவின் அருகில் இருந்தமையால் குண்டின் முழுத் தாக்கத்தையும் நீலனின் உடலே எதிர்கொண்டுள்ளது.

அதன் காரணமாகவே இடது புறத்தில் இருந்த நீலனின் உடல் வலதுபுற கதவையும் தள்ளிக் கொண்டு வெளியே விழுந்தது. காரின் உட்பக்கத்தில் பின்புறப் பகுதியிலேயே அதிக அதிர்வையும் சேதத்தையும் ஏற்படுத்தியது.

கரும்புலி கதவோடு நெருங்கி நிற்காது சற்றுத் தள்ளி நின்ற வெடித் திருந்தால் குண்டு சிதறல்கள் பரவலாக பாய்ந்திருக்கும்.

அப்படி பரவலாக விரிவடைந்து பாய்ந்திருக்குமாயின் நீலன் மட்டுமன்றி, காரின் முன் ஆசனத்தில் இருந்த இருவரும் பலியாகி இருப்பர்.

காரின் கதவோடு நெருங்கி நின்று வெடித்தமையால் குண்டு தாக்கம் விரிவடையத் தேவையான இடைவெளி இருக்கவில்லை. முழுத்தாக்கமும், கதவின்மீதும், நீலன் மீதுமே செலுத்தப்பட்டன.

'சாரதியும், சப்-இன்ஸ்பெக்டரும் அதிர்ச்சியி னாலும், அதிர்வில் கார் கண்ணாடிகள் உடைந்து பறந்தமை யாலுமே காயமடைந்தனர். மேலும் பலர் காயமடைந்ததும் குண்டின் அதிர்வினால்தான்.

கரும் புலி காரின் கதவைத் திறந்தார், நீலனை கட்டிப் பிடித்தார் என்பதெல்லாம் சரியான தகவல்கள் அல்ல. கதவைத் திறக்க தாமதிக்க நேரம் கிடையாது. அதுதவிர, கரும் புலி குண்டை வெடிக்க வைக்க சட்டைக்குள் கை வைத்ததை பின்னால் வந்த பாதுகாப்பு தரப்பினர் கண்டுமுள்ளனர்.

காருக்குள் புகுந்து வெடித்திருந்தால் முன் ஆசனத்தில் இருந்தோரும் சிதறியிருப்பர்.

எத்தனை பாதுகாப்பு இருந்தாலும் அதில் ஒரு துவாரததை கண்டுபிடித்து கரும்புலிகள் புகுந்து தாக்கக்கூடியவர்கள் என பதை இத்தாக்குதலும் உறுதிப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் ராசிக் மீதான தாக்குதலை அடுத்து தமிழ்க் கட்சிகள்மீதும் கரும்புலித் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என்பதை முரசு கோடிட்டுக் காட்டியிருந்தது.

உயர் பாதுகாப்பு பகுதிகளில் தாக்குதல்களில் இறங்கும்போது மோதல்கள் ஏற்படலாம். அந்த மோதல்களின்போது இலக்குகள் தப்பி விடலாம். தவிர பல புலிகளை பலி கொடுக்க வேண்டியும் ஏற்படும்.

எனவே பாதுகாப்பு நிறைந்த பகுதிகளில் குறைந்த உயிர்ப்பலியோடு தம் இலக்கை அழிக்க புலிகள் பயன்படுத்தும் வழிமுறையே கரும்புலித் தாக்குதல்.

நீலன்மீது புலிகளது குழு ஒன்று தாக்குதல் நடத்த வந்திருந்தால், நீலனின் பாதுகாவலர்களோடு மோதல் ஏற்பட்டிருக்கும்.

மோதலின் பின்னர் தப்பிச் செல்வது கடினம். சுற்றி வளைக்கப்படலாம். அதனால் குறைந்தது நான்கு ஐந்து புலிகளாவது பலியாக நேரலாம்.

தமிழ்க் கட்சித் தலைவர்கள் தமது பாதுகாப்புக்களை அதிகப்படுத்தியுள்ளனர். அதிலும் நீலன் போன்றோரின் இல்லங்கள் அதி உயர்தர பாதுகாப்பான பகுதிகளுக்குள்ளேயே இருக்கின்றன.

எனவே, கரும்புலித் தாக்குதலை தமது தரப்பு இழப்பை குறைக்கவும் தமிழ்க் கட்சிகளது தலைமைகளை தாக்கவும் புலிகள் பயன்படுத்துகின்றனர். அதில் முதற்பலி ராசிக். அடுத்தவர் நீலன். இத் தாக்குதல்கள் மேலும் தொடரும் என்றே அஞ்சப்படுகிறது.

நீலனுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், அதிலுள்ள ஓட்டைகள் போன்றவற்றை புலிகள் வெகு நுணுக்கமாக ஆராய்ந்து தகவல்கள் திரட்டிவிட்டனர்.

கொழும்பில் நீலன் நிற்கும்போது தனது வீட்டில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு அலுவலகம் செல்வது வழக்கம் என்பதை கண்டு கொண்டார்.

அதன்படி அவரது வீட்டுக்கும் அலுவலகத்திற்கும் இடையேயான போக்குவரத்தின்போதே தாக்குதல் நடத்துவது சுலபம் என்று தீர்மானித்திருக்கலாம்.

'முரசு'க்கு கிடைத்துள்ள தகவல்களின்படி, பல மாதங்களுக்கு முன்னரே நீலன் பற்றிய சகல தகவல்களும் தலைமைப்பீடத்திற்கு கொழும்பில் உள்ள புலிகளது மையத்தினால் அனுப்பப்பட்டுவிட்டன.

இதேபோல வேறு பல தமிழ்க் கட்சி தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன.

எப்போது தாக்குதல் நடத்துவது? எந்த இலக்கை தாக்குவது? என்ற முடிவு தலைமைப் பீடத்திடம் இருந்தே வருவதுண்டு.

தமிழ்க் கட்சிகளது நிலைப்பாடுகள் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதாக புலிகள் கடும் கோபமுற்றுள்ளனர்.

அரசு தன் சுயரூபத்தை தெளிவாக காண்பித்த பின்பும் இந்த குழுக்கள் அரசை ஆதரிக்கின்றன. இதற்கு மேலும் நாம் எப்படி பார்த்துக் கொண்டிருப்பது? என்று வன்னியில் உள்ள புலிகளது முக்கியஸ்தர்கள் சிலர் குமுறி இருக்கிறார்கள்.

ஏனைய தமிழ்க் கட்சிகள்மீதான தாக்குதல் பற்றி பிரஸ்தாபித்த மதகுரு ஒருவரிடமும் மேற்படி குமுறலையே வெளிப்படுத்தினராம்.



கதிர்காமர் வெளியிட்ட உண்மைகள்

"இந்தத் தமிழ்க் கட்சிகள் எம் மக்களுக்கு பிரயோசனப்படாது விட்டால்கூட பரவாயில்லை. அவர்கள் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு சுகபோகமாக இருப்பது பற்றிக்கூட நமக்கு கோபமில்லை. ஆனால் இவர்கள் அரசுக்காக சர்வதேச அனுதாபத்தை திரட்டும் கருவிகளாகவும், தமிழின விரோத நிலைப்பாட்டை மறைக்கவும் கருவிகளாக மாறியுள்ளனர். அதன் பின்னரே அவற்றின் உறுப்பினர்களுக்கு முதல் அறிவிப்பை வெளியிட்டோம்!" என்று புலிகளது அந்தப் பிரமுகர் கூறினாராம்.

அது மட்டுமன்றி தமிழ்க் கட்சிகளது பிரமுகர்கள் சிலர் எந்தெந்த இராஜதந்திரிகளை வெளிநாடுகளில் சந்தித்தனர். அவர்களிடம் என்னென்ன பேசினார்கள் போன்ற தகவல்களையும் மளமளவென்று ஒப்புவித்தாராம் அந்தப் பிரமுகர்.

யாழ் குடாநாட்டில் அரசு நடத்திய உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட முன்னர், அவற்றின்மீது ஒரு துப்பாக்கி ரவைகளைக்கூட நாம் பாவிக்கவில்லை. எங்கள் பாதையில் குறுக்கிடாது மக்களுக்கு உங்களால் முடிந்ததை செய்யுங்கள் என்று தமிழ்க் கட்சிகளுக்கு யாழ்ப்பாணத்தில் தகவல்கூட அனுப்பியிருந்தோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறு தமிழ் கட்சிகள்மீதும், அக்கட்சிகளது பிரமுகர்கள் சிலர்மீதும் கடும் கோபம் ஏற்பட்ட நிலையில்தான், கரும்புலிகள் அணி ஒன்று கொழும்புக்கு அனுப்பப்பட்டதாக தெரிகிறது.

கரும்புலி அணி கொழும்பு வந்ததை அரச புலனாய்வுப் பிரிவும் எப்படியோ அறிந்து சம்பந்தப்பட்ட பிரமுகர்கள் சிலரை எச்சரித்தும் இருந்தது.

கொழும்பில் தமிழ்க் கட்சி பிரமுகர்களில் கரும்புலிகளது முதல் இலக்காக தெரிவானவர் நீலன் திருச்செல்வம்.

அதுமட்டுமன்றி புலிகளின் தாக்குதல் பிரிவு தளபதி தரத்தில் உள்ள ஒருவரே நீலனைக் குறி வைக்க தெரிவு செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

நார்தீன்மீதான தாக்குதல் போல பிசகிவிடக் கூடாது என்பதால், துல்லியமாக தாக்குதல் நடத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டு, அதற்கேற்ற கரும்புலியே அனுப்பப்பட்டாராம்.

இந்தளவுக்கு நீலனை தீர்த்துக்கட்ட புலிகள் பெரும் கவனம் செலுத்தியதற்கு, நீலனின் வெளிநாட்டுத் தொடர்புகளே முக்கிய காரணம்.

சந்திரிக்கா அரசின் தீர்வுப் பொதியை தயாரித்தவர்களில் ஒருவர் பேராசிரியர் பீரிஸ் மற்றவர் நீலன்.

இதனை அறிந்ததுமே நீலனை பிரதான தடைக்கல்லாக தமது தாக்குதல் பட்டியலில் முதலிடம் கொடுத்துவிட்டனர் புலிகள்.

அதன் பின்னரான நீலனின் நட வடிக்கைகள் தாக்குதல் திட்டத்தை புலிகள் விரைவுபடுத்த உதவும் பணியைத்தான் செய்தன.

பொதியை தயாரித்ததில் தனது பங்கை தமிழ்மக்களிடம் நீலன் ஒருபோதும் கூறவில்லை. அவர் பலியான பின்னர் அரசாங்க அமைச்சர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோர் மூலமே அந்த உண்மை வெளியாகியுள்ளது.

'சந்திரிக்கா அரசு தீர்வுப் பொதியை முன்வைத்துள்ளது. அதனை தமிழ் மக்களும் ஏற்கத் தயாராக உள்ளனர்' என்று அரசுக்கு சாதகமான பிரசாரத்தையும் சர்வதேச ரீதியில் நீலன் மேற் கொண்டுள்ளார்.

இத் தகவல்கள் புலிகளது வெளிநாட்டு கிளைகள் மூலம் தலைமைப் பீடத்திற்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டன.

புலிகளது பிரமுகர்கள் சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர், 'பொதி சிறந்தது' என்று நீலன் தம்மிடம் அடுக்கிய வாதங்களை கூறியுள்ளனர்.

யாருக்கும் தெரியவராது என்று நினைத்து நீலன் மேற்கொண்ட இந்த சர்வதேச பிரசாரம் பற்றி யாவும் அறிந்தனர் புலிகள்.

இவற்றை எல்லாம்விட புலிகளை மிகக் கோபப்படுத்திய ஒரு நிகழ்வு மிக முக்கியமானது.

புலிகளை அமெரிக்கா தடை செய்தமைக்கு லக்ஸ்மன் கதிர்காமர்தான் முக்கிய பங்கு வகித்தார் என்பது வெளியே தெரிந்த செய்தி.

அந்தத் தடைக்கு நீலனும் அதி முக்கிய பங்கு வகித்தது வெளியே தெரியாத செய்தி.

ஆனால் அமெரிக்காவின் ராஜாங்க திணைக்களத்தில் புலிகளுக்கும் தனிப்பட்ட முறையில் சில நண்பர்கள் இருக்கிறார்கள்.

சர்வதேச ரீதியில் புலிகளை தனிமைப்படுத்தி, உள்நாட்டிலும் புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தினால் தற்போதைய பொதியை சில திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்தலாம் என்பதே புலிகள்மீதான தடைக்கு அமெரிக்காவிடம் வலியுறுத்தப்பட்ட காரணம்.

இத் தகவல்கள் உண்மைதான் என்பதை, மிகவும் அழுத்தம் திருத்தமாக தற்போது உறுதிப்படுத்தியுள்ளார் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்.

02.08.99 அன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் லக்ஸ்மன் கதிர்காமர் பல உண்மைகளை தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சில் பதவிகள் வகிக்காத போதும், போதிய ஆலோசனைகள் வழங்கி வந்தார்.

சர்வதேச ரீதியில் அவருக்கு இருந்த தொடர்புகளை செல்வாக்கை அரசின் நன்மைக்காக பயன்படுத்தினார்" என்று கூறியுள்ளார்.

சுருக்கமாக சொன்னால் இலங்கை அரசின் உத்தியோக பற்றற்ற வெளிநாட்டமைச் சராகவே நீலன் செயற்பட்டு வந்திருக்கிறார் என்பது உறுதியாகியுள்ளது.

இந்த உண்மைகள் தற்போது வெளியே வந்தாலும், இவையெல்லாவற்றையும் நீண்ட காலத்தின் முன்பே நன்கு அறிந்த புலிகள் நீலனை பிரதான தடைக் கல்லாக முடிவு செய்துவிட்டனர்.

நீலன் மீதான தாக்குதல் மூலம் தமக்கு சர்வதேச ரீதியாக இருந்த தடைக்கல் ஒன்றை புலிகள் அகற்றியுள்ளனர். அந்த வகையில் இது புலிகளுக்கு வெற்றியே.

அதேசமயம் நீலனின் இழப்பு அரசுக்கும், குறிப்பாக வெளிநாட்டமைச்சுக்கும் பாரிய இழப்பாகும்.

திரு.லக்ஸ்மன் கதிர்காமரை சந்திரிக்கா அம்மையாரிடம் அறிமுகம் செய்து வைத்தவரும் நீலன்தான். அவரது சிபாரிசை நம்பியே லக்ஸ்மன் கதிர்காமரை வெளிநாட்டமைச்சராக சந்திரிக்கா அம்மையார் நியமித்திருந்தார்.

திரு.லக்ஸ்மன் கதிர்காமர் ஒரு சிறந்த சட்டத்தரணி. அவருக்கு வெளிநாட்டு இராஜ தந்திரத் தொடர்புகள் பெருமளவில் இருக்கவில்லை.

அவர் வெளி நாட்டமைச்சராக மாறிய பின்னர் தனக்கு இருந்த சர்வதேச உறவுகள், தொடர்புகள் என்பவற்றையும் நீலன் அவருக்கு பரிச்சயப்படுத்தினார். அவற்றை எப்படி கையாளலாம் என்ற ஆலோசனைகளும் வழங்கி இருக்கிறார்.

தனது நகர்வுகளை புலிகள் அறிவர் என்பது நீலனுக்கு ஓரளவு தெரிந்துவிட்டது. அதனால்தான் தன்மீது புலிகள் நிச்சயம் குறிவைப்பார்கள் என்று நீலனுக்கு தெரிந்துள்ளது. அதனை சக எம்.பிகள் உட்பட பலருக்கு கூறியுமிருக்கிறார்.

ஆனால் அவர் தன்மீது துப்பாக்கியால் தான் தாக்குவார்கள் என்றே எதிர்பார்த்தார். அவ்வாறு தாக்கினால் தமது பாதுகாப்பு பிரிவினரால் அதனை முறியடிக்க முடியும் என்று அவர் நம்பியிருக்கலாம்.

சிறந்த புத்தி ஜீவி எனப்படும் அவருக்கு ராசிக்மீதான தாக்குதலின் பின்னர் கரும்புலிகள் தமிழ்க் கட்சிகள்மீதும் பாயப் போகிறார்கள் என் பதை கணிப்பிட முடியாது போனது விந்தைதான்.

இதற்கிடையே நீலன் மறைவுக்கு அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கைகளும், அமெரிக்காவுடன் நீலனுக்கு இருந்த உறவுகளை வெளிப்படுத்தியுள்ளன.

அமெரிக்க தூதரகம், அமெரிக்க அரச திணைக்களம், ஜனாதிபதி கிளின்ரன் ஆகியோர் கண்டனம் ,அனுதாபம் தெரிவித்திருந்தனர்.

கிளின்ரனின் கண்டனம் தனக்கு தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவர் என்பதால் மட்டும் வெளியானதல்ல. தனிப்பட்ட நண்பர் ஒருவரது இழப்புக்காக ஜனாதிபதி என்ற பதவியில் இருப்பவர் அறிக்கை வெளியிடமுடியாது.

இலங்கையில் பல அரசியல் வாதிகள், எம்.பி.கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்காக அமெரிக்கா இத்தனை தீவிரமாக கண்டனம் காட்டவில்லை.

அமெரிக்காவுக்கு மிக வேண்டப்பட்டவர் என்பதாலேயே ஜனாதிபதி கிளின்ரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகம் மற்றும் பல வெளிநாட்டு பிரமுகர்களும் அனுதாப அறிக்கைளை வெளியிட்டுள்ளனர். அவரது இறுதிச் சடங்கில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், பிரமுகர்கள் ஆகியோரே பெருமளவில் காணப்பட்டனர்.

ஒரு கல்விமான் என்பதால் மட்டும் இத்தனை பிரபலம், அறிமுகம் கிடைத்திருக்காது.

கூட்டணியின் தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலும், எம்.பி என்ற ரீதியிலும், மனித உரிமைக்காக வாதாடுபவர் என்ற வகையிலுமே இந்த அறிமுகங்கள் அவருக்கு ஏற்பட்டன. அவற்றை தனது வாதப் புலமையாலும், புத்திசாலித்தனத்தாலும் நீலன் நன்கு ஸ்திரப்படுத்திக் கொண்டார்.

ஆனால் அத் தொடர்புகளும், உறவுகளும் யாருக்கு பயன்பட்டன? என்பதே கேள்வி.

தனது சர்வதேச பிரபலத்தை பயன்படுத்தி தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமான சர்வதேச அனுதாபத்தை கட்டியெழுப்புவதற்கு நீலன் முயன்றிருந்தால், பாரிய தாக்கங்கள் ஏற்பட்டிருக்கும். நியாயமான தீர்வு ஒன்றுக்கான அழுத்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பவற்றை ஏற்படுத்த பெரும் துணை புரிந்திருக்கலாம்.

அதுதவிர மனித உரிமை வாதி என்று அவர் அழைக்கப்படுகிறார். ஆனால் இங்கு தமிழ் மக்கள் எதிர்கொண்ட மனித உரிமை மீறல்களையாவது சர்வதேச அரங்குக்கு எடுத்துச் செல்ல ஏன் தயங்கினார் என்பதும் கேள்விக்குறியே.

அதிரடி அய்யாத்துரை

கொழும்பில் நடந்த *பிரமுகரின் இறுதிச் சடங்கில் கழுகு நாட்டின் செய்தியை வாசிக்கும் பொறுப்பை அந்த நாட்டு தூதர் சம்பந்தமானவரிடம்தான் கொடுத்தாராம். சம்பந்தமானவர் நாக்குத் தடுமாறிவிட்டார். கழுகு நாட்டுத் தலைவர் தனது செய்தியின் முடிவில் 'என்ட் டு த பைட்டிங் (END TO THE FIGHTING)' என்று குறிப்பிட்டிருந்தார். அதாவது சண்டையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று கூறியிருந்தார். சம்பந்தமானவர் 'என்ட் டு த ஃபைண்டிங் (END TO THE FINDING) என்று வாசித்துப் போட்டார். தேடுதலின் முடிவு என்று அர்த்தம். எந்தத் தேடுதலின் முடிவு?*

இறுதிச் சடங்கில் *சாதாரண பொதுமக்கள் குறைவு என்றாலும், பிரமுகர்கள், இராஜதந்திர வட்டாரங்கள், அதிகார தரப்பார் என்று ஒரே வி.ஐ.பிக்கள் முகங்கள்தான். நாட்டின் தலைவருக்குரிய மரியாதை. மரணச்சடங்கில் காணப்பட்ட பதாதைகளும் சகோதர மொழியில்தான் காணப்பட்டன.*

வன்னி மக்களுக்காக *வவுனியாவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத் தில் ஒரு மாணவன் பேசியது இது: "கொழும்பில் எம்.பி. ஒருவர் இறந்து போனாராம். அவருக்காக ஏராளமாக அனுதாப அறிக்கைகள் வருகின்றன. வரட்டும். ஆனால் வன்னியில் மருந்துக்கும் வழியின்றி பலர் சாகிறார்களே இதனைப் பற்றி ஏன் அக்கறைப்படவில்லை; அனுதாபப்படவில்லை? பிஞ்சுக் குழந்தைகள் பட்டினி கிடந்து தவிக்கிறார்களே: யாரும் ஏன் அனுதாபப்படவில்லை? எம்.பியின் உயிர் மட்டும்தான் உயிரா?" என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேச, சீருடையினரும், புலனாய்வாளர்களும் அந்த மாணவனது பேச்சை ஆச்சரியமாக பார்த்தபடி நின்றனராம்.*

கூட்டான கட்சிக்குள் *அடுத்த வெகுஜன பிரதிநிதி யார் என்பதில் பனிப்போர் ஆரம்பமாகிவிட்டது. 'இல்லை' என்று அவை மறுத்தாலும் அதுதான் உண்மை. அடுத்தது யார் சங்கதியாரோ? சேனாதிபதியாரோ? இருவரில் ஒருவர்தான்!*

தமிழ் பேசும் ஆசிரியர்களை *மூளையில் மசாலா இல்லா தலை என்று நினைத்து கல்வியமைச்சு தவறான முடிவை எடுத்தது. அவர்கள் தங்கள் சக்தியைக் காட்டிப்போட்டார்கள். போராடி பணியவைத்துப் போட்டார்கள். ஆனால் அவைக்கு நியாயம் கிடைத்ததுக்கு தாம்தான் காரணம் என்று வ.கி. கல்வி அமைச்சு செயலாளர் ஒருபுறமும், ஆளுநர் மறுபுறமும், கிழக்கின் தனித்துவத் தலைவர் இன்னொரு புறமுமாக உரிமை கோரியிருக்கினம். திருவிளையாடல் பாணியில் கூறுவதானால், "போராடுவதற்கு என்றும் ஆட்கள் இருக்கிறார்கள். போராடாது பயன் பெறுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் புத்திசாலிகள்.'*

வன்னி மக்களுக்கு *உணவு அனுப்புமாறு 'டமில்' கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக செய்தி வந்தது தெரியும்தானே? கோரிக்கைக்கு எந்தப் பதிலும் அவைக்கு தெரிவிக்கப்படவில்லை. உணவு போகுதோ இல்லையோ, ஒரு சம்பிரதாயத்துக்காக என்றாலும் 'கடிதம் கிடைத்தது' என்றுகூட பதில் வந்ததோ? இல்லவே இல்லை. இதுதான் இவைக்குள்ள மரியாதை. போதாக்குறைக்கு சீருடையினரை அரச அதிபர்களாகப் போடப்போகினமாம்!*

உண்மையாக போராட்டம் *எப்படி இருக்கும் என்பதற்கு டமில் கட்சிகள் நடத்தும் டம்மிப் போராட்டங்களைப் பார்க்கக்கூடாது. வவுனியாவில் தமிழ்க் கட்சிகளும் போராட்டம் நடத்தியிருக்கினம். அது "நாங்கள் அடிக்கிற மாதிரி அடிக்கிறோம், நீங்கள் அழுவது மாதிரி அழுங்கோ!" என்று நடத்தும் போராட்டம். சமீபத்தில் அதே வவுனியாவில் வன்னி முற்றுகைக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். சீருடை அதிகாரிகள் நேரில் வந்தும்கூட சின்னஞ் சிறு மாணவர்கள்கூட துணிந்து முழக்கமிட்டனர். பல்லாயிரம் மாணவர்கள் கலந்துகொண்ட இந்த எழுச்சி ஆர்ப்பாட்டத்தை செய்தி ஊடகங்கள்கூட சரியான முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதும் வேதனையான விஷயம்தான்.*

இந்தவாரப் பொன்மொழி:

> **"இலட்சியவாதிகளுக்கு**
> **இன்பமே கிடைப்பதில்லை!**
> **இன்பமாக வாழ்பவனுக்கு**
> **இலட்சியமே இருப்பதில்லை!"**

படிப்பகம்



அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

களத்தில் பெண் புலிகள்

ஆற்றலை நிரூபித்த சமர்!

ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலிலும், வெற்றிலைக்கேணியில் தரை இறங்கிய படையினருடனான மோதல்களிலும் புலிகளது பெண்கள் படையணி முக்கிய பங்கு வகித்தது.

ஆகாய, கடல் வெளிச் சமரில் நேரடியாக பங்கு கொண்டு பெண்கள் படையணிக்கு தலைமை தாங்கிய தளபதிகளில் ஒருவர் ஜெயந்தி.

ஆனையிறவுச் சமர் முடிந்த பின்னர் களமுனை அனுபவங்கள் பற்றி அவர் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் அவர் கூறியதைப் பார்க்கலாம.

“1984ம் ஆண்டின் மத்திய பகுதிகளில் தமிழீழ தேச விடுதலைக்காக, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முழு நேரமாக இணைந்து கொண்ட இளம் பெண்கள் இன்று முழுமையான இராணுவப் பயிற்சி பெற்று ஒரு புரட்சிகர படைப்பிரிவாக வளர்ச்சி கண்டுள்ளனர்.

இந்த ஏழு வருடங்களில் (1984-91) படிப்படியாக இப் படையணி பெற்ற போர் அனுபவங்களின் ஒரு தொகுப்பாக இந்த ஆனையிறவுச் சமரில் பெண்கள் போராளிகளது பங்களிப்பு அமைந்துவிட்டது.

ஆகாய கடல்வெளிச் சமர் நடைபெற்ற அனைத்து இடங்களிலும் பெண் போராளிகள் நின்று சண்டையிட்டுள்ளனர்.

அத்தோடு சண்டைக் களங்களில் ஆண் போராளிகளுக்கு நிகராக ஆட்தொகையிலும், போர்த் திறனிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

. பல நூற்றுக் கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்ட ஆனையிறவுச் சமரானது உலக வரலாற்றில் முதற் தடவையாக பெண் இராணுவம் பங்கு கொண்ட மரபு வழிச் சண்டை என்பது பெருமையுடன் நினைவு கொள்ளத்தக்கது.

காவல்துறை வாகனம்

TAMIL EELAM POLICE

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் அடக்குமுறை, ஒடுக்குமுறைக்கு எதிராக பெண்களும் ஆயுதம் ஏந்திப் போராடியுள்ளனர்.

அதேபோல உலகின் பல நாடுகளும் தங்களது இராணுவத்தில் பெண்களையும் இணைத்து, அவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளையும் கொடுத்து வைத்துள்ளனர்.

ஆனால் இந்தப் பெண்கள் இராணுவத்தை எந்த ஒரு நாடும், விடுதலை இயக்கமும் மரபு வழிப் போரில் தனித்தொரு அணியாக நிறுத்தி சண்டையிட்டது கிடையாது.

எதிரிமீதான பதுங்கித் தாக்குதல், அதிரடித் தாக்குதல் போன்றவற்றில் ஆண்களுடன் ஆயுதம் தாங்கிய பெண்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மரபுவழி சண்டைகளில் பின் கள வேலைகளான மருத்துவம், தகவல் தொடர்பு, அலுவலக வேலைகள், சண்டைக் களத்திற்கு வெளியேயான விநியோகம் போன்றவற்றிலேயே பெண்கள் இராணுவம் ஈடுபடுத்தப்படும்.

அண்மையில் நடந்து முடிந்த வளைகுடாப் போரிலும் பெண்கள் இராணுவம் பங்கு கொண்டது. ஆனால் எந்தவொரு நேரடிச் சண்டைகளிலும் ஈடுபடவில்லை.

ஆனால் இங்கு பெண் புலிகள் சண்டை முனைகளில் ஆண்களைவிட அதிக பங்களிப்பு செய்துள்ளனர்.

காயமடைந்த போராளிகளையும், வீர மரணமடைந்த போராளிகளது உடல்களையும் மீட்டெடுப்பதிலும், களத்தில் நடைபெற்ற ஆயுத வெடிமருந்து விநியோகத்திலும் ஆண்களைவிட பெண் போராளிகளது பங்களிப்பு அதிகம்.

இச் சண்டைகளில் மீட்புப் பணிகளில் பெண் போராளிகள் காட்டிய துணிவும், அர்ப்பண உணர்வுகளும் சக ஆண் போராளிகளால் வெளிப்படையாகவே புகழ்ந்துரைக்கப்பட்டன.

இதுவரை காலமும் பெண் போராளிகளது போரிடும் ஆற்றல் தொடர்பாக, எமது ஆண் போராளிகள் பலரின் மத்தியில் இருந்து வந்த நம்பிக்கையீனங்களை இச் சமருடன் பெண் போராளிகள் உடைத்து சுக்கு நூறாக்கியுள்ளனர்.

1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ம் திகதி இந்திய படைகளுக்கு எதிரான ஒரு சண்டையில்தான் எமது மகளிர் படையணி முதலாவது களப்பலியைச் சந்தித்தது.

கோப்பாயில் நடந்த சண்டை ஒன்றில் மன்னார் அடம்பனைச்சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் மாலதி வீர மரணமடைந்தார்.

அன்றிலிருந்து இந்தியப் படை வெளியேற்றப்படும் வரை இந்திய படை, புலிகள் போரில் 27 பெண் புலிகள் பலியாகினர்.

முதற் களப்பலியைச் சந்தித்த 10.10.1987 முதல், ஆகாய கடல் வெளிச்சமர் ஆரம்பமான 10.07.91 வரை நான்கு ஆண்டுகளில் 121 பெண் புலிகள் பலியாகி உள்ளனர்.

அதன் பின்னர் ஆகாய கடல் வெளி சமர் ஆரம்பமான 10.07.91 முதல், அது முடிவடைந்த 09.08.91 வரையான 31 நாட்களில் 119 பெண் புலிகள் பலியானார்கள்.

10.07.91 அன்று இரவு சுற்றுலா விடுதி முகாம்மீது நடந்த தாக்குதலில் 33 புலிகள் பலியாகினர். அதில் 11 பேர் பெண் புலிகள்.

11.07.91 தடை முகாம் தாக்குதலில் 63 புலிகள் பலியாகினர். இவர்களில் 22 பேர் பெண் புலிகள்.

13.07.91 உப்பள அலுவலக முகாம் தாக்குதலில 52 புலிகள் பலியாகினர். இவர்களில் 13 பேர் பெண்புலிகள்.

23.07.91 அன்று மீண்டும் தடை முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 69 புலிகள் பலியானார்கள். இவர்களில் 22 பேர் பெண்புலிகள்.

21.07.91 அன்று முள்ளியானில் நடைபெற்ற ஊடறுப்பு சமரில் 42 புலிகள் பலியானார்கள். இவர்களில் 04 பேர் பெண் புலிகள்.

05.08.91 அன்று புல்லாவெளியில் நடந்த தாக்குதலில் 43 புலிகள் பலியாகினர். இவர்களில் 10 பேர் பெண் புலிகள்.

ஆனையிறவுச் சமரில் பலியான 119 பெண் போராளிகளில் 78 பேர் தாக்குதல் போர் முனையிலும், 31 பேர் தற்காப்பு போர் முனைகளிலும் பலியாகினர்.

மகளிர் படைப்பிரிவு இத்தனை பெரும் இழப்பை சந்தித்த காரணம், ஆனையிறவுச் சமரில் பெண் புலிகளது பாரிய பங்குதான்.

இச் சமருக்கு பின்னர் நம் அணிகளோடு தம்மை இணைத்துக் கொள்ளும் பெண்களது விகிதம் ஆச்சரியப்படுமளவுக்கு அதிகரித்துள்ளது.

தமிழீழத்தின் மொத்த சனத்தொகையில் ஆண்களைவிடப்பெண்களே அதிகம். எனவே தமிழீழத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை தமிழீழப் பெண்களுக்கே அதிகமுண்டு” இவ்வாறு ஜெயந்தி தனது பேட்டியில் கூறியிருந்தார்.

தடையும், தாலாட்டும்

1991 இல் யாழ் குடாநாடுமீது இலங்கை அரச பொருளாதார தடை விதித்தது. கடும் உணவு நெருக்கடி ஏற்பட்டது. அப்போது வெளியான 'சிரித்திரன்' சஞ்சிகையில் வெளியான தாலாட்டுக் கவிதை இது:

“மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே...”
என்றுன்னைச் சீராட்டி
தக்காளிப் பழரசமே தாலாட்டு நான் பாட
இத்தாலி கன்டாவில் இருக்கிறார் மாமா மாமி
ஆமி அடிச்ச செல் அதிர்ச்சியிலே பிறந்தவனே
மாமன் மாமி போன தேசம் கேட்கும்வரை கதறியழு

தொப்புள் கொடியோடு தொடர்புகள் அறுந்திங்கே
நிப்புள் பால்பவுடர் விலையறியாப் பிறந்தவனே
ஓடிக்கலோன் பவுடர் கிறேப் வாட்டர் கிறீம் தேடி
ஓடிக் களைத்தேன் நான் ஓயாமல் உனக்காக
காமன் விட்ட கணை களிப்பினிலே உதித்தவனே
சாமான் விற்கும் விலை சரியும் வரை கதறியழு

ஊர்விட்டு ஓடுகையில் போர்க்காலச் சூழ்நிலையில்
வேர்விட்டுப் பதித்தவனே பேர் சொல்லப் பிறந்தவனே
அகதியாய் வந்த வேளை அவதியாய் பிறந்தவனே
சகதியில் வந்துதித்த சந்தனமே சர்க்கரையே
நிவாரண மட்டையிலே நின் பெயர் பதியும் வரை
நிர்வாண உடம்போடு நிதமும் நீ கதறியழு

சண்டைத் துவக்கு பொம்மை சர்க்கரை இனிப்புவகை
ஈண்டைக் குமக்குத் தர இலங்கையரசு தடை
பண்டைத் தமிழ்ப்பாலன் சிங்கக் குட்டிகளின்
சிண்டைப் பிடித்திழுத்து சிரித்து விளையாடினானாம்
உண்மைத் துவக்கோடு விளையாடும் நாள் வரை
தன்மானம் இழந்த தமிழ் மக்களுக்காய் கதறியழு.

-எஸ்.ஜே.பி.ரட்ணதுரை-

காவல்துறை

19.11.91 அன்று விடுதலைப் புலிகள் புதிய பிரிவு, ஒன்றை ஆரம்பித்தனர்.

'தமிழீழ காவல்துறை' என்ற பெயரில் அப் பிரிவு ஆரம்பமானது.

இக் காவல்துறைக்கு ஆட்கள் எடுக்கப்பட்டு பயிற்சி வழங்க ஆரம்பித்த நாளும் முக்கியமான ஒருநாள்.

01.06.91 அன்றுதான் பயிற்சிகள் ஆரம்பமாகின. யாழ் நூலகத்தை சிறீலங்கா காவல் துறையினரும், தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட குண்டர்களும் தீயிட்டு நாசமாக்கிய நினைவு நாள் அதேதான்.

தமது உறுப்பினர்கள் பலியான முக்கிய தினங்களை மட்டுமல்லாது, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தமிழர் விரோத நடவடிக்கைகளது முக்கிய நாள்களையும் புலிகள் மறப்பதில்லை.

அத் தினங்களை புலிகள் மறக்காது இருப்பதால், தற்போது நாடு முழுவதும் அந்த நாட்கள் பதட்டத்தோடு நினைவு கொள்ளப்படுகின்றன.

முன்னர் ஜூலை மாதம் என்றால் தமிழ் மக்களுக்கு பாதகமான மாதம் என்று அச்சம் நிலவியது. தற்போது புலிகளது தாக்குதல்கள் தீவிரமடையும் மாதமாக ஜூலை கருதப்பட்டு கொழும்பு வரை அச்சம் நிலவுவதை அவதானிக்கலாம்.

19.11.91 இல் உத்தியோகபூர்வமாக தமிழீழக் காவல்துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. காவல்துறைக்கு நடேசன் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

இவர் முன்பு இலங்கை அரசின் காவல் துறையில் பணியாற்றியவர். இவரது மனைவி சிங்கள இனத்தவர். அவரும் காவல்துறையில் தகவல் தொடர்பு சாதனப் பிரிவில் கடமையாற்றியவர். நடேசனின் தந்தையார் சமசமாஜ கட்சியில் முக்கிய பிரமுகராக இருந்தவர்.

காவல்துறை ஆரம்பவிழாவில் பிரபாகரன் நேரடியாக கலந்து கொண்டார். யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் காவல்துறை அணி வகுப்பு நடைபெற்றது.

அணிவகுப்பை பிரபாகரனும், நடேசனும் ஏற்றுக்கொண்டனர். நீல நிற சீருடையே காவல்துறையினருக்கு வழங்கப்பட்டது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடி கண்காணிப்பில் காவல்துறை செயற்பட்டு வருகிறது.

இக் காவல்துறை பற்றி புலிகள் விடுத்த செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது

“தமிழீழ மக்களாகிய நாம் கடந்த 500 ஆண்டுகளுக்கும் மேலான எமது சரித்திரத்தில் அந்நிய அரசுகளின் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டே வாழ்ந்திருக்கின்றோம்.

எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த வெளிநாட்டவர்கள் இங்கு சட்டம், ஒழுங்கு என்ற பெயரில் மக்கள்மீது தமது அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகித்தனர்.

'சுதந்திரம்' என்ற பெயரில் இலங்கைத் தீவு மொத்தத்தையும் சிங்களவரின் கையில் அதிகார ஒப்படைப்பு செய்துவிட்டு 1948இல் பிரித்தானியா வெளியேறியது.

அப்போதிலிருந்து மாறி மாறி ஆட்சி பீடமேறிய சிங்கள அரசாங்கங்களும் தமிழ் பேசும் மக்களின்மீது தமது பிரதான ஒடுக்கு முறைக் கருவியாக காவல் துறையைப் பிரயோகித்தன.

தமிழ்த் தேசிய இனம் தனது உரிமைகளுக்காக அமைதியான வழியில் போராடிய போது, காவல்துறையினரை ஏவிவிட்டே ஆட்சியாளர்கள் அவற்றை முறியடித்தனர்.

1974ம் ஆண்டு தை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் 9 தமிழர்கள் படுகொலையானார்கள்.

இதற்கு ஸ்ரீலங்கா காவல்துறையே காரணமாக இருந்தது.

தற்போது காலம் மாறிவிட்டது. தமிழீழ மக்கள் தமக்கான காவல்துறை ஒன்றை பெற்றுள்ளனர்.

தமிழீழ மக்களின் வாழ்வு முறைக்கு ஏற்ற வகையில் நீதி, நியாயம், சமூக மேம்பாடு என்பவற்றின் ஒருமித்த வடிவமான சட்டங்களை எமது இயக்கம் வரையும்.

தமிழீழ காவல் துறையைப் பொறுத்தவரை குற்றங்கள் நடந்து முடிந்த பின்னர் குற்றவாளிகளை தேடிப் பிடித்து கூண்டில் நிறுத்துவது மட்டும் அதன் நோக்கமல்ல.

குற்றங்கள் நிகழாதவாறு தடுத்து குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதே அதன் இலட்சியமாகும்.” என்று புலிகள் கூறியிருந்தனர்.

தமிழீழக் காவல்துறை ஆரம்பவிழாவில் யாழ் மாவட்ட புலிகளின் விசேட தளபதி தமிழ்ச் செல்வன், பேபி சுப்பிரமணியம், யோகி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழீழ காவல்துறையினரால் நகரப் போக்குவரத்து பிரிவு ஒன்றும் உடனடியாக உருவாக்கப்படும் என்று நடேசன் கூறினார்.

பின்னர் அப் பிரிவும் உருவாக்கப்பட்டு போக்கு வரத்து ஒழுங்குகளை கவனித்தது.

தமிழீழ காவல்துறை போக்குவரத்து பிரிவு

யாழ்ப்பாணம், சுன்னாகம், சங்கானை, கோப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களிலும் 'தமிழீழ காவல்துறை' நிலையங்கள் திறக்கப்பட்டன.

'தமிழீழ காவல்துறை நிலையங்களுக்கு புகார் செய்ய செல்பவர்களை இனிய தமிழில் 'ஐயா வணக்கம், அம்மா வணக்கம்' என்று கூறி காவல்துறையினர் வரவேற்பார்கள்.

புலிகள் இயக்கத்தோடு தொடர்பு இல்லாதவர்களும் தமிழீழ காவல்துறையில் பணியாற்ற சேர்க்கப்பட்டனர். மாத ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

காவல்துறையில் உள்ள சிலர் தவறாக நடந்து தண்டனையும் பெற்றுக் கொண்டனர்.

காவல்துறையிலும் ஆண்களும் பெண்களும் அங்கம் வகித்தனர்.

சில சந்தர்ப்பங்களில் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே சிறு பிணக்குகளும் ஏற்பட்டது உண்டு.

ஜனாதிபதி ஆணைக்குழு

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலையில் தமிழ் மக்கள் படையினரால் கொலை செய்யப்பட்டதையிட்டு விசாரணை செய்ய 'ஜனாதிபதி விசாரணைக்குழு' ஒன்று பிரேமதாசாவால் நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணைக்குழுவினர் தமது அறிக்கையை 1992 ஜனவரியில் வெளியிட்டனர்.

“நிராயுதபாணிகளான அப்பாவிக் குடிமக்கள்தான் படுகொலை செய்யப்பட்டனர். படையினருக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலின்போது இடையில் சிக்கி பலியானதாக படையினர் கூறியது உண்மையல்ல.


அணிவகுப்பை ஏற்கிறார் பிரபா

பழிவாங்கும் நோக்கத்தோடுதான் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்' என்று ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து படையினர் சிலர்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகூட போதியதல்ல என்ற போதும், தற்போது உள்ள நிலையைவிட பரவாயில்லை என்று கூறலாம்.

யாழ் குடாநாட்டில் காணாமல் போன அறுநூற்றுக்கு மேற்பட்டோரின் கதி அறிய ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு கடந்த மூன்றாண்டுகளாக ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

விசாரணைக்குழு அமைக்கப்படும். என்று கூறினாரே தவிர இன்றுவரை (ஆகஸ்ட் 99) ஆணைக்குழு எதனையும் நியமிக்கவில்லை.

நாம் இனி மணலாறு சண்டை பற்றி பார்க்கலாம்.

வன்னியில் மணலாற்றை கைப்பற்ற 'மின்னல்' என்ற பெயரில் பாரிய படை நகர்வு ஒன்றை படையினர் ஆரம்பித்தனர்.

காடுகளுக்குள் படையினர் புகும்வரை புலிகள் காத்திருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

படிப்பகம்

அலசுவது - இராஜதந்திரி

அமெரிக்காவின் அரசியல், இராணுவ வியூகங்கள்

அமெரிக்க இராணுவ தளபதிகளில் ஒருவரான ஜெனரல் ஸ்மித்தின் கொழும்பு விஜயமும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

20.07.99 அன்று ஜெனரல் ஸ்மித் கொழும்பு வந்திருந்தார். மூன்று நாட்கள் அவர் கொழும்பில் தங்கியிருந்தார்.

அமெரிக்காவின் இராஜதந்திரிகள் பலரும், இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

அமெரிக்காவின் 'பச்சைக் கொமாண்டோக்கள்' இங்கேயே தங்கியிருந்து படையினருக்கு பயிற்சிகள் வழங்கி வருகின்றனர்.

எனினும் அமெரிக்காவின் இராணுவத் தளபதிகளில் ஒருவரே கொழும்புக்கு வந்து தங்கிநின்று வடக்கு-கிழக்கு போர் முனைகளில் உள்ள படை அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனைகள் கூறியுள்ளமையும், இவ்வாறான விரிவான சந்திப்பு நடைபெற்றதும் இதுவே முதற்தடவையாகும்.

ஜெனரல் ஸ்மித்தை சந்திப்பதற்காக வடக்கு-கிழக்கில் இருந்து, தமது ஏனைய பணிகளை நிறுத்தி வைத்துவிட்டு, படை உயரதிகாரிகள் கொழும்புக்கு விரைந்தனர்.

போர் முனை நிலவரங்களை விலாவாரியாக விளக்கிக்கூறி ஜெனரல் ஸ்மித்தின் ஆலோசனையும் பெறப்பட்டுள்ளது.

எனவே, ஜெனரல் ஸ்மித்தின் கொழும்பு விஜயம் முழுக்க முழுக்க வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பானதேயாகும்.

ஜே.ஆர் ஆட்சிக்காலம் முதல் தற்போதைய சந்திரிக்கா ஆட்சி வரை போருக்குரிய பல்வேறு உதவிகளை அமெரிக்காவிடம் பெற்றுள்ளன.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தக் குட்டித் தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து, இதனை தன் பிடியில் வைத்திருக்க அமெரிக்கா செலுத்தி வரும் கூலிதான் அந்த உதவிகளாகும்.

எனினும் தற்போது இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் அக்கறை முன்பைவிட அதிகமாகியுள்ளது.

தனது முக்கிய தளபதிகளில் ஒருவரையே அமெரிக்கா இங்கு அனுப்பி வைத்தமையும் அவர் வடக்கு-கிழக்கு போரில் வெல்வதற்கான உபாயங்களை விளக்கியதும் அந்த அக்கறையின் வெளிப்பாடாக விளங்குகின்றது.

இந்த அதிக அக்கறைக்குரிய பின்னணியை நாம் உற்றுநோக்க வேண்டும்.

கார்க்கில் போரில் இந்தியா தனது வலிமையை காட்டியிருப்பது அமெரிக்காவுக்கு விருப்பமான ஒன்றல்ல.

கார்க்கில் பகுதி முழுவதும் ஊடுருவல்காரர்களால் முற்றாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலையிலும் இந்தியா சற்றும் வளைந்து கொடுக்கவில்லை.

“ஊடுருவல்காரர்கள் முற்றாக வெளியேறும்வரை தாக்குதல் நடத்துவோம்!” என்றே சூளுரைத்திருந்தது.

சந்தடி சாக்கில் தலையை நீட்டி மத்தியஸ்தம் வகிக்க அமெரிக்கா ஆர்வம் காட்டியது. இரு தரப்புக்கும் பொதுவான நாடுபோல அமெரிக்கா அற்புதமாக நாடகம் ஆடியிருந்தது.

அவ்வாறிருந்தும் 'மத்தியஸ்தம்' என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியா மிகவும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

கார்க்கிலில் பாகிஸ்தான் தரப்பு தோற்கடிக்கப்பட முடியாத வலிமையான நிலையில் இருந்திருந்தால், அமெரிக்கா தனது தலையீட்டுக்கு வழி தேடியிருக்கும்.

ஆனால் இந்தியா பதிலடி கொடுக்க ஆரம்பித்தது. இழந்தப் பகுதிகளை விரைவாக மீட்கத் தொடங்கியது.

இந்நிலையில் அமெரிக்கா ஒரு அற்புதமான இராஜதந்திர நாடகத்தை அரங்கேற்றியது. அதன் ஒவ்வொரு காட்சியும் வெகு புத்திசாலித்தனமாக அமைந்திருந்தது.

இந்தியா மத்தியஸ்தத்துக்கு சம்மதிக்காத போதும், பாகிஸ்தான் பிரதமரை அமெரிக்காவுக்கு அழைத்து, அவருடன் உடன்பாடொன்றைச் செய்து கொண்டதாகவும் அமெரிக்கா அறிவித்தது.

இந்த உடன்பாட்டின் படி கார்க்கில் பகுதியில் இருந்து ஊடுருவல்காரர்கள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று முடிவானது.

மேலோட்டமாக நோக்கினால் இந்த உடன்பாடு இந்தியாவுக்குச் சாதகமானதாக தோன்றுகிறது.

ஆனால், உண்மை அதுவல்ல; இந்த உடன்பாட்டின் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அமெரிக்கா குறிவைத்தது.

கார்க்கிலில் தனது பதிலடி மூலம் இந்தியா முழு வெற்றியைப் பெற்றுவிட்டால் இந்தியப் படையின் வலிமை மேலும் உயரும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் தானும் ஒரு வல்லரசு என்ற இந்தியாவின் தன்னம்பிக்கை உரம் பெற்றுவிடும்.

எனவே. இந்தியாவின் இராணுவ வலிமை மூலமாக கார்க்கில் போர் முடிவுற்றது என்ற நிலை தோன்றும் முன்பாக, தனது தலையீட்டின் மூலமும், பாகிஸ்தானை தாம் நிர்ப்பந்தித்தது மூலமுமே கார்க்கில் பிரச்சனை தீர்ந்தது என்று காண்பிப்பதே அமெரிக்காவின் முதல் நோக்கம்.

இந்தியா அணுக்குண்டு தயாரித்தபோது, இந்திய விரோத நிலைப்பாட்டை பகிரங்கமாக அமெரிக்கா வெளிப்படுத்தியிருந்தது. இதனால் இந்திய மக்களிடமும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வு பரவலாக ஏற்பட்டிருந்தது.

எனவே, கார்க்கில் பிரச்சனையில் தன்னை ஒரு நடுநிலையாளராகவும், நீதிமானாகவும் காண்பித்து இந்திய மக்களிடையே நற்பெயரைச் சம்பாதிப்பதே அமெரிக்காவின் இரண்டாவது நோக்கமாகும்.

இந்திய மக்களிடமும், அங்குள்ள அர்சியல் கட்சிகளிடமும் நற்பெயர் ஏற்படுமானால், தென்னாசியாவில் தனது மேலாதிக்கத்துக்கு எதிர்ப்புக்கள் இல்லாது பார்த்துக் கொள்வதே அமெரிக்காவின் எண்ணமாக இருக்கிறது.

எதிர்பார்த்தபடி தமது திட்டங்கள் வெற்றியளிக்காத நிலையில், பாகிஸ்தானும் மேற்படி ஒப்பந்தத்துக்கு இணங்கியது.

தாமாக பின்வாங்குவதைவிட அமெரிக்கா கூறியதால் பின் வாங்கியதாக காண்பிப்பதே பாகிஸ்தானுக்குச் சாதகமானது. இந்தியப் படையின் பதிலடியில் தாம் பின்வாங்கியதாக கருதப்படுவதைவிட, அமெரிக்கா கூறியதால் வாபஸ் பெற்றதாகக் கூறுவது மேலானதேயாகும்.

எனவே பாகிஸ்தானும் விரும்பிச் செய்த ஒப்பந்தமே அதுவாகும். பாகிஸ்தானை அமெரிக்க நிர்ப்பந்தித்தது, எச்சரித்தது என்பதெல்லாம் அப்பட்டமான இராஜதந்திர நாடகங்களேயாகும்.

அணுக்குண்டு தயாரிப்பு உட்பட பல இராணுவரீதியான விடயங்களில் அமெரிக்கா சொல்வதை பாகிஸ்தான் கேட்கவில்லை. முரண்டு பிடிக்கிறது என்று முன்னர் கூறப்பட்டது.

தாம் கூறியும் கேளாது பாகிஸ்தான் அணுக்குண்டு தயாரிப்பதாக அமெரிக்காவும் குற்றம் சாட்டி வந்தது. ஆனால் கார்க்கில் பிரச்சனையில் மட்டும் அமெரிக்கா கூறியதும், பாகிஸ்தான் பணிந்தது; காட்டிய இடத்தில் கையொப்பம் போட்டது என்பது நம்பக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கவில்லை.

இந்த இணைப்பாட்டங்களை இந்திய அரசும் நன்கு புரிந்து கொண்டுள்ளது. இராஜதந்திரம் கருதி பகிரங்கமாக கூறாதுவிட்டாலும், இந்தியாவின் பிரசாரங்கள் மேற்படி இணைப்பாட்டத்தை முறியடிக்கும் விதமாகவே விளங்கியிருந்தன.

இந்தியப் படையின் தாக்குதல் காரணமாகவே கார்க்கில் மீண்டும் கைக்குள் வந்தது என்றே இந்தியா ஆணித்தரமாக அறிவித்துள்ளது. இந்தியப் படை போர் முனையில் பெற்ற வெற்றியை இந்திய மக்கள் அனைவரும் கொண்டாடியுமுள்ளனர்.

எனினும் பாரதிய ஜனதா கட்சிக்கு சில அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அதனை முன்னிட்டு அக்கட்சி செய்து வரும் பிரசாரங்கள் அமெரிக்காவுக்கு ஆதாயமாக அமைந்துவருகின்றன.

கார்க்கில் போர் ஏற்பட பாரதிய ஜனதா தலைமையிலான காபந்து அரசாங்கமே காரணம். பாதுகாப்பு நடவடிக்கையில் கோட்டை விட்டதால்தான் கார்க்கிலுக்குள் எதிரிகள் புகுந்தனர் என்று காங்கிரஸ் கூறிவருகிறது.

அரசியல் இலாப நோக்கோடு கூறப்படும் இக் குற்றச்சாட்டை மறுப்பதற்காக, போர் முனை வெற்றி பற்றியும், தமக்குக் கிடைத்த உலக ஆதரவு பற்றியும் பாரதிய ஜனதா கட்சி மக்களிடையே புளுகிப் புளுகி கூறவேண்டியுள்ளது.

“அமெரிக்காவையும் நமது பக்கம் நிற்க வைத்தோம். இது மிகப் பெரிய இராஜதந்திரி வெற்றி!” என்று அத்வானி போன்றோர் பிரசாரம் செய்கின்றனர்.

இந்திய உள்நாட்டு அரசியல் போட்டிகளால் மேற்கொள்ளப்படும் இத்தகைய பிரச்சாரங்கள், அமெரிக்காவின் சுயரூபத்தை மறைப்பதாகவும் மாறிவிட்டன.

அமெரிக்க சார்பு பத்திரிகைகளும் அமெரிக்கா ஏதோ நடுநிலை வகித்து நன்நோக்கோடு செயற்பட்டதுபோல செய்திகளை வெளியிட்டுள்ளன.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் செய்தியாளர்கள், பத்திரிகை முதலாளிகள், உள்ளூர் அரசியல்வாதிகள் போன்ற பலரை அமெரிக்கா தனது தூதரகங்கள் ஊடாக விலைக்கு வாங்கி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கார்க்கில் பிரச்சனையில் நடுநிலை நாடகம் ஆடிய சூட்டோடு, தென்னாசியாவில் தனது மேலாண்மையை நிலைநாட்டும் முயற்சிகளை அமெரிக்கா விரைவுபடுத்தியுள்ளது.

அந்த முயற்சிகளில் ஒன்றுதான் இலங்கையில் வெகு உறுதியாக தம் கால்களை ஊன்றிக் கொள்ளும் திட்டமாகும்.

இதற்கு அரசியல் ரீதியில் எதிர்ப்புகள் ஏற்படாதிருக்க, தமிழ்க் கட்சிகள் உட்பட பல்வேறு அரசியல் பிரமுகர்களை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வலைவீசிப் பிடித்துள்ளது.

முக்கிய நிகழ்ச்சிகள், விருந்துபசாரங்கள் என்ற போர்வையில் இந்த அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டு, மெல்ல மெல்ல வலைக்குள் சிக்கவைக்கப்பட்டுள்ளனர்.

செய்தி ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் சிலரும் சலுகைகள் மூலம் வளைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த கட்டமாக இராணுவரீதியில் பகிரங்கமாகவே தலையிடவும் அமெரிக்கா துணிந்துவிட்டது.

இராணுவத் தளபதியை அனுப்பி இலங்கைப் போர் முனைத் தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பது அமெரிக்காவின் எதிர்காலத் திட்டங்கள் சிலவற்றுக்கான முதற்படி என்றே கருதக்கூடியதாகவுள்ளது.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியா தற்போது தலையிடக்கூடிய சூழல் இல்லை என்பதை அமெரிக்கா நன்கு அறிந்துள்ளது. இந்த நிலையில், தனது தலையீட்டை மறைமுக இராணுவ உதவி என்ற நிலையில் இருந்து நேரடியான தலையீடு என்ற நிலைக்கு நகர்த்துவதே அமெரிக்காவின் எதிர்காலத் திட்டமாகும்.

படைகளுக்கு உதவி! பொதிக்கு ஆதரவு

அமைதிப்படை என்ற பெயரில் தனது படைகளை இலங்கையில் இறக்கி, தென்னாசியாவிலும் 'சமாதானக் காவலன்' வேடத்தோடு களம் கண்டு குந்தியிருப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்தை தனது பிடிக்குள் வைத்திருப்பதற்கும், தன்னைவிட்டால் போரில் வெல்ல வேறு மார்க்கமில்லை என்றளவுக்கு தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்தவுமே இராணுவ உதவிகளும், ஆலோசனைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இராணுவ ரீதியாக இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதோடு மட்டும் நிற்காது, சந்திரிக்கா அரசின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்துழைக்கவும் அமெரிக்கா முன்வந்துள்ளது.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு என்று தடை செய்தமை அந்த ஒத்துழைப்பின் முதற் கட்டமாகும். அத் தடை மூலம் சந்திரிக்கா அம்மையாரையும் ஆட்சியாளரையும் அமெரிக்கா மகிழ்வித்திருந்தது.

இப்போது அதன் அடுத்த கட்டத்தை மேற்கொள்ள அமெரிக்கா முயன்று வருகிறது. மிக ஆபத்தான இத் திட்டம் பற்றி தமிழ் பேசும் தரப்பு மிக விழிப்பாக இருந்தாக வேண்டும்.

சந்திரிக்கா அரசாங்கத்தின் அரைகுறை தீர்வுப் பொதிக்கு ஆதரவு தெரிவித்துள்ள அமெரிக்கா, அதற்கு ஆதரவு திரட்டும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.

அதற்கு முன்னோடியாக இரண்டு நடவடிக்கைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர், தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரைச் சந்தித்து அரசின் தீர்வுப் பொதிக்கு ஆதரவு கொடுக்குமாறு கோரியுள்ளார்.

இரண்டாவது நடவடிக்கை, உலகவங்கி பிரதிநிதிகள் ஊடாக நடந்துள்ளது.

தமிழ்க் கட்சித் தலைவர்கள், மற்றும் தனிப்பட்ட பிரமுகர்களைச் சந்தித்து தமிழ் பேசும் தரப்பு எந்தளவுக்கு இறங்கி வரத் தயாராக உள்ளது என்று உலக வங்கிப் பிரதிநிதிகள் நாடி பிடிக்கறிந்துள்ளனர்.

உலக வங்கிப் பிரதிநிதிகளை சந்தித்தவர்களில் குமார் பொன்னம்பலம் போன்ற சிலர் மட்டுமே உறுதியான நிலைப்பாடுகளை முன்வைத்திருந்தனர்.

ஏனைய பிரமுகர்கள் சிலரிடம் இது பற்றி குறிப்பிட்ட உலக வங்கிப் பிரமுகர்கள் “குமார் பொன்னம்பலம் போன்றோர் அதிகமாகக் கேட்கிறார்கள். கடுமையான நிலையில் நிற்கிறார்கள்!” என்று குறைப்பட்டுமுள்ளனர். இவ்வாறு கூறியதின் மூலம் அந்த பிரமுகர்களிடம் குறைந்த பட்ச நிலைப்பாடுகளை ஊக்குவிக்கவே முயன்றுள்ளனர்.

இதேவேளை த.வி.கூட்டணி தலைவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் பா.உ கொல்லப்பட்டமைத் தொடர்பாக அமெரிக்க தூதரகம் மட்டுமன்றி, அமெரிக்க அரசும் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்தியத் தூதரகம் கண்டித்திருந்த போதும் கொலைக்குக் காரணம் யார் என்று குற்றம் சாட்டவில்லை. இந்திய அரசும் கண்டனம் செய்யவில்லை.

ஆனால் அமெரிக்கா புலிகள்மீது நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளது. புலிகளை தாம் தடை செய்ததையும் அந்த அறிக்கையில் மறுபடி நினைவூட்டியுள்ளது.

இலங்கையில் அமெரிக்காவின் மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவராக திகழ்ந்தவர் நீலன் திருச்செல்வம். நீலன் இங்கு அரசியலில் ஈடுபட்டபோது ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற தமிழ் அமைப்புக்கள் அவரை அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் முகவர் என்றே குற்றம் சாட்டியிருந்தன.

அரசாங்கத்தின் பொதியை உருவாக்குவதில் நீலனும் முக்கிய பங்கு வகித்திருந்தார். தமிழ் பேசும் தரப்புக்குள் சிறந்த கல்விமான் ஒருவர் தமக்கும், அரசாங்கத்துக்கும் அதன் பொதிக்கும் ஆதரவாளராக இருப்பதையிட்டு அமெரிக்காவும் மகிழ்ச்சி கொண்டிருந்தது.

இலங்கையில் தனது தலையீடு, தீர்வுப் பொதிக்கு ஆதரவு திரட்டுவது போன்ற செயற்பாடுகளுக்கு அரசியல் சாணக்கியமான விளக்கங்களை முன்வைப்பதற்கு, ஏனைய தமிழ்க் கட்சிகளைவிட நீலன் திருச்செல்வம் போன்ற விற்பனர்களையே அமெரிக்கா நம்பியிருந்தது. அவரது இழப்பு அமெரிக்காவுக்கு உண்மையாகவே அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

எனவே, டாக்டர் நீலன் திருச்செல்வத்தின் மறைவு குறித்து அமெரிக்கா நேரடியாக கண்டித்திருப்பதும், அமெரிக்கா இங்கு நடைபெறும் அரசியல், இராணுவ நிகழ்வுகளில் முக்கிய கவனம் செலுத்தி வருவதையே துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்த அபாயகரமான வியூகங்களும், திட்டங்களும் இங்குள்ள தமிழ் பேசும் தரப்புக்கு மட்டுமன்றி, இந்தியப் பாதுகாப்புக்கும் பெரும் சவாலை உருவாக்கக் கூடியவையாகும்.

இந்தியாவை நிரந்தரமாக கண்காணிக்க வசதியாக இலங்கையில் குந்திக் கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது. அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிய ஆரம்பித்துவிட்டன.

சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

வட்டுக் கோட்டைக்கு போகும் பாதை எதுவென்று கேட்டால், துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு என்று கூறினாராம் ஒருவர்.

வன்னிக்கு உணவு அனுப்புமாறு கேட்டால், பஸ்களில் மக்களை மந்தைகள்போல அடைத்து அனுப்பியதும் அது மாதிரித்தான் இருக்கிறது.

தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் போன்றவற்றின் உதவியோடு மிகச் சிறந்த பிரசார நாடகம் ஒன்றைப் படையினர் நடத்தி முடித்துள்ளனர்.

வவுனியாவில் தங்கியுள்ள தமிழ் மக்கள் பாஸ் இன்றி நடமாட முடியாது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் செல்ல முடியாது. பாதுகாப்பு காரணங்களைக் கூறியே அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டுக்கு பயணம் போவதாயின் பொலிஸ் பதிவு இருந்தால்கூட, பாதுகாப்பு அமைச்சின் 'கிளியரன்ஸ்' பெறுவதற்காக மாதக்கணக்காக காத்திருக்க வேண்டியுள்ளது.

யாழ் குடாநாட்டில் ஒரு பகுதிக்கு ஒரு விசேஷ அடையாள அட்டை. பத்து வயதுச் சிறுவனுக்கும் அடையாள அட்டை. மீன்பிடிப்பது என்றால் வலையுடனும் கோவணத்துடனும்தான் செல்ல வேண்டும்.

பாதுகாப்புக்காக இவையெல்லாம் அவசியம் என்று அரசாங்கமும், படைகளும் கூறிவருகின்றன.

ஆனால் திடீரென்று ஒருநாள் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் இரண்டாயிரம் பேரை போர் முனைப் பகுதி ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் தள்ளிவிட படையினர் முயன்றனர்.

இதன்மூலம் ஒரு உண்மையை படையினர் ஏற்பதாகிவிட்டது. புலிகளும், தமிழர்களும் ஒன்றுதான். எனவே தமிழர்களை புலிகள் ஏற்பதற்கு எந்த விதிமுறையும் தேவையில்லை. ஆனால் தமிழர்களை சிங்களப் பகுதிகளுக்குள் அனுமதிக்கும்போதுதான் முன்னேற்பாடுகள், 'கிளியரன்ஸ்', ஆய்வுகள் தேவை.

தமிழ் மக்களை மந்தைகள்போல லொறிகளிலும், பஸ்களிலும் அழைத்துச் சென்று புலிகளது காவலரண்களை நோக்கி அனுப்பி இருக்கின்றனர்.

இதேபோல ஒரு நூறு பேரை படையினரது முன்னரங்கப் பகுதிகள் நோக்கி புலிகள் அனுப்பியிருந்தால் என்னாகியிருக்கும்? என்று யோசிக்க வேண்டும்.

சண்டை நடைபெறும் களமுனையில் மறுதரப்பின் அனுமதி பெறாமல் இப்படி மக்களை அனுப்பியது மிகப் பாரிய தவறு.

மனித உரிமை அமைப்புக்கள் முதற்கொண்டு தமிழ்க் கட்சிகள்வரை இதனையிட்டு கண்டிக்கவில்லை. 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது.' என்பது போலத்தான் படைத்தரப்பு விளையாடியிருக்கிறது.

வோக்கி டோக்கி ஊடாக பேசுமாறு மக்களிடம் கூறிவிட்டு, அதனை வீடியோ கமராக்களால் படமாக்கி உள்ளனர். மறுமுனையில் பேசியது புலிகளா இல்லையா? என்பது பாவம் மக்களுக்கு எப்படித் தெரியும்?

மந்தைகள் போல மக்களை ஏற்றி...

புலிகளோடு தொடர்பு கொள்வது குற்றம் என்கிறது புலிகள்மீதான அரசின் தடைச்சட்டம். ஆனால் படையினரே வோக்கி டோக்கியைக் கொடுத்து புலிகளுடன் பேசுமாறு மக்களிடம் கூறுவது சட்டப்படி தப்பில்லையா?

களமுனையில் மிதிவெடிகள் இருக்கும். பொறிகள் இருக்கும். எத்தனையோ இரகசியமான ஏற்பாடுகள் இருக்கும். அப்படியிருக்க மக்களை அப்பாதையால் தள்ளிவிட எப்படித் துணிந்தனர்?

உண்மையாக மக்களை அனுப்பி வைக்க நினைத்திருந்தால், தொண்டர் நிறுவனங்களூடாக புலிகளை அணுகியிருக்க வேண்டும். புலிகளுக்கு தெரியப்படுத்தி இருக்கவேண்டும்.

ஆனால் படையினர் செய்தி ஊடகங்களை சேர்ந்தோரை கமராக்கள் சகிதம் அழைப்பதில் தான் குறியாக இருந்தனர்.

தாம் மக்களை அனுப்பிவைக்க புலிகள் திருப்பி அனுப்பவேண்டும். அதனைச் செய்தியாளர்கள் படம்பிடிக்க வேண்டும். என்று முன்கூட்டியே திட்டமிடப்பட்டுவிட்டது.

ஐ.சி.ஆர்.சி. மூலம் புலிகளுக்கு தெரியப் படுத்தப்பட்டதாக படைத்தரப்பு கூறியது. அது பச்சைப் பொய் என்று மறுத்துவிட்டது ஐ.சி.ஆர்.சி. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

புலிகள் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களையே தீர்த்தனர். 'புலிகள் பொது மக்கள்மீது சூடு' என்று அரச பத்திரிகை தலைப்புச் செய்தி போட்டது.

வவுனியா வந்து திரும்ப முடியாத மக்களை அவர்கள் முன்னர் வந்த பாதை ஊடாகவே திருப்பி அனுப்பியிருக்கலாமே.

'உங்கள் மக்களை திருப்பி அனுப்புவது என்றால், உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பாதையை திறவுங்கள்' என்று புலிகளிடம் கூறாமல் கூறுவது போன்றே நிகழ்வுகள் காணப்படுகின்றன.

'பாதைத் திறப்புக்கே போர். பாதையை திறப்பது தமிழ் மக்களது போக்குவரத்தை இலகுவாக்குவதற்கே' என்று அரசு கூறியது.

ஆனால் படையினர் கைப்பற்றிய பாதைகள் மூடப்படுகின்றன. புலிகள்தான் பாதையைத் திறக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. ஆக, வன்னி படை நடவடிக்கை பாதைத் திறப்புக்கு என்று கூறப்பட்டு, பாதை அடைப்பில் நிற்கிறது.

பஸ்களில் ஏற்றப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் சிலர் கொழும்பு வருவதற்கு படாதபாடு பட்டுக் கொண்டிருந்தவர்கள். வேறு சிலர் வைத்திய தேவைகளுக்காக வந்து தங்கியிருந்தவர்கள். அவர்களும் கட்டாயமாக வன்னிக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த நாடகம் சாயம் வெளுத்துப் போய் விட்டது. 30.06.99 அன்று பல்லாயிரக்கணக்கான வவுனியா மாணவர்கள் வன்னிக்கு உணவு அனுப்புமாறு திரண்டெழுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் திருப்பி அனுப்பப்பட்டு திரும்ப வந்த மக்களும் கலந்து கொண்டதோடு, அரசுக்கு தம் எதிர்ப்பை காண்பிக்க அரச செயலக கண்ணாடிகளையும் கைகளால் உடைத்தே நொறுக்கிவிட்டனர்.

வன்னியில் இருந்து அவர்கள் வந்த பாதையை மூடிவைத்துக்கொண்டு, புலிகள் புதிய பாதையை திறக்க வேண்டும் என்று படையினர் மல்லுக் கட்டியது எவ்விதத்திலும் சரியாகப்படவில்லை.

படிப்பகம்

உண்மைத் தொடர்

அதிர் இடி 73

கடந்தவாரம்

தனது மூன்று மனைவியரை விவாகரத்து செய்த காரணங்களை அறிக்கையாக வெளியிடுகிறான் அமீன். மலயாமு, நோரா ஆகியோர் சொந்த வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினான். மலயாமு சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகிறது.

இனி....

இடி அமீன்

தன்மீது அபாண்டமாக பழி சுமத்திய இடி அமீன்மீது மலயாமுவுக்கு கடும் கோபம் ஏற்பட்டது.

உண்மைகளைக் கூறிவிடத் தீர்மானித்தாள். பத்திரிகையாளர்கள் சிலரை இரகசியமாகச் சந்தித்து தான் அறிந்த பல உண்மைகளைக் கூறினாள்.

மருத்துவமனைக்குச் சென்று அவளைச் சந்தித்தனர் பத்திரிகையாளர்கள்.

மலயாமு கூறிய உண்மைகளை உள்நாட்டில் வெளியிட அவர்களுக்குத் துணிச்சல் கிடையாது.

அதனால் வெளிநாட்டுச்- செய்தி நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி வைத்தனர்.

உகண்டாவின் வெளிநாட்டு அமைச்சராக அமீனால் நியமிக்கப்பட்டு பின்னர் அமீனுடன் முரண்பாடு ஏற்பட்டு நாட்டைவிட்டுத் தப்பியோடியவர் வானும் கிபெடி.

தனது சகோதரர்தான் அவர் என்று மலயாமு கூறியிருந்தாள். அதுவரை அந்த உண்மை யாருக்கும் தெரியாது.

தனது உறவினர்களுக்குப் பதவிகள் கொடுக்கும்போது, அவர்களை தனது உறவினர்கள் என்று அமீன் காண்பிக்க மாட்டான்.

உறவினர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டுவிடக்கூடாதே என்று முன்யோசனையுடன் செயற்பட்டான்.

மலயாமு வெளியிட்ட இன்னொரு தகவல் அமீனை கோபத்தின் உச்சிக்குக் கொண்டு போனது.

'அமீன் பெண் வேட்டைக்காரர். தனக்கு பிடித்துவிட்டால் அந்தப் பெண்ணை அடையாமல் விடமாட்டார்.

புதிது புதிதாக பெண்களைத் தேடி இன்ப வேட்டை நடத்திக் கொண்டிருந்ததால், மனைவியருடன் பொழுதைச் செலவிட நேரமிருக்கவில்லை.

அமீனின் மனைவியர் தங்கள் ஆசைகளை அடக்கிக்கொண்டு ஆடம்பர மாளிகைகளுக்குள் அடைபட்டுக் கிடந்தனர்.

எத்தனை நாட்கள்தான் இவ்வாறு ஆசைகளை அடக்கி வைக்க முடியும்?

இளமையும், தாபமும் இருக்கும்போது அனுபவிக்க வேண்டாமா?

தங்களை வெறும் ஜடங்களாக- மரக்கட்டைகளாக நினைத்துக் கொண்டிருக்கும் அமீனை பழிவாங்க வேண்டாமா?

அவனுக்கு இனிமை காண தினம் ஒரு பெண் தேவை. எங்களுக்கு தினம்தோறும் தனிமைதானா?

அமீனின் மனைவியர் தங்கள் ஆசைகளுக்கு வடிகால் தேட ஆரம்பித்தனர். அதனை அறிந்த அமீன் தன் மனைவியரில் ஒருத்தியைக் கொலை செய்தான்.

அக் கொலையின் பின்னர் ஏனைய மனைவியர்கள் காதலர்களைத் தேட மாட்டார்கள்- தேடத் துணியமாட்டார்கள் என்று நினைத்தான்.

ஆனால் அச்சத்தால் ஆசை அடங்குமா? உயிர் மேல் ஆசையைவிட உடல் தூண்டிய ஆசை பெரிதாக இருந்தது.

அமீனின் மனைவியரில் ஒருத்தியான 'கே' ஒரு டாக்டரை வளைத்துக் கொண்டாள்.

முலாகோ மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் பீட்டர் மப்லு முகாசா.

அமீனின் மனைவியருக்கு நோய், நொடி என்றால் எந்தப் பெரிய டாக்டரானாலும் அவர்களது மாளிகைக்குச் சென்றுதான் பரிசோதிக்க வேண்டும்.

அவ்வாறு ஒரு முறை 'கே'யை பரிசோதிக்க வந்தார் டாக்டர் மப்லு முகாசா.

அந்த டாக்டருக்கு திருமணமாகி பல பிள்ளைகளும் இருக்கின்றன. ஆனாலும் இளமை குன்றாது கம்பீர ஆண்மகனாகத் தோற்றமளித்தார்.

டாக்டர் முகாசோவுக்கும் 'கே'யின் அழகான உடம்புமீது ஆசை ஏற்பட்டது. 'கே' மெல்லிய உடல்வாகு கொண்டவள். கவர்ச்சியானவள். எங்கெங்கு உயர்ச்சி தேவையோ அங்கெல்லாம் உயர்ந்தும், எங்கெங்கு தாழ்வு தேவையோ அங்கெல்லாம் தாழ்வுடன் கூடிய உடல்வாகு அவளுக்கு.

சில பயிற்சிகள் செய்து உடலை கட்டுக் குலையாது பத்திரமாக வைத்திருந்தாள்.

டாக்டர் முகாசோ அடிக்கடி 'கே'யை பரிசோதிக்க ஆரம்பித்தார். 'கே'யும் அவரை முழுதாகப் பரிசோதித்தாள்.

'கே'க்கு காதலன் இருந்தது போலவே 'மலயாமு', 'நோரா' ஆகியோருக்கும் காதலர்கள் இருந்தனர்.

நோரா 17 வயது பையுன் ஒருவனை தன் காதலனாக ஏற்றிருந்தாள். அனுபவம் இல்லாத அந்தப் பையனுக்கு நோராதான் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தாள்.

'மலயாமு' தன் முன்னாள் காதலனை மறுபடி தேடிப்பிடித்துக் கொண்டாள்.

இத் தகவல்களை அறிந்த பின்னர்தான் அமீன் விவாகரத்து செய்யும் அறிவிப்பை வெளியிட்டான்.

இவையெல்லாம் மலயாமு சொல்லித்தான் வெளியுலகம் அறிந்தது. வெளிநாட்டு செய்தித் தாள்களிலும் மலயாமு கூறிய தகவல்கள் பரபரப்பாக வெளியாகி இருந்தன.

வெளிநாடுகளில் உள்ள உகண்டா தூதரகங்கள் மூலமாக அமீனுக்கு உடனடியாகத் தகவல் கிடைத்தது.

கோபத்தின் உச்சிக்கே போய்விட்டான் அமீன். புலனாய்வுப் பிரிவுக்கு போன் செய்து, பொறுப்பாளரை பிடித்து, **"உடனடியாக முலாகோ மருத்துவமனைக்கு பாதுகாப்பு போடு. மலயாமுவை சந்திக்கும் ஆட்கள் பற்றிய தகவல்களை திரட்ட ஏற்பாடு செய்" என்று உத்தரவிட்டான்.**

உடனடியாகப் புறப்பட்டு மெய்காவலர் புடைசூழ மருத்துவமனைக்கு சென்றான்.

மலயாமுவின் கால் ஒன்றும் கை ஒன்றும் பிளாஸ்டர் போடப்பட்டு, கொழுக்கிகள் மூலம் மேலே உயர்த்தப்பட்டிருந்தன.

அதனைப் பார்த்தும் அமீனுக்கு கொஞ்சமும் இரக்கம் ஏற்படவில்லை.

தனது மெய்க்காவலர்கள், மருத்துவ ஊழியர்கள் ஆகியோரின் முன்பாகவே மலயாமுவை திட்டித்தீர்த்தான்.

"உன் சொந்த வாழ்க்கையைக்கூட சிறப்பாக நடத்த முடியாத துர்ப்பாக்கியசாலி நீ! என்னைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் ஏனடி புளுகுகிறாய்?"

மலயாமுவும் பதிலுக்கு கத்தினாள், **"பெண் பித்தனான உனக்கு மனைவிகள், பிள்ளைகள் ஏன்? எங்களையும் வைத்துக் கொண்டு ஏன் இப்படி அலைகிறாய்? என்னைக் கொல்ல சதி செய்தது நீதான்! எனக்குத் தெரியும் என் காரை மோதிய வாகனத்தில் இருந்தவன் உனது மெய்காப்பாளரில் ஒருவன்தான்!"** என்று மூச்சுவிடாமல் கத்தினாள்.

பலர் முன்பாக தன் மரியாதை கப்பலேறுவதை உணர்ந்த அமீனுக்கு, அத்தனைபேர் முன்பாக அவளுடன் மோதியது மடத்தனம் என்பது அப்போதுதான் புரிந்தது.

"இவளுக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. இப்படியே புலம்பிக் கொண்டிருந்தால் என் முன்னாள் **மனைவி** என்றுகூட பார்க்காது பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு மாற்றி விடுவார்கள்!" என்று கூறிவிட்டு விறுவிறுவென்று சென்றுவிட்டான்.

தன் கோபத்தை மலயாமுவின் குடும்பத்தின்மீது காட்டினான் அமீன்.

மலயாமுவின் தகப்பனாரான கிபெடி தனது 70 வயதிலும் துணிக்கடை ஒன்றை நடத்தி வந்தார்.

அமீனின் உத்தரவினால் சிவில் உடையில் சென்ற மெய்காவலர்கள் அக் கடையை சூறையாடினார்கள்.

அதனால் மலயாமு பயந்து போனாள். தனது குடும்பத்தை ஒழித்துக் கட்ட அமீன் தயங்கமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்.

தருவது ரசிகன்

மேலும் சில வாரங்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற மலயாமு வீடுதிரும்பினாள்.

இனிமேலும் உகண்டாவில் தங்கி இருந்தால் அமீனின் பழிவாங்கலுக்குத் தப்ப முடியாது என்று நினைத்தாள்.

தனக்கும் அமீனுக்கும் பிறந்த ஆறு பிள்ளைகளையும் அமீனிடம் ஒப்படைத்தாள்.

மறுப்புச் சொல்லாமல் தன் பிள்ளைகளை ஏற்றுக்கொண்டான் அமீன். மேலதிக சிகிச்சைக்காக என்று வெளிநாடு சென்றுவிட்டாள் மலயாமு.

மலயாமு வெளியேறிய பின்னர் அமீனின் மற்றொரு மனைவியான 'கே'க்கு பல அதிர்ச்சிகள் காத்திருந்தன.

கேயை அமீன் விவாகரத்து செய்ததை அறிந்ததும், அவளது தந்தையாரான அட்ரௌ வேதனையடைந்தார். அமீனிடம் சென்று தன் மகளுக்கு இரக்கம் காட்டுமாறு மன்றாடினார்.

அவரது மன்றாட்டத்தால் மனமாற்றம் ஏற்பட்டது போல அமீன் நடித்தான்! "உங்கள் வார்த்தைக்காக கேயை மன்னிக்கிறேன். அவள் தவறுகளை மறக்கிறேன். என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்... இல்லை வேண்டாம், அவள் மிகவும் கவலையில் மூழ்கியிருப்பாள். நானே வருகிறேன் என்று சொல்லுங்கள். எனக்குப் பிடித்த தவளை சூப் செய்து வைக்கச் சொல்லுங்கள்!" என்று அவரை அனுப்பிவைத்தான்.

தன் மனைவியரான மலயாமு, கே, நோரா ஆகியோர் காதலர்களுடன் லீலை புரிகிறார்கள் என்று தகவல் அறிந்ததும், கொடூரமான கோபம் அமீனுக்குள் குடியேறியது.

அவர்களை உடனடியாகக் கொல்வதை விட, உயிரோடு வைத்திருந்து வதைக்கும் திட்டமும் அவன் மூளையில் உருவானது.

மலயாமுவின் காரை விபத்துக்குள்ளாக்க கட்டளையிட்டதும் அமீன்தான். உயிருக்கு அபாயம் நேராமல் விபத்து ஏற்படுத்தும்படிதான் கூறியிருந்தான்.

ஏனைய மனைவியரைவிட மலயாமுமீது அமீனுக்கு சற்றுப் பரிவு இருந்தது. ஆறு பிள்ளைகளைப் பெறுமளவுக்கு அவளோடு பலகாலம் ஒன்றாயிருந்தவன் அமீன்.

அதனால் தான் விபத்து ஏற்படுத்தியதோடும், அவள் கடையைச் சூறையாடியதோடும் நிறுத்திக் கொண்டான். அவள் வெளிநாடு செல்லவும் அனுமதித்தான்.

ஆனால் 'கே'யை அப்படிச் சுலபமாக தப்ப விட அவன் நினைக்கவில்லை. 'தக்க பாடம் புகட்டுகிறேன்பார்!' என்று மனதில் கறுவிக் கொண்டான்.

கேயை சந்தித்ததும் கட்டித் தழுவிக் கொண்டான். இறுக்கமான தழுவல், அப்படியே நசித்து கொன்றுவிடப் போகிறானோ என்று கே பயந்து போகுமளவுக்கு இறுக்கினான்.

"என்மீது கோபமா? உன்மீது என் உயிரையே வைத்திருந்தவன் நான். எனக்கு ஏனம்மா துரோகம் செய்தாய்?" என்று கேட்டான்.

அக் கேள்வியில் அவள் தாக்குண்டாள். என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்துப் போனாள்.

அமீனே அவளை தேற்றினான், **"நடந்ததை மறப்போம். நடக்கப்போவதை நினைப்போம். அதற்கு முன்னர் நம்மை நாமே துறப்போம்!"** என்று கண்சிமிட்டியபடியே அவளது ஆடைகளை ஒவ்வொன்றாக உரித்துப் போட்டான். தன்னைத்தானே உரித்தான்.

அன்று அமீன் வழக்கத்துக்கு மாறாக அவளை முரட்டுத்தனமாகக் கையாண்டான். அதனால் அவள் தாங்கமுடியாமல் அழுதுவிட்டாள்.

அவளது கண்ணீரைத் தொட்டு தன் நாவில் வைத்து ருசி பார்த்துவிட்டு, **'உப்புக் கரிக்கிறது. இதுவரை செந்நீர் வாசனை, செந்நீர் ருசி பார்த்திருக்கிறேன். இன்றுதான் கண்ணீர் ருசி பார்த்திருக்கிறேன்!"** என்று அந்த அறையை அதிரும்படி சிரித்தான்.

"நீ போதும் என்று கூறுமளவுக்கு சுகம் தந்துவிட்டேன். இனிமேல் இப்படித்தான் தந்து கொண்டிருப்பேன். உனக்கு இன்னொருவன் இனித் தேவையில்லையல்லவா?" என்று கேட்டு குரூரமாக புன்னகைத்தான்.

'கே' பயந்து போனாள். ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப்போகிறது என்று அவளது உள்மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

ஆனால் அமீன் அவளை வதைத்து முடித்த பின்னர், அவள் செய்து வைத்திருந்த தவளை சூப்பை ருசித்துக் குடித்தான்.

"இன்று எல்லாமே நன்றாக இருந்தன. ருசியாக இருந்தன. நான் சூப்பை மட்டும் சொல்லவில்லை!" என்று கண்ணடித்துவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

அவன் விடைபெற்றுச்சென்ற சில மணி நேரங்களுக்குள் 'கே'யின் மாளிகைக் கதவு தட்டப்பட்டது.

திறந்தபோது பொலிசார் நின்றனர். "உங்கள் மாளிகையை சோதனையிடப் போகிறோம்!" என்றார் உயரதிகாரி.

"யார் உத்தரவு?"

பதில் வந்தது உயரதிகாரியிடம் இருந்து, "அதிபரின் உத்தரவு!"

கே அதிர்ந்து ஒதுங்கி நிற்க, பொலிசார் உள்ளே புகுந்தனர்.

(இடி தொடரும்)

துப்பறிந்த பெண்

துப்பறியும் கலையிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக சாதனைகள் புரிந்து வருகின்றனர்.

நம்நாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பில் பெண்கள் உளவுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியாவில் மும்பை நகரில் ரஜினி பண்டிப் என்னும் பெண் கொலை வழக்கு ஒன்றில் துப்பறிந்து பெரும் பாராட்டுப் பெற்றுள்ளார்.

கொலை ஒன்று தொடர்பாக துப்பறிவதற்காக வீட்டில் வேலை செய்யும் பெண்ணாக சேர்ந்தார். அந்த வீட்டுப் பெண்மணி தன் ஆண் நண்பருடன் சேர்ந்து கணவனைக் கொலை செய்துவிட்டதாக பொலிசுக்கு சந்தேகம்.

அதனை நிரூபிக்க ஆதரம் கிடைக்கவில்லை. அதனால் பணிப்பெண்ணாக ஆறு மாத காலம் அந்த வீட்டில் வேலை செய்தார். எஜமானியின் திட்டுக்களையும் பொறுத்துக் கொண்டு சாதுவாக வேலை பார்த்தார்.

பொறுமையாக துப்பறிந்ததுக்கு பலன் கிடைத்தது. அந்த பெண்ணும் காதலனும் அக் கொலை பற்றி ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்ததை ரஜினி ஒட்டுக் கேட்டார். தன்னிடம் இருந்த பதிவுக் கருவியில் பதிவும் செய்து கொண்டார்.

பின்னர் கண்ணாடி பாத்திரம் ஒன்றை உடைத்து தன் காலில் காயம் ஏற்படுத்தினார். அதனை சாட்டாக வைத்து மருத்துவமனை செல்ல அனுமதி வாங்கினார். மேலதிகாரிகளுக்கு தான் சேகரித்த தகவலைக் கொடுத்தார்.

காதல் ஜோடி கைது செய்யப்பட்டு இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறது.

பெண்களிடம் இரகசியம் தங்காது. இரகசிய வேலைகளை ஒப்படைக்கக் கூடாது என்பதெல்லாம் அபத்தமான, அசிங்கமான வாதங்கள்.

தமிழ்ச் சினிமாவிலும், அதனைப் பார்த்து மட்டும் அறிவைப் பெறும் நம் நாட்டு தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் சிலரிடமும் அந்த அபத்தம் போகவில்லை.

கும்ளேயின் காதல்

இந்திய அணி வீரர்கள் அடுத்தடுத்து திருமணம் செய்து கொண்டனர். சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே நடிகை ஷோபனாவை காதலிப்பதாக முன்பு தகவல்கள் வெளியாகி இருந்தன.

ஆனால் கும்ளே வீட்டில் ஒரு நடிகையைத் திருமணம் செய்ய அனுமதியில்லை. ஷோபனாவும் மார்க்கெட் இழந்த நடிகையானதால் அந்தக் காதல் கதை முற்றுப் பெற்றது.

தற்போது மணந்துள்ள சேத்தனாவையும் காதலித்தே கைப்பிடித்துள்ளார் கும்ளே. சேத்தனா விவாகரத்துப் பெற்றவர். ஒரு குழந்தையும் இருக்கிறது. கணவரது கொடுமையால்தான் விவாகரத்து செய்து கொண்டார்.

இத் திருமணத்திற்கு கும்ளே வீட்டில் எதிர்ப்பு இருக்கவில்லை. சேத்தனா நல்ல பெண் என்பதால் கும்ளேயின் வீட்டில் பச்சைக்கொடி.

வெங்கடேஷ் பிரசாத் சில வருடங்களுக்கு முன்னர் விதவைப் பெண் ஒருவரையே திருமணம் செய்திருந்தார். தற்போது இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது.

பிரசாத்தும், கும்ளேயும் நல்ல காரியத்தை செய்துள்ளனர் என்று இந்தியப் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன.

அடுத்த நூற்றாண்டில்

பிரபல டென்னிஸ் வீராங்கனை அரன்ட்சா சாஞ்சஸ். இவர் ஸ்பெயின் நட்டைச் சேர்ந்தவர். ஃபிரான்ஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் மூன்று முறை சாம்பியன் பட்டத்தை வென்றவர்.

சாஞ்சஸ்ஆடுகிறார் என்றால் ரசிகர்கள் மைதானத்தில் மொய்த்துக் கிடப்பார்கள். கவர்ச்சி வீராங்கனைகளில் ஒருவர்.

சாஞ்சஸ்மீது பலகோடி ரசிகர்கள் பைத்தியமாக அலைய, சாஞ்சஸ் பைத்தியமாக அலைந்தது ஒரு நிருபரின் பின்னால்.

அந்த நிருபரின் பெயர் ஜோன் வெஜில்ஸ். விளையாட்டுத்துறை நிருபராக பணியாற்றுகிறார்.

பத்திரிகை பேட்டிகளுக்காக சந்தித்த போது காதல் மலர்ந்தது. இன்று பெரும் விருட்சமாகிவிட்டது.

தமது காதலை பகிரங்கமாக அறிவித்துள்ள இந்த ஜோடி, தமது திருமணம் அடுத்த நூற்றாண்டில் நடக்கப்போவதாகவும் கூறியுள்ளது.

கோடி கோடியாக பணம். மனதுக்குப் பிடித்த மணாளர். சாஞ்சஸ் கொடுத்து வைத்தவர்தான்.

பிறந்த நாள்

இந்த பழுத்த பழங்கள் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்னரே முரசில் அறிந்திருப்பீர்கள்.

தற்போது இவர்களுக்கு 107 வயது. ஜப்பானைச் சேர்ந்த இந்த இரட்டையர்கள் தமது 107வது பிறந்த நாளைக் கொண்டாட ஹொகைடோவுக்கு செல்கிறார்கள். அதற்காக விமான நிலையம் சென்றபோது இப் புகைப்படம் எடுக்கப்பட்டது.

இதில் ஒரு விசேஷம் என்ன தெரியுமா? இந்த மூதாட்டிகளை பராமரிக்கும் இரண்டு பணிப் பெண்களும் இரட்டையர்கள்தான். சக்கர நாற்காலியின் பின்பு நிற்பவர்கள் அந்த இரட்டையர்கள்தான்.

காதல் ஜோடி

இளவரசர் சாள்ஸ்சும், கமீலாவும் இப்போது பகிரங்கமாகவே காரில் சுற்றுகின்றனர்.

இருவரும் ஒன்றாகவே தங்கியுள்ளனர். முன்னர் இரகசியமாக சந்தித்து தனிமையில் இனிமை கண்டனர்.

இப்போது உலகம் அறிந்த காதல் ஜோடிகளாக உல்லாசத்தில் மிதக்கிறார்கள்.

சமீபத்தில் இலண்டன் வீதிகளில் இவர்கள் காரில் நெருக்கமாக அமர்ந்து பயணம் செய்தனர். புகைப்படக்காரர்கள் 'கிளிக்' செய்தனர். அது பற்றி இந்த காதல் ஜோடி கவலையே படவில்லை.

அரச குடும்பம் மட்டுமல்லாது இளவரசர்கள் வில்லியம், ஹரி ஆகியோரும் இவர்களது காதலுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டனர்.

"இவர்கள் இப்படியே நம் முன்பாக சுற்றுவதைவிட, தம்பதியாகட்டும். அதுதான் இவர்கள் திருமணம் செய்வதை நாம் ஆதரிக்கிறோம்" என்று பிரிட்டிஷ் மக்கள் குறிப்பாக இலண்டன் வாசிகள் பலர் கூறுகின்றனராம்.

படிப்பகம்



பிரிப்பு

ஒட்டிப் பிறந்த இரட்டையர் பற்றி பல தகவல்களை தகவல் பெட்டி தந்திருக்கிறது.

இங்குள்ள இரட்டைக் குழந்தைகள் மொஸாம்பிக் நாட்டு பெற்றோருக்கு பிறந்தவை. இவை வயிற்றோடு ஒட்டிய நிலையில் பிறந்தன.

ஒட்டிப் பிறந்து 17 மாதங்களின் பின்னரே இவர்களுக்கு வெட்டிப் பிரிக்கும் சத்திர சிகிச்சை நடந்தது.

14 மணிநேரம் சத்திர சிகிச்சை நடைபெற்றது. இறுதியில்... ஆம்... இறுதியில் வெற்றிகரமாக பிரிக்கப்பட்டு சிகிச்சை பூரண வெற்றி பெற்றது.

தற்போது இந்த ஆண். பெண் குழந்தைகள் தனித் தனியாக நலமாக உள்ளனர். ●

பரிசோதனை

குயிலைப் பிடித்து கூண்டில் அடைத்து பாடச் சொல்லுகின்ற உலகம், இந்த குண்டு மலையைப் பிடித்து பெட்டிக்குள் அடைத்து உடம்பை வாடச் சொல்லுகிறதோ?

அதுதான் இல்லை.

இது ஒரு நவீன கருவி. ஜப்பானிய சுமோ மல்யுத்த வீரரின் உடலின் கொழுப்பையும், அவரது தசையின் பரிமாணங்களை இக் கருவிமூலம் அளக்கலாம்.

கொழுப்பு அளவுக்குமேல் சேர்ந்தால் மூக்கு முட்ட சாப்பிடுவதில் சிறிது குறைத்துக் கொள்வார். அதிகம் குறைத்தால் உடம்பு கேட்குமா?! ●

சங்கம் கண்டவர்

இந்த குள்ள மனிதரின் பெயர், சதக் குமிஸ் மல்லா. வயது: 50. சவுதி அரேபியாவில் குள்ளர்களுக்கான சங்கத்தை உருவாக்கியிருக்கிறார். உலகில் உள்ள குள்ள மனிதர்களுக்காக குரல் கொடுக்கவே இந்தச் சங்கம்.

இவரது உயரம் ஆக. 86 சென்ரிமீட்டர். (34 அங்குலம்) மட்டும்தான்.

இவருக்கு திருமணமாகிவிட்டதா? என்று கேட்கிறீர்களா? அந்த விஷயத்தில் ஆள் படு கில்லாடி. ஒன்றுக்கு இரண்டு மனைவியர். 18 பிள்ளைகள். இதில் 11 பேர் ஆண்கள். 7 பேர் பெண்கள். ஆண்களில் இருவர் இரட்டைக் குழந்தைகள். இரட்டைக் குழந்தைகள் மட்டும் இவரைப் போல குள்ளமாக உள்ளன.

முதலில் அரபு நாட்டு குள்ளர்களை ஒன்றிணைக்கப் போகிறாராம். பின்னர் உலகம் முழுக்க உலா சென்று குள்ளர்களின் நலன்களை கவனிக்கப் போகிறாராம். ●

நிதானம்

மனிதர்கள் மட்டும்தான் நிதானம் தப்பாமல், சமநிலை தவறாமல் சாதனை செய்ய முடியுமா? இந்த நாயாரும் செய்து காட்டுகிறார் பாருங்கள்.

தலைமேல் ஒன்றுக்கு மேல் ஒன்றாக தேநீர் கோப்பைகளை அடுக்கிக் கொண்டு வெகு அனாயாசமாக நடைபோடுகிறார்.

வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளில் வெகு சுலபமாக, எஜமானர்களிடம் கட்டளைகளை ஏற்று நடக்கும் பிராணி நாய்தான். இதற்காக எல்லா வகை நாய்களையும் பழக்குவதென்பது கடினம்.

சாகசங்கள் புரிவதற்காகவே சில ரக நாய்கள் உள்ளன. திருடர்களையும் மோசடிகளைச் செய்வோரையும் தேடிக்கண்டுபிடிக்கும் பணிக்கென பொலிசார் நாய்களைப் பழக்கி எடுக்கின்றனர்.

இங்கு சாகசம் புரிந்து காட்டும் நாயாரும் அதே ரகத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும். ●

ஜூனியர்

யார் இந்தச் சிறுவன் தெரியுமா? அண்மையில் விமான விபத்தில் பலியான ஜூனியர் கென்னடிதான்.

தனது தந்தையான அமெரிக்க அதிபர் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்ட போது ஜூனியர் கென்னடிக்கு மூன்று வயது. மரணச் சடங்கில் தன் தந்தைக்கு இறுதி வணக்கம் செலுத்தும் நெகிழ்ச்சியான காட்சிதான் இது.

தந்தையைப் போலவே இவரும் பெண்கள் விஷயத்தில் அப்படி இப்படித்தான்.

பல இளம் பெண்களோடும், நடிகைகளோடும் சுற்றித்திரிந்தார். இவர் வெற்று மார்புடன் காட்சியளித்த படங்களுக்கு இளம் பெண்களிடையே பலத்த மவுசு நிலவியதும் உண்டு.

உலகில் கவர்ச்சியான முதல் பத்து இளைஞர்களில் இவரும் ஒருவர். தீராத விளையாட்டுப் பிள்ளையான ஜூனியர் திருமணத்தின் பின்னர் கொஞ்சம் அடக்கமானார்.

தற்போது ஆழ் கடலுக்குள் அமைதியாகத் தூங்குகிறார்.

தகவல் பெட்டி

ஐக்கியம்

தீராத முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் உதாரணமாக 'பூனையும், எலியும் போல்' என்றுதானே கூறுவோம். அதனைப் பொய்யாக்கிவிட்டது இந்தக் காட்சி.

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கறுப்புப் பூனையும், வெள்ளெலியும் இப்படி ஒன்றையொன்று ஆரத்தழுவி பாசமுடன் உறவாடின. இதனை பல்லாயிரம் பேர் கண்டுகளித்தனர்.

ஆக்கிரமிப்பு. அழித்தொழிப்பு மனோபாவம் மனதில் இல்லையானால் மட்டுமே இப்படியான ஒற்றுமை சாத்தியமாகும். ●

படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 114

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

தயாரிப்பாளருடன் மோதல்
கைகொடுத்த பிரபல நடிகர்

தேவ நடிகை பற்றிய இரண்டு தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்ப் படவுலகின் பிரபல தயாரிப்பாளர் தரம்சந்த் லுங்கட். இளம் நடிகைகள் சில காலம் தன் கட்டுப்பாட்டில் இருக்க சம்மதித்தால்தான் வாய்ப்புத் தருவார்.

இவரது கட்டுப்பாட்டில்தான் 'தேவ' நடிகையும் சில காலம் இருந்து வந்தார். 'தேவ' நடிகையின் அழகுகளை தரிசித்த தயாரிப்பாளருக்கு நடிகையை பிரிய மனமில்லை.

நடிகைக்கோ புகழ் பெருகி. இயக்குநர் ஒருவருடனும் நட்பு பலமாகியது. அப்படியிருந்தும் இயக்குநருக்கு தெரியாமல் தயாரிப்பாளரின் ஆசைக்கு அவ்வப்போது அனுமதித்தார்.

நடிகையின் படங்கள் வெற்றிபெற்றதால் அவரை வி.ஐ.பிக்களின் கண்களும் கவனிக்கத் தொடங்கின. எந்த நடிகை பிரபலமாக உள்ளாரோ. அந்த நடிகையுடன் ஒரு இரவையாவது கழிக்காதுவிட்டால் தூக்கமே இல்லாத வி.ஐ.பிக்கள் பலர் இருக்கின்றனர்.

வி.ஐ.பிக்கள் விருப்பத்தை மறக்க முடியுமா? கம்பனி கொடுத்தார் நடிகை. நிறைய பணமும் கிடைத்தது.

இதனால் தயாரிப்பாளரை எதிர்க்கும் துணிச்சலும் வந்தது. இக் கட்டத்தில் தரம்சந்த் லுங்கட்டுக்கு தொழிலில் திடீர் அடி.. பலத்த நஷ்டம்.

தப்பிவந்தார்

நடிகையிடம் ஏராளமான பணத்தை இழந்தவராச்சே. தன் கஷ்ட நிலையைக் கூறி உதவி கேட்க நடிகை வீட்டுக்கு போனார்.

தேவ நடிகை மனம் இரங்கி பணம் கொடுக்க முன் வந்தார். நடிகையின் தாயக்குலம் அனுமதிக்கவில்லை.

தயாரிப்பாளர் கோபத்தில் பழைய சங்கதிகளை நினைவூட்டியிருக்கிறார். அவ்வளவுதான் செருப்பை எடுத்து அடித்திருக்கிறார் தாய்க்குலம். தயாரிப்பாளர் ஒருவிதமாக தப்பி வந்து சேர்ந்தார்.

தேவ நடிகையும் ஆறு எழுத்து இளம் முன்னணி நடிகரும் 'வரவைக்' குறிக்கும் படத்தில் ஜோடியாக நடித்து வருகின்றனர். ஏற்கனவே நடிகருடன் சில படங்களில் இணைந்து நடித்தபோது, அனுசரித்து நடிந்தவர்தான் தேவ நடிகை.

ஆனாலும் அதே படங்களில் அந்த நடிகருடன் நட்பாக இருந்த இரண்டெழுத்து நடிகையும் நடித்தார். அது யாவரும் அறிந்த சங்கதி.

அந்த நடிகை தேவ நடிகையை ஆறெழுத்து நடிகருடன் ஒரளவுக்கு மேல் நெருங்க விடவில்லை.

தற்போது அந்த இரண்டெழுத்து நடிகையை விட்டு நடிகர் பிரிந்து விட்டார்.

இந்நிலையில் 'தேவ' நடிகை தன் குறும்பான புன்னகையாலும், கொத்தி இழுக்கும் பார்வையாலும் நடிகரை தன் கைக்குள் போட்டுக் கொண்டார்.

பிகு பண்ணினார்

தேவ நடிகையை நாடி ஆரம்பத்தில் நடிகர் உருகி நிற்க, நடிகை வேண்டமென்றே 'பிகு' பண்ணினாராம். அதனால் ஆரெழுத்து நடிகரின் ஆசை அதிகமானது. அதன் பின்னர்தான் நடிகரின் அறைக்கு சென்றாராம் நடிகை.

நடிகை தன் திறமைகளை காண்பித்து ஆறெழுத்து நாயகனை தனது வலையில் வீழத்திவிட்டார். குறிப்பிட்ட படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பில் நடிகரின் அறையில் தான் அநேக நாட்கள் இரவில் தங்கினாராம் நடிகை.

இந்த விஷயம் படப்பிடிப்பு குழுவினருக்கு தெரிந்தாலும், தெரிந்தது மாதிரி காட்டிக் கொள்ளாமல் கிச கிசப்போடு நிறுத்திக் கொண்டனர்.

நள்ளிரவுக்கு சற்று முன்னர் தன் அறையிலிருந்து பூனைபோல புறப்பட்டு நடிகரின் அறைக்கு செல்லுவார் நடிகை. அவரது அறையில் தாய்க்குலமும் தங்கியிந்தமையால் அங்கு நடிகரை அழைக்க முடியவில்லை.

நடிகை இப்படி செல்வதை தம் அறையில் இருந்து இரகசியமாக கண்காணிப்பதே படப்பிடிப்புக் குழுவினர் சிலருக்கு பொழுது போக்காக இருந்தது.

ஆனாலும் இரண்டெழுத்து நடிகையிடம் மாட்டிக்கொண்டது போன்று, தேவ நடிகையிடம் ஆறெழுத்து நடிகர் மாட்டிக் கொள்ள மாட்டார்.

படப்பிடிப்பு நேரத்தில் ஓய்வை இன்பமாகக் கழிக்க மட்டுமே நடிகையின் 'நட்பை' உபயோகப்படுத்திக் கொள்கிறார்.

கைகொடுத்தார்

பூவின் பெயர் கொண்ட நடிகை அவர் 'கா' நடிகருடனும் சமீப காலத்தில் நெருங்கிப் பழகி வருகிறார். இவரது மணியான காதலர் இவற்றைக் கண்டு கொள்வதில்லை.

சமீபத்தில் இந்த நடிகைக்கு சிறைவாசத் தண்டனை பெற்றுக் கொடுத்தார் ஒரு தயாரிப்பாளர்.

அந்த தயாரிப்பாளருக்கும் இந்த நடிகைக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பற்றி முன்னரே இப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

தன் கட்டிலுக்கு வரமறுத்த நடிகைக்கு சிறைத் தண்டனை பெற்றுக் கொடுத்தே தீருவேன் என்று அப்போதே சபதம் செய்திருந்தார் தயாரிப்பாளர். அதன்படியே செய்து விட்டார்.

இந்த இக்கட்டான நேரத்தில் நடிகைக்கு 'எந்த உதவியும் செய்யத் தயார்' என்று பிரபலமான அந்த சிறந்த நடிகர் தானாக முன்வந்து கூறியுள்ளாராம். தன்னை பிடிக்காது என்று முன்பு அந்த நடிகை கூறியதையும் பெரிதுபடுத்தாமல் உதவிக் கரம் நீட்டியுள்ளார் நடிகர்.

'டிக்'

முன்னர் 'டிக், டிக், டிக்' என்றொரு படம் வந்தது. கமல் கதாநாயகன். இப்போது அதில் இரண்டு டிக்குக்களை கழித்துவிட்டு 'டிக்' என்ற பெயரில் ஒரு படம் தயாராகி வருகிறது.

இப்படத்தில் புதுமுக நாயகன், நாயகி நடிக்கவுள்ளனர். முக்கிய வேடத்தில் வில்லன் நடிகர் அலெக்ஸ்
நடிக்கிறார்.
இது திகில் பட
மாம்.

விஜயகாந்த்-சிம்ரான்
படம்: கண்ணுபடப் போகுதய்யா

சினி விசிட்

சினிமா விமர்சனம்
நமது விமர்சனக் குழு

கவர்ச்சி வீசும் ரோஜா

40/100

படம்: சுயம்பரம்

நடிப்பு: சத்யராஜ், பிரபு, கார்த்திக், பிரபுதேவா, பார்த்திபன், அப்பாஸ், அர்ஜுன், நெப்போலியன், பாண்டியராஜன், செந்தில், மன்சூரலிகான், விக்னேஷ், வினீத், குஷ்பு, ரோஜா, ரம்பா, ஹீரா, ஐஸ்வர்யா, சுவலட்சுமி.

24 மணிநேரத்தில் எடுக்கப்பட்ட படம். ஆனாலும் படப்பிடிப்பு மட்டும் தான் ஒரே நாளில் நடைபெற்றது. எடிட்டிங், பின்னணிக் குரல்கொடுப்பது போன்ற பல வேலைகள் பின்னர் தான் நடந்துள்ளன. அதனால் உலக சாதனையாக ஏற்கப்படுமா என்பது தெரியவில்லை.

க

சத்யராஜ்-குஷ்பு-நீரஜா
படம்: சுயம்வரம்

ரஜினி தடுமாற்றம்

ரஜினிகாந்த் இந்தியத் தேர்தலிலும், தமிழகத்திலும் இம்முறை யாரையும் ஆதரிக்க மாட்டேன் என்று கூறியதால் பலர் கவலையடைந்துள்ளனர்.

கலைஞரும், மூப்பானாரும் எதிரும் புதிருமாக நிற்பதால் ரஜினி யாரையும் ஆதரிக்க மாட்டார் என்று முதன் முதலில் கூறியது யார் தெரியுமா? நம் முரசு மட்டும்தான்.

ரஜினி அதிரடி முடிவு எடுப்பார், பா.ஜ.கவுக்கு ஆதரவளிப்பார் என்றெல்லாம் தமிழகப் பத்திரிகைகள்கூட கூறிவந்தன. அதனை நம்பி பா.ஜ.க., தி.மு.க. ஆதரவாளர்களும் எதிர்பார்ப்போடு இருந்தனர். இறுதியில் ஏமாற்றம்தான்.

'ஆட்சிக் கவிழ்ப்புக்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும்' என்று ரஜினி கூறியிருந்தார். அவர் ஜெயலலிதாவை நினைத்துக் கொண்டு சொன்னது மூப்பனாரையும் சேர்த்து அடித்து விட்டது. ஏனென்றால் ஆட்சிக் கவிழ்ப்புக்கு மூப்பானாரும் முக்கிய காரணம்.

'படையப்பா'வில் ஜெயலலிதா மீதுள்ள கோபத்தால் பெண்களை இழிவு படுத்தும் வசனங்களை பேசியதுபோல, இதிலும் தடுமாறி விட்டார் ரஜினி.

புதுமுகம் குணால்-சோனாலி
படம்: காதலர் தினம்

கண்ணுக்கு

பாரதி கண்ணம்மா, மறுமல
புதுமைப்பித்தன் போன்ற வெற்றிப்
களை தந்தவர் தயாரிப்பாளர் ஹெ
இயக்குநர் சேரனுக்கு வாய்ப்புக் கொ
உருவாக்கியவரும் இவர்தான்.

தற்போது ஹென்றி தயாரி
படத்தின் பெயர், 'கண்ணுக்கு
ணாக.' இப்படத்தில் முரளி, தேவய
ஜோடியாக நடிக்கின்றனர்.

'பூமணி', 'பூந்தோட்டம்' போன்ற

படிப்பகம்

இதுவரை கின்னஸ் உட்பட
ாருமே உலக சாதனை என்று
அங்கீகரிக்கவில்லை. எனவே
அதுவரை உலக சாதனை முயற்
ிப் படம் என்றே கூறவேண்டும்.
படம் கலகலப்பாக எடுக்கப்
ட்டுள்ளது: பிரபு தேவா, ரோஜா
ஜாடிக்குத்தான் முதலிடம். அதி
ும் அந்த நடனம்... யப்பாடி
ராஜாவின் உடலில் பிரபு தேவா
தொடாத இடம் எது? என்று
பாட்டியே வைக்கலாம்.

அடுத்த இடம் பார்த்திபனுக்கு.
நத்தியடியான வசனங்கள். கடி
ள் என்று தூள் கிளப்புகிறார்.
ன்றாவது இடம் சத்யராஜ்.
ஷ்பு ஜோடிக்கு. குறத்தியாக வரு
றார் குஷ்பு. தன் கவர்ச்சியையும்
ாண்பித்திருக்கிறார். அடுத்த
டம் பிரபு. ஐஸ்வர்யா ஜோடிக்கு.
ஸ்வர்யாவின் குரலில் ஆண்
னம். அப்பாக்கு ஜோடி ஹீரா.
பாருந்தவேயில்லை. பாக்யராஜ்.
ர்வசிதான் சுயம்வரத்துக்கு
ர்வு நடத்துகிறார்கள். கல
லப்பு. கடைசியில் வந்து கலக்கு
றார் அர்ஜுன்.

கதையைத் தேடாமல் பொழுது
ாக்க மட்டும் ஆசைப்பட்டால்
நம்பிப் பார்க்கலாம். சலிப்பு
படாது. நம்நாட்டில் வீடீயோ
ல் உலாவுகிறது.

காதோடு சொல்லுகிறோம்

மந்திர நடிகை தனது காதலருடன் தங்கியிருந்தார் அல்லவா. தற்போது தனது வீட்டுக்கு திரும்பியிருக்கிறார். வீட்டிலிருந்த தாய்க்குலத்தையும், தந்தையையும் விரட்டி அடித்து விட்டாராம்.

சிம்ம நடிகையின் காதலரின் தொல்லைகள் தாங்கமுடியவில்லையாம். அதனால் நடிகையை ஒப்பந்தம் செய்வதற்கு இயக்குநர்கள் தயங்குகிறார்கள். ஒப்பந்தம் செய்த பல படங்களில் இருந்தும் தொடர்ச்சியாக தூக்கப்பட்டுவிட்டார். முன்னர் போன்று அனுசரிப்புக் காட்டுவதில்லை என்பதும் தூக்கப்படக் காரணமாம்.

மீன் நடிகைக்கு அதிகம் நித்திரை இல்லாமையாலும், விருந்துகளில் அடிக்கடி சாப்பிடுவதாலும் உடம்பு தசைபோடுகிறது. கட்டுடல் போனால் சினிமா உலகத்தினர் திரும்பியும் பார்க்க மாட்டார்கள் என்பது தெரியாதோ? தெரியும். அதனால்தான் உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்க பல முயற்சிகள் செய்து வருகிறார்.

விவேகமான நகைச்சுவை நடிகருக்கு குட்டி நடிகைகள் என்றால் குஷி. பலரை ஓரம்கட்டி பதம் பார்த்திருக்கிறார். மார்க்கெட் இழந்த நடிகைகளையும் விட்டு வைக்க மாட்டார். 'கலைச் சேவை' என்று வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு கை பார்க்கிறாராம்.

நான்கெழுத்த நடிகை சாமியார் ஒருவரிடம் குறி கேட்கப்போனார். சாமியாருக்கு நடிகையின்மீது ஒரு குறி. நடிகையும் சாமியாரின் விருப்பம் அறிந்து விட்டுக் கொடுத்தாராம். இப்போது அடிக்கடி சாமியாரை சந்திக்கிறார் நடிகை. சாமியார் நடிகையை மயக்கி விட்டார்.

ண்ணோடு ✹ ண்பதெல்லாம்

லர் தினம்' திரைக்கு வந்து
. நமது விமர்சனக்குழு
ுழும் பார்க்கவில்லை.
தவர்கள் பரவாயில்லை
றார்கள். சோனாலி பிந்த்
ாவே பார்க்கலாம் என்று
ளுகிறார்கள்.

தியில் எதற்கும் துணிந்த
கள் பட்டியலில் இருப்ப
ானாலி. தமிழில் 'பம்பாய்'
ல் 'ஹம்மா, ஹம்மா' பாட
ஆடிவிட்டு போனார்.
போது 'காதலர் தினம்'
ல் கதாநாயகி. அடுத்து
் நடிக்கும் 'கண்ணோடு
தெல்லாம்' படத்திலும்
அம்மணிதான்.

அர்ஜுனுக்கு மும்பை நடிகைகள் என்றால் அப்படியொரு இஷ்டம். ரவீனா ராண்டனுடன் 'சாது' படத்தில் நடித்தபோது ஒட்டிக் கொண்டார். பின்னர் தபுவோடு உரசி பிரச்சனையானது.

முதல்வனில் மனிஷாவுடன் நடித்து வருகிறார். மனிஷா சற்று விழிப்பாகவே இருக்கிறாராம். அதனால் ஆக்ஷன் கிங் அவரிடம் தன் ஆக்ஷனை காண்பிக்க முடியவில்லை.

ஆனால் சோனாலி பிந்தரே அப்படியானவரல்ல. 'கண்ணோடு காண்பதெல்லாம்' காண்பவருக்கும் சொந்தம்தான் என்று விட்டுக் கொடுக்கக் கூடியவர். படப் பெயரும், அவர் அணுகுமுறையும் நல்ல பொருத்தம்!


பிரசாந்த்-புதுமுகம் சாந்தினி
படம்: ஆசையில் ஓர் கடிதம்

முகப்பில்
ராணி முகர்ஜி
சத்யராஜ்
படம்: சுயம்வரம்

மினி சினி

◇ சரத்குமார் நடித்த ஒருவன் படத்தை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா அடுத்து கார்த்திக், விஜய் ஆகியோர் கதாநாயகர்களாக நடிக்கும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார்.

◇ 'மை டியர் கரடி' என்ற பெயரில் மலையாளத்தில் ஒரு நகைச்சுவை படம் தயாராகி வருகிறது. இந்தப் படத்தில் முக்கிய வேடத்தில் கரடி ஒன்று நடிக்கிறது.

◇ 'பெரியண்ணா' படத்தில் சூர்யா ஜோடியாக அறிமுகமான மானஸா, அடுத்து பிரசாந்த் ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்கப் போகிறார்.

◇ தெலுங்கு நடிகர் கல்யாண்-கீர்த்திரெட்டி ஜோடியாக நடித்த 'ஆனந்த மழை' இந்தியில் விரைவில் தயாராகப் போகிறது. இந்திப் படத்திலும் கீர்த்தி ரெட்டியே நாயகியாக நடிக்கவுள்ளார்.

◇ 'விண்ணோடும் முகிலோடும்' படத்தை இயக்கி வரும் சேரன், அடுத்து இயக்கும் படமொன்றிற்கு 'ஆனந்தம் விளையாடும் வீடு' என்று பெயரிட்டுள்ளார்.

* சாய்குமார்- 'கல்கி' ஸ்ருதி ஜோடியாக நடித்த கன்னடப்படமொன்று 'ஜெகதீஸ்வரி' என்ற பெயரில் தமிழுக்கு மொழிமாற்றப்படுகிறது. இப்படத்தை இராமநாராயணன் இயக்கியுள்ளார்.

◇ பார்த்திபன்-அஜித்குமார் இணைந்து நடிக்கும் 'நீ வருவாய் என..' படத்தில் பார்த்திபன் வங்கி அதிகாரியாகவும், அஜித்குமார் இராணுவ வீரராகவும் நடிக்கின்றனர்.

◇ 'கும்பகோணம் கோபாலு' படத்தில் நாயகியாக அறிமுகமான மயூரிக்கு அதற்குப்பின் தமிழில் படங்கள் எதுவுமில்லை. ஆனால் மலையாளத்தில் மூன்று படங்களில் நடித்து வருகிறார்.

◇ நாசர்-ஊர்வசி நடித்த 'அருவா வேலு' படத்தைத் தயாரித்த கே.வி.குணசேகரன் அடுத்து 'சோனியா' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளார். இதில் சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார்.

◇ பிரபு-பிரகாஷ்ராஜை வைத்து 'வசந்த காலம்' என்ற படத்தைத் தயாரித்து இயக்கும் மனோஜ்குமார், அடுத்ததாக சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

பூப்போல மனசு

தற்போது 'அந்தப்புரம்' தெலுங்கு படத்தை தமிழில் மொழிமாற்றி தயாரித்துள்ளார் பிரகாஷ்ராஜ். படமும் வெளியாகி திருப்திகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

அடுத்து தமிழ்ப் படம் ஒன்றை சொந்தமாக தயாரிக்கிறார். கதாநாயகன் கார்த்திக். கதாநாயகி கவுசல்யா.

கார்த்திக்குடன் ஏற்பட்ட பிணக்கு தீர்ந்ததால் மறுபடி அவருடன் ஜோடி சேர்ந்துள்ளார் கவுசல்யா. இப்படத்தில் முக்கிய வேடத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கவுள்ளார். படத்திற்கு 'பூப்போல மனசு' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதை திரைக் கதை வசனம் எழுதி இயக்குகிறார். 'காதல் கோட்டை' புகழ் அகத்தியன்.

அவர் எங்கே?

உலக அழகி ஐஸ்வர்யா ராயும் அவரது குடும்பத்தினரும் மும்பாயில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றுக்கு சென்றனர்.

இரவு உணவை அருந்தச் சென்ற அவர்களுக்கு கசப்பான அனுபவம் கிடைத்தது.

"சல்மான்கான் எங்கே?" என்று அங்கிருந்த ரசிகர்கள் கேலி பண்ணி முற்றுகையிட்டனர். 'முட்டாள்கள்' என்று திட்டிவிட்டு விடுதி பாதுகாவலர் உதவியுடன் தப்பிப் போனார்கள்.

ண்ணாக

படங்களில் இதே ஜோடி தான்
த்தது. இப்படத்தை இயக்குவ
கு புதுமுகம் ஒருவருக்கு
ய்ப்பளித்துள்ளார் ஹென்றி.
கே.எஸ். ரவிக்குமாரிடம்
வி இயக்குநராக வித்தை
ன்றவர் தயாளன். அவர்தான்
படத்தை இயக்கப்போகிறார்.
ை:தேவா. ஒளிப்பதிவு, தங்கர்
சான்.

துரித விற்பனை

வெற்றிப் படங்களை தொடர்ந்து கொடுத்து வருபவர் இயக்குநர் விக்ரமன். அவரும் விஜயகாந்த்தும் இணைந்துள்ள படம் 'வானத்தைப் போல'. இசை: ராஜ்குமார்.

இந்தக் கூட்டணியின் படம் நன்றாக வரும் என்பதால் பலத்த எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. படம் முடிவடையும் முன்பே விற்பனையாகிவிட்டது.

பாடல் வீடியோக உரிமைக்கும் போட்டா போட்டி. பாடல் உரிமை மட்டும் இந்திய மதிப்பில் ஒன்றே கால் கோடிக்கு [illegible] ார்களாம்.

நெருக்கம்

சரத்குமார், அஜித்குமார் போன்ற குமார்களுடன் நட்பு கொண்டிருந்தவர் ஹீரா. இருவரோடும் உறவு முறிந்துவிட்டது.

இப்போது தொலைக்காட்சி தயாரிப்பாளர் ஒருவருடன் நெருக்கமாகியுள்ளதாக தமிழக பத்திரிகை ஒன்று கூறியுள்ளது. -நான் விரும்பும் ஆண்களுடன் நெருக்கமாக இருப்பதற்கு எனக்கு சுதந்திரம் உண்டு என்று கூறி வருகிறார் ஹீரா.

படிப்பகம்

இது நிழல் அல்ல



யார் இவர்?



இது சினிமாவில் வரும் நிழல் காட்சியல்ல, நிஜக்காட்சி. அமெரிக்க கலி:, போர்னியாவில் நிறவெறி பிடித்த நீதிபதியை நீதிமன்றத்துக்குள் வைத்து கறுப்பின இளைஞர்கள் கடத்திச் செல்கின்றனர்.

"யாரும் கிட்ட வந்தால் சுட்டுத்தள்ளி விடுவேன்!" என்று கறுப்பின இளைஞன் மிரட்டுகிறான். இந்த அபாயகரமான சூழலிலும் துணிந்து இதனைப் படம் பிடித்தவர் ஜிம் கேனே. இப் புகைப்படம் உலகப் புகழ் பெற்ற படமாக அவருக்கு பெரும் புகழ் தேடிக் கொடுத்தது.

நீதிபதிகளும் அநீதிகளுக்கு துணைபோகும்போது, பாதிக்கப்படுபவர்கள் நீதியைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்கிறார்கள்.

யார் இந்தச் சுட்டிச் சிறுமி? அயலக தொலைக்காட்சி ஒன்றின் ஊடாக நம் நாட்டிலும் இன்று பிரபலமான இளைஞி இவர். பெயரில் ஆக இரண்டு எழுத்து மட்டுமே உள்ளது. கண்டு பிடித்துவிட்டு 18ம் பக்கம் செல்க.

இந்தவாரம் உங்கள் பலன்

08.08.99 முதல் 14.08.99வரை

ஜோதிடர் 'கானா'

மேடம்:
கிரக சமபலம் கொள்வதால் எடுத்துக்கொண்ட விடயங்கள் நன்மையாக முடியும். பரீட்சை, தொழில் அமைப்புக்கள் சிறந்து விளங்கும். பரணி நட்சத்திருக்கு செவ்வாய்கிழமை சிறப்பைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 9.
அதிஷ்ட திகதிகள் : 9, 12.

இடபம்:
கிரக அமைப்பில் ஸ்தான நிலை நன்கு செயறபடுவதால் கல்வி, தொழில் வசதி ஏற்படும். நோய் துன்பங்கள் சுகமடையும். பயண வாய்ப்புக்கள் கிடைக்கும். நண்பர்களின் வசதிகள் கிடைக்கப் பெறும். ரோகிணி, மிருகசீரிட நட்சத்திரருக்கு ஓரளவு வசதி வாய்ப்புக்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 12, 13.

மிதுனம்:
குடும்பஸ்தானப் பலம் கொடுப்பதால் தாமதமடைந்த விடயங்கள் வார இறுதியில் முடிவடையும். குடும்ப விருத்தி பலன் ஏற்படும். தொழில், இடமாற்றம் அமைப்புக்கள் காணப்படும். வசதி வாய்ப்புக்கள் அமைந்து செல்லும். உதவிகள் கிட்டும். திருவாதிரை நட்சத்திரர் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், செவ்வாய்
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 13, 14.

கடகம்:
பிரயாணம் வெற்றி தரும். பண நிலையில் சிக்கலும் எடுத்த விடயங்களில் தாமதமும் காணப்படும். மனதில் சஞ்சலம் கொடுக்கும். எதிலும் கவனமாக செயல்படவும். ஆயிலிய, பூச நட்சத்திரர் நன்மை பெறமாட்டார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : மருன்; எண் : 9.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

சிம்மம்:
பாக்கியபலம் கொள்வதால் உறவினர்களின் மகிழ்வும், பிரயாண வெற்றியும் ஏற்படும். புதிய மாற்றங்கள் வெளியுறவுகள் ஏற்படும். குடும்பச் சிறப்புக்களும், கல்வி, தொழில், சிறப்பாகக் காணப்படும். மக நட்சத்திரருக்கு பொன்னான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 1.
அதிஷ்ட திகதிகள்: 10, 12.

கன்னி:
பல்வேறுபட்ட சிக்கல்கள் குறையும். முயற்சிகள் வேகமடையும். நோய்துன்பங்கள் நிவர்த்தி பெறும். நண்பர்கள், உறவினர்களது உதவிகள் வசதிகள் கிடைக்கும். அமைதி நிலை உருவாகும். உத்தர, அத்த நட்சத்திரருக்கு நன்மையுண்டு.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: பிங்க்வர்ணம்; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 11, 14.

துலாம்:
கிரக நிலை சிறப்புடன் உள்ளதால் ஓரளவு நல்ல விடயங்கள் நடந்தேறும். மனதில் நிம்மதி ஏற்படும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். உடலில் நோய் துன்பங்கள் ஏற்படும். பண வசதிகள் தட்டுப்பாடு நிலவும். சுவாதி, விசாக நட்சத்திரருக்கு சிக்கலான வாரமாக இருக்கலாம்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 10, 12.

விருட்சிகம்:
இலாபஸ்தானப் பார்வையால் தொழில் உறுதி காணப்படும். உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும். கல்வி, பரீட்சைகள் ஓரளவு சிறப்படையும். ஏதேனும் எதிர்ப்புக்கள் சிக்கல்கள் தொடரப்பார்க்கும். கேட்டை நட்சத்திரருக்கு வசதியான வாய்ப்புக்கள் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

தனுசு:
மனதில் தைரியம் காணப்படும், பலரின் ஒத்துழைப்புக்கள்- உதவிகள் என்பன அமையும். தூர இடப்பயணம் திட்டமிடப்படும். தொழில் கல்வி, பரீட்சைகள் சிறப்பாக அமையும். முன்னேற்றமான காலபலன்கள் உண்டு. மூல, பூராட நட்சத்திரருக்கு வெளி உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 9, 11.

மகரம்:
4 இல் கிரகம் கொண்ட பலம் இழப்பதாலும் 7இல் புதன் உள்ளதாலும் குடும்பத்தில் நல்ல விடயங்கள் நடக்கக்கூடும். நண்பர்கள், உறவினர்கள் வழியில் சிக்கல் ஏற்படும். திருவோண நட்சத்திரருக்கு வியாழன் அதிஷ்ட வாய்ப்புக்கள் உண்டு.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 11, 13.

கும்பம்:
மனதில் அமைதி இருக்காது. எடுத்த விடயங்கள் தாமதமடையும். மாறுபட்ட நிலை உருவாகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். வார பிற்பகுதி அலைச்சல் உருவாகும். சதய, அவிட்ட நட்சத்திரருக்கு நிலை சரியில்லை.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள்: 10, 11.

மீனம்:
சனிகால முடிவு இருப்பதனால் எதிலும் பதற்றமாக இருக்கும். பண வசதி வாய்ப்புக்கள் ஏற்படும். பரீட்சை காலபலன் நன்றாக இருக்கும். முயற்சிக்கேற்ற பலனை வார இறுதியில் அனுபவிக்கலாம். உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரருக்குச் சிறப்பு.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 10, 14.

ஒரு ஜீவ நதிக்கு

பக்தன் அல்லாத என்னிடம்
பத்திரமாயிருக்கிறது
அந்தப் பரிசுப் பொருள்கள்.

நடந்துவரும்
சமுத்திரத்திற்காகவா
நான்
நடைபாதையில்
குந்தியிருந்தேன்.....?

இல்லை!
என் வீதியோர இருக்கைக்கும்
உன் வருகைக்கும்
மானசீகமாக
தொடர்பேதும் இல்லை.
ஆனாலும்
நான் குந்தியிருக்கையில் தான்
சமுத்திரமே-நீ
நடைபோட்டு வந்தாய்!

மகா நதியே!
உன் உணர்வு நரம்புகளை
உடைக்கப்போனது
என் முட்டாள் தனம்!

உன்
கரைசல் தனமையைக்
கண்டறிந்த போதும்
தன்மானம் என்ற பெயரில்
தரிசாகிப் போன
என் இதயத்தைத்
தடவிக் கொள்ளும்
தார்மீகப் பக்குவம்-எனக்கு
அப்போது இல்லை!

இப்போதெல்லாம்
என் இதயம்
இறுக்கமில்லாமல் போனதற்கு
யார் யாரெல்லாம் காரணமோ
அந்த வரிசையில்
என்
'நயகரா'வுக்கு
அடுத்தவள்
நீயே....!

உன்னிடம்
ஒரு வரம் கேட்பேன்
பூமியில்
இன்னும் சிலருக்கு
புன்னகைக்கக் கற்றுக் கொடு
ஏனென்றால்
உன் புன்னகையிலிருந்து
தானே
பூக்களெல்லாம்
புஸ்பிக்கக்
கற்றுக் கொண்டன!

சஞ்சீவி- சிவகுமார்.

நீயுமா புருட்டஸ்?

நீயுமா.....
நம்ப முடியவில்லை!
நம்பிக்கைகளை
சிறகாகக் கொண்டு
நான்
பறந்திருந்த நேரம்
துரோகம் எனும்
வாளால்
என்னை சலபமாக
வீழ்த்திவிட்டாய்!

என் பழைய ஏடுகளை
தூசு தட்டிப்
பார்க்கிறேன்!
நம்பமுடியவில்லை!

சந்தோஷத்தில்
கை கொடுப்பது
மட்டுமல்ல.
துக்கத்திலும்
தோள் கொடுப்பது தான்
நட்பு!

நினைத்துப் பார்க்கிறேன்...
என் கண்ணீரின்
பங்காளியாகவல்ல,
எப்போதும்
நீ
பார்வையாளனாகத்தான்
இருந்திருக்கிறாய்!

என்
பலவீனங்களைப்
பலமாக்கிக் கொள்ள
எனக்குத் தெரியாது!
என் பலவீனமே
அன்புதான்!

இருந்தும்
மீண்டும் நான்
எழுவேன்.

சிறகொடிந்தே
கிடப்பதற்கு
இது ஒன்றும்
சுண்டுக்கிளியல்ல.....!

சாம்பல்
மேட்டிலிருந்தே
உயிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவை.

இந்த நதியின்
பிரவாகம் கண்டு
கரைகள்
பிரமிக்கலாம்!

ஆனாலும்-நண்பனே!
அன்பென்ற
போர்வை கொண்டு
நீ நடத்திய
நாடகத்தின்
யதார்த்தத்தைப்
புரிந்து கொள்ளாத
என் முட்டாள்தனம்
நெருஞ்சி முள்ளாய்
என்றும்-என்
நெஞ்சில் நிற்கும்!

**

'மட்டுநகர் சூர்யா',
தாமரைக்கேணி,
மட்டக்களப்பு.

தேன் கிண்ணம்

காணி நிலம் வேண்டுமென
கவி புனைந்த பாரதியே-இங்கு
காணி நிலம் இருந்தும் நாம்
கதியற்ற மக்களானோம்!

வாழ்ந்துறங்க வீடிருந்தும்
வயல் செழிக்க விளைந்திருந்தும்
மாடு கன்று எல்லாவும்
மட்டற்று எமக்கிருந்தும்
ஓரிரவின் விடியலிலே
ஏதுமற்ற அகதியானோம்!

களனியும் கலயமும்...

களனியதில் நெல் கொழிக்க
களித்திருந்த நாங்களின்று
கஞ்சிக்கு கலயமேந்தி
வரிசையிலே நிற்கின்றோம்.

தி.கலைவாணி-
இரணை இலுப்பைக்குளம், வவுனியா.

பேனா நண்பர்கள்

பெயர்:
எஸ். மங்கையதர்ஷி.
வயது: 21
முகவரி:
மவுண்ட் வேணன் பிரிவு,
பத்தனை.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.

பெயர்: சிதம்பரம் ஹரி.
வயது: 20
முகவரி: 5, ஜே.பி.ஒழுங்கை,
5ம் குறுக்குத் தெரு,
புத்தளம்.
பொழுது போக்கு:
வானொலி,
பத்திரிகை.

நில்-கவனி-முன்னேறு

☞ உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கு முன், எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு முன், செலவுகளை பட்டியல் படுத்திக் கட்டுப்படுத்துங்கள்.

☞ வருமானத்துக்குள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் கலையில் தேர்ச்சிபெற்றுவிட்டால் சந்தோசத்திற்கு குறைவே இருக்காது.

☞ திட்டமிடாத செலவீனம் நங்கூரம் இல்லாத கப்பலில் பயணிப்பதைப் போன்றது.

☞ ஒவ்வொரு மாதமும் உங்கள் செலவுகளைப் பட்டியல் போடுங்கள். பட்டியலில் முதல் செலவாக, அந்த மாதத்திற்கான சேமிப்பை எழுதுங்கள்.

☞ வரவு-செலவைத் திட்டமிடுவதால் மட்டுமே வெற்றியல்ல! அதனை எத்தனை சதவீதம் திட்டமிட்டபடியே செயல்படுத்துகிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

☞ மாதத்தின் முதல்நாளே ஒவ்வொரு செலவுக்குமான பணத்தை ஒதுக்கி தனித்தனி கவர்களில் போட்டு வையுங்கள். உதாரணமாக வீட்டு வாடகை, தொலைபேசி, மின்சார கட்டணங்கள், சமையல் செலவுகள், வாகன எரிபொருள் செலவு...

☞ ஒரு கவரிலுள்ள பணம் திட்டமிட்ட நாளுக்கு முன்பே செலவாகிப்போனால், மற்றைய ஏதாவது ஒரு கவரின் செலவைக் குறைத்து பற்றாக்குறையை சமாளியுங்கள். (உ-ம்) அதிகம் வெளியில் சுற்றாமல் எரிபொருள் கவரில் சேமிப்பு! இரண்டு புதிய சட்டைகளுக்கான பட்ஜெட்டில் ஒன்றுக்கு மாத்திரம் செலவிட்டு மற்றொன்றுக்கானதை சேமித்தல்!

☞ கடன் வாங்கி சமாளிக்கும் வழக்கத்தை கடைபிடிக்காதிருக்க பழகிக் கொள்ளுங்கள்.

☞ ஐந்து, பத்து, ஐம்பது என்று சிறிய அளவில் அலட்சியமாய் ஆரம்பிக்கும் கடன், பிறகு பெரிய அளவில் உங்களுக்கு பிரச்சனையாகும் அபாயத்திற்குள் உங்களைக் கொண்டு சென்று விடும்.

☞ வரவு-செலவு கணக்கு, திட்டமிட்டு செலவிடுதல் போன்ற தீர்மானத்துக்குள் செயல்படும்போது ஆரம்பத்தில் சிறுசிறு சங்கடங்களுக்கு உள்ளாக நேரிடும். அப்போதெல்லாம் சிறிது மனத்திண்மையுடன் செயல்பட்டு பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டால், வாழ்க்கை எப்போதுமே வசந்தமாக இருக்கும்.

☞ வரவுக்குள் செலவு என்பது புத்தி சாலித் தனம்தான். செலவுக்கேற்ற வகையில் வரவைப் பெருக்கிக்கொள்ள திட்டமிட்டுச் செயல்படுவது அதிபுத்தி சாலித்தனம்.

படிப்பகம்

லேடீஸ் ஸ்பெஷல்

குழந்தை குப்புறப்படுக்கலாம்

கைக்குழந்தைகளைக் குப்புறப்படுக்க வைப்பதே நல்லது என்று இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. பிறந்து 4 முதல் 6 வாரங்கள் ஆன 9777 குழந்தைகளின் தாய்மார்களிடம் கேள்வி கேட்டும், குழந்தைகளையும் பரிசோதித்து டாக்டர் பிளெமிங் குழு ஆராய்ந்தது.

முடிவில் குழந்தைகளை மல்லாந்து படுக்க வைப்பதால் 43 உடல் நலப் பிரச்சனைகள் வருகின்றன என்றும், குப்புறப் படுக்கவைப்பது நல்லது என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

தரையில், மெத்தையில் குப்புறப்படுக்க வைத்தால் இருமல், காய்ச்சல், வயிற்றுக் கோளாறு, மூச்சுத் விடுதலில் கோளாறு முதலியன குறைவாக இருக்கும். குறட்டைப் பழக்கமும் வராது என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

தரையில் மல்லாக்கப் படுக்க வைத்தால், மூச்சு விடுதல் தொடர்பான பிரச்சனைகள் அதிகம் வருகின்றன என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

இது சமையலறை சமாச்சாரம்

- வெந்தயத்தை அரைத்துத் தலையில் தேய்த்து, ஊறவைத்துத் தலைக்குக் குளித்து வந்தால் முடி வளரும். முடி கொட்டுவது நின்று போகும்.
- கொத்தமல்லியை வாயில் போட்டு மென்றால் வாய் நாற்றம் நீங்கும்.
- புளி, வெல்லம், ஏலக்காய், சுக்கு இவற்றைக் கலந்து மண்பானை நீரில் சிறிது நேரம் வைத்திருந்தால் அந்நீர் குளிர்ச்சியான பானமாகிவிடும். இது தாகத்தை அடக்கும்.
- பாகற்காய் சமைக்கும்போது அதனுடன் சிறிது புளி சேர்த்துச் சமைத்தால் கசப்புப் போய்விடும். சாப்பிடுவதற்கும் நன்றாக இருக்கும்.
- வீட்டில் தேனீர் தயாரிக்கும்போது துளசி இலை தட்டிப் போட்டால் தேனீர் குடிக்க வாசமாகவும் சுவையாகவும் இருக்கும். உடலுக்கும் நல்லது.
- சமையலுக்குப் பயன்படுத்தும் உப்பை எவர்சில்வர் பாத்திரத்தில் வைத்தால் பாத்திரத்தில் ஒட்டை விழுந்து விடும். உப்பை மண்சட்டி அல்லது பீங்கான் சாடியில் வைத்துப் பயன்படுத்த வேண்டும்.
- கற்பூரத்தைப் போத்தலில் போட்டு வைக்கும்போது அதனுடன் சிறிது மிளகையும் சேர்த்துப் போட்டு வைத்தால் கற்பூரம் அதிக நாட்கள் இருக்கும்.
- பசி இல்லையா? காலையில் வேறு எதுவும் சாப்பிடாமல் இஞ்சிச்சாறு எடுத்து வடிகட்டி அதில் எலுமிச்சைச் சாறு, தேன் கலந்து 3 நாள் குடித்து வந்தால் நன்றாகப் பசியெடுக்கும்.

எத்தனை வயது வரை பிரசவம்?

பெண்கள் எத்தனை வயது வரை குழந்தை பெற்றுக் கொள்ளலாம்? உடல் ஆரோக்கியமாக இருந்தால், குழந்தை பிறக்க உதவும் கரு முட்டைகளை உற்பத்தி செய்யும் சக்தியைப் பெற்றிருந்தால் 45 வயதுவரை பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்ள முடியும்.

30 வயதைத் தாண்டி விட்டாலே பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதில் பலவித பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. ஓவரியன் முட்டைகளைச் சுரப்பது குறைந்து விடுகிறது. மேலும் 40 வயதில் குழந்தை பெற்றுக் கொள்ளும்போது, உடல் ரீதியாகப் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. வயதான நிலையில் இருந்து குழந்தையை வளர்க்கக் கஷ்டப்படவேண்டி இருக்கிறது.

வேலைக்குச் செல்லும் மற்றும் வயதாகும் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ள உடல் தகுதியாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய புதிய கருத்தரிப்பு சோதனை ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தச் சோதனை மூலம் 'இன்ஹி பின்பி' என்ற சுரப்பி உற்பத்தி செய்யும் பெண் கரு முட்டைகள் கருத்தரிக்க முடியுமா என்று கண்டறியப்படுகிறது.

இவ்வாறு சோதனை மூலமாகத் தெரிந்து கொண்டால் கருத்தரிப்பைத் தள்ளியும் போடலாம். இல்லை என்றால் உடனடியாகக் குழந்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை GE

பெயர்:..............................
முகவரி:..............................
....
தொழில்:..............................
கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-08-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

கொட்டாஞ்சேனை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞

என். மகேஸ்வரி,
23, வாசல வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

வழங்குவது

02 **புவனா**

மோனிக்கா என் மோனிக்கா

வெள்ளை மாளிகையைக் கலக்கிய அழகி மோனிக்காவின் உண்மைக் கதை! உள்ளம் திறந்து அவர் கூறிய கதையுடன் மோனிக்கா பற்றி பல்வேறு செய்தியாளர்கள் சேகரித்த சுவையான தகவல்களையும் உள்ளடக்கியதே இந்தக் கதை

பேவர்லி ஹில்ஸ் உயர்நிலைப் பள்ளியில் நாடகவியல் பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டாள் மோனிக்கா.

நாடகப்பிரிவில் ஆண் பெண் மாணவர்கள் மிகவும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் இருந்தன.

ஆண் நண்பன் வேண்டும் என்று ஏங்கிய மோனிக்காவின் நீலநிறக் கண்கள், தனக்கு ஏற்ற ஜோடியைத் தேடின.

நாடகப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் மோனிக்காவை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

மோனிக்காவின் கண்களில் தேங்கியிருந்த ஏக்கத்தை அவர் கண்டுகொண்டார். மோனிக்காவின் கண்கள் அலைபாய்வதை அவர் கண்டு கொண்டார். மோனிக்காவிடம் செக்ஸ் பலவீனம் இருக்கிறது என்பதை அவர் கண்டு கொண்டார்.

மோனிக்காவை ஒருநாள் தனியாக அழைத்து "நடிப்பில் உனக்கு ஆர்வமுண்டா?" என்று விசாரித்தார்.

"ஆம்!" என்றாள்.

நாடகப்பிரிவில் சேர்பவர்கள் முதலில் ஆடை அலங்காரங்கள் தைக்கும் பிரிவில் சேர்க்கப்படுவார்கள். பின்னர்தான் நாடகங்களில் நடிக்க வாய்ப்புத் தரப்படும்.

"உனக்கு விரைவில் நாடகப் பிரிவில் நடிக்கும் வாய்ப்பை நான் பெற்றுத் தருகிறேன்!" என்று கூறினார் ஆசிரியர்.

மோனிக்காவுக்கு சந்தோசமாக இருந்தது. வாய்ப்புத் தருவதாகச் சொன்னதைவிட, அவர் தன்னை அழைத்து முக்கியத்துவம் கொடுத்து, அன்பாகப் பேசியது உற்சாகமாகவும் இருந்தது. "நன்றி" சொன்னாள்.

"ஏன் உடம்பு இப்படி புஸ் புஸ் என்று பெருத்துவிட்டது?" என்று கேட்டபடியே மோனிக்காவின் இடுப்பைத் தொட்டார்.

"அம்மாடி எவ்வளவு சதை போட்டிருக்கிறது?" என்று கைகளால் இடுப்பு முழுக்க தடவினார்.

பின்னர் மோனிக்காவின் பின்புறத்தில் இடுப்புக்கு கீழே அவர் கை சென்றது.

"இதனையும், குறைத்துக்கொள். இல்லாவிட்டால் நடிக்கும்போது சிரமம்!" என்று அங்கும் கையால் அழுத்தினார்.

மோனிக்கா ஆசிரியரின் நோக்கத்தை ஊகித்துக் கொண்டாள்.

அவளுக்கும் அந்த நெருக்கமும், அவரது செயல்களும் பிடித்திருந்தன. அவரது நோக்கத்தை அறியாதது போல அப்பாவியாக முகத்தை வைத்தபடி, அவரது செயலை உள்ளே இரசித்தாள்.

அந்த நாடகவியல் பிரிவில் அவர் முக்கிய ஆசிரியர் என்பதால் அவரைக் கைக்குள் போட்டுக் கொள்வது நல்லது என்றும் மோனிக்கா நினைக்கத் தவறவில்லை.

அதிகாரம் உள்ளவர்களை, அவர்களது பலவீனத்தைப் பயன்படுத்தி கைக்குள் போட்டுக் கொள்ளும் சாதுரியம் மோனிக்காவிடம் தோன்றியது அப்போதுதான்.

சக மாணவர்களுக்குள் ஆண் நண்பனை தேடிய மோனிக்காவுக்கு, ஆசிரியரே நண்பராகி விட்டார்.

அந்த ஆசிரியர் திருமணமானவர். பிள்ளைகளும் இருந்தனர். நடுத்தர வயதைத் தாண்டி விட்டார். தலையில் முடிகளை எண்ணி விடலாம்.

அவர் அடிக்கடி மோனிக்காவை அழைத்து ஏதாவது வேலை கூறுவார். வேலை கூறும் சாக்கில் ஆங்காங்கே தொட்டுப் பார்ப்பார்.

ஒருமுறை மாணவர்கள் அனைவரும் வெளியே போயிருந்தபோது, மோனிக்காவும் ஆசிரியரும் மட்டுமே இருந்தனர்.

சுற்றுமுற்றும் திருடன்போலப் பார்த்துவிட்டு, மோனிக்காவை கட்டியணைத்து அவளது உதடுகளை கவ்வி முத்தமிட்டார் ஆசிரியர்.

நான் மெலிந்தாக வேண்டும்

அதுதான் மோனிக்காவுக்கு முதல் முத்தம். அவளுக்கு மூச்சு நின்றுவிடும்போல இருந்தது. உடம்பெங்கும் சூடு ஓடிப் பரவியது. கைகால்கள் நடுங்கின. தன்னை விடுவித்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

அப்போது பதற்றமாக இருந்தது. பயமாக இருந்தது. இருதயம் கடுகதி வேகத்தில் துடித்தது. நாவறண்டு போய்விட்டது.

பின்னர் நிதானமாக அந்த அனுபவத்தை எடைபோட்டுப் பார்த்தபோது, மோனிக்காவுக்கு அந்த அனுபவம் மீண்டும் வேண்டும் போலிருந்தது.

அந்த ஆசிரியர் தொடுவது, முத்தமிடுவது என்பதோடு நிறுத்திக்கொண்டார். அதற்கு மேல் செல்ல துணியவில்லை. ஆனால் அவரது தூண்டல்களால் 'அதற்கு மேல் என்ன?' என்று அறியும் ஆர்வம் மோனிக்காவிடம் ஏற்பட்டிருந்தது.

பரிசு

மோனிக்காவின் சக மாணவி ஒருத்தி தன் அனுபவங்களை கூச்சமில்லாமல் பச்சை பச்சையாக அவளிடம் கூறுவாள். காதல் லீலைகளில் கரை கண்டவள் அவள்.

இதற்கிடையே அந்த ஆசிரியரின் உதவியால் நாடகவியல் பிரிவில் மோனிக்காவுக்கு முக்கிய இடம் கிடைக்கத் தொடங்கியது.

கல்லூரியில் ஷேக்ஸ்பியர் நாடக விழா நடந்தது. அந்த விழாவுக்கான ஆடைகளை தயாரிப்பதில் மோனிக்காவுக்கு சிறப்பிடம் தரப்பட்டது.

'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இரு' என்று தமிழில் கூறுவோம் அல்லவா?

மோனிக்காவுக்கும் அந்தப் பழமொழி பொருந்தும். என்னதான் கூத்தாடினாலும் கொடுத்த வேலைகளை செவ்வனே செய்து முடித்து விடுவாள். நாடகவிழா முடிந்ததும் மோனிக்காவுக்கு பாராட்டுக்கள் குவிந்தன. மோனிக்கா கல்லூரியில் பிரபலமாகத் தொடங்கினாள்.

மற்றொரு வாய்ப்பும் அவளைத் தேடி வந்தது. நாடகம் ஒன்றுக்காக எலிஸபெத் மகாராணி கால உடை ஒன்றை தயாரிக்குமாறு பொறுப்பைக் கொடுத்தனர்.

கண்ணும் கருத்துமாக பாடுபட்டு கச்சிதமாக அந்த உடையை தயாரித்துக் கொடுத்தாள்.

அந்த உடைக்காக முன்றாவது பரிசும் கிடைத்தது. பரிசைப் பெற்றபோது மோனிக்காவுக்குத் தாங்கமுடியாத சந்தோசத்தில் கண்ணீர் வந்துவிட்டது. மேடையிலேயே அழுதுவிட்டாள்.

"பரிசு வாங்கும்போது யாராவது அழுவார்களா? குழந்தை மாதிரி நடந்து கொண்டாயே, நீ இன்னமும் குழந்தைதானோ?" என்று சக மாணவிகள் கேலி செய்ய ஆரம்பித்து விட்டனர்.

வீட்டில் பெற்றோரின் சண்டையால் மனதில் ஏற்பட்ட காயங்களுக்கு கல்லூரியில் கிடைத்த பாராட்டுக்கள் ஒத்தடமாக இருந்தன.

தனது மகிழ்ச்சியை, தன் திறமைக்குக் கிடைத்த பாராட்டுக்களை பெற்றோருடன் பகிர்ந்துகொள்ள முடியாதது துயரமாகவே இருந்தது.

திருப்பம்

மோனிக்காவின் சக மாணவி தன் ஆண் நண்பனை மோனிக்காவிடம் அறிமுகம் செய்து வைத்தாள். அவனும் அதே கல்லூரியில்தான் படித்தான்.

அவனது பெயர் மைக்கேல் கிளஸோவ். மோனிக்காவை அவன் மேலிருந்து கீழ்வரை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவளது நெற்றிக்கு நேராக கூறிய வார்த்தைகள் மோனிக்காவின் வாழ்வில் திருப்பமாக அமைந்தன.

"மோனிக்கா நீ இயற்கையிலேயே மிக அழகானவள். ஆனால் உனது உடல் விஷயத்தில் நீ அக்கறை காட்டுவதில்லை என்று நினைக்கிறேன். அழகை மெருகூட்டும் கலை உனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து உன்னை நீ உயிருட்டிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் இந்த கல்லூரியில் உள்ள மாணவர்கள் எல்லாம் தங்கள் நண்பிகளை தூக்கிப்போட்டுவிட்டு உன் பின்னால் உருண்டோடி வருவார்கள். ஏன் நான்கூட இவளை மறந்துவிட்டு உன் பின்னால் வந்துவிடுவேன்!" என்று கூறி தன் நண்பியிடம் செல்லமாக குத்து வாங்கினான்.

அப்போதுதான் தனக்கு ஆண் நண்பர்கள் ஏன் கிடைக்கவில்லை என்ற உண்மை மோனிக்காவுக்குப் புரிந்தது.

வீட்டுக்குப் போய் கண்ணாடியில் தன்னை நன்கு பார்த்துக்கொண்டாள்.

அவன் சொன்னது உண்மைதான் என்பது அவளுக்கே புரிந்தது.

அப்போது மோனிக்காவின் தாயார் அங்கு வந்துவிட்டார். "என்ன கண்ணாடியில் உன்னை நீயே ஆராய்ச்சி செய்கிறாயா?" என்று கேட்டாள் அம்மா.

மோனிக்காவின் வாயிலிருந்து திடமாக, உறுதியாக பதில் வந்தது, "அம்மா நான் மெலிந்தாக வேண்டும். அழகாக வேண்டும்!"

தாயார் மார்சியாவுக்கு மகளின் குரலில் இருந்த தீவிரம் கவலையளித்தது.

"நல்லது அதற்கு ஒரு இடம் இருக்கிறது. எனக்குத் தெரியும். எப்போது போகலாம்?" என்ற மார்சியாவிடம், மோனிக்கா "இப்போதே- இந்த நிமிடமே புறப்படலாம் வா!" என்றாள்.

(வருவாள்)

படிப்பகம்

சக்தி தனக்கே கருவியாக்கு-நல்ல
சக்தியுள்ள சந்ததிகள் தோன்றும்-இடை
சக்தி தனக்கே கருவியாக்கு-நின்றன்
சாதிமுற்றும் நல்லறத்தில் ஊன்றும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

தவளைகளும் தென்னை மரமும்



ஒரு கிராமத்தில் குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் தாமரைக் கொடி படர்ந்திருந்தது. அந்தக் குளத்தின் அருகே ஒரு தென்னைமரமும் இருந்தது. அக்குளத்தில் சில தவளைகளும் வசித்தன.

குளத்தில் இருந்த தவளைகள் எல்லாம் வெயில் நேரத்தில் தாமரை இலை மீது ஏறி அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருக்கும்.

இப்படி ஒருநாள் தவளைகள் எல்லாம் தாமரை இலைமீது இருந்து வெயிலில் குளிர்காய்ந்து கொண்டிருந்தன. அப்போது தென்னை மரத்தில் இருந்த ஒரு தேங்காய் தாமரை இலைமீதிருந்த ஒரு தவளையின் மீது விழுந்தது.

இதனால் அந்தத் தவளை இறந்து விட்டது. உடனே குளத்தில் இருந்த தவளைகள் எல்லாம் ஒன்று கூடின.

'இந்தத் தென்னைமரம் தான் தவளையின்மீது தேங்காயை எறிந்து கொன்று விட்டது.' என நினைத்து வாயில் வந்தபடி தென்னை மரத்தைத் திட்டித் தீர்த்தன.

"நாங்கள் உனக்கு என்ன செய்தோம்? எங்களில் ஒருவனைக் கொன்று விட்டாயே. கொலைகாரா... பாதகா... நீ நாசமாய்ப் போக...!" என்று வசைமாரி பொழிந்தன.

இவற்றையெல்லாம் கேட்ட வயதான தவளை, மற்றத் தவளைகளிடம்,

"நீங்கள் எல்லாரும் இப்படித் திட்டுவதால் யாருக்கு என்ன லாபம்? தென்னைக்கு என்ன கண் இருக்கிறதா? காது இருக்கிறதா? நீங்கள் திட்டுவதால் தென்னைக்கு என்ன நடந்துவிடப் போகிறது?

தென்னை வேண்டுமென்றா தேங்காயை வீசியது? தற்செயலாக நடந்த ஒரு நிகழ்ச்சி தான் இது. நாம் கத்துவதால் நமக்குத்தான் வாய்வலிக்கும். எனவே பேசாமல் இருப்பது தான் நல்லது!" என்று புத்திமதி கூறியது.

வயதான தவளை சொன்ன புத்திமதிகளைக் கேட்ட மற்றத் தவளைகளுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. அவை வயதான தவளையைப் பார்த்து,

"கிழட்டுத் தவளையே! என்ன நீயும் அந்தக் கொலைகாரத் தென்னை மரத்துக்கு ஆதரவாகப் பேசுகிறாய்? நாளை தென்னை மரத்துடன் சேர்ந்துகொண்டு எங்களையும் நீ அழித்து விடுவாய் போலிருக்கிறதே!

தென்னை மரத்தைச் சும்மா விட்டது போல் உன்னையும் சும்மா விடுவோம் என்று நினைத்தாயா?" என்று கூறி வயதான தவளையை எல்லாத் தவளைகளும் சேர்ந்து கொண்டு அடித்தே கொன்று விட்டன.

'குழந்தைகளே! அறிவில்லாதவர்களுக்கு அறிவுரை கூறினால், வயதான தவளைக்கு ஏற்பட்ட நிலைமைதான் எமக்கும் ஏற்படும்!'

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **14.08.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **308**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 306

பரிசுக்குரியவர்:
எஸ். ஷ.ீபீக்கா,
ஆமினா மகா வித்தியாலயம், மாத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

சன்ரா விஜேக்குமார், மெதடிஸ்த கல்லூரி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.	பர்ஸானா பாரூக், பாத்திமா பெண்கள் முஸ்லிம் வித்தியாலயம், முருதகஹாமுல்ல.
எம். சிபாயா, தி/ மெதடிஸ் பெண்கள் கல்லூரி, திருகோணமலை.	நிலுஷிகா ஜெயசந்திரன், ராமநாதன் இந்துமகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி.
ஸ்ரீஸ்கந்தராஜா வினோதன், இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை.	எஸ். ரஜனி, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா.
அகீலா எஸ். ஜுஹார், புனித ஜோஷப் மகளிர் வித்தியாலயம், கிரேண்ட்பாஸ், கொ-14.	எம்.என்.எ.ீப். நிம்னாஸ், மின்ஹாத் மஹா வித்தியாலயம், டிக்வெல்ல.
ஜே. கிசன்குமார், சென்ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன்.	யோ. ரமேஷ்குமார், சிவானந்த தேசிய பாடசாலை, கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.

விடுகதைகளும் விடைகளும்

1. வானில் இருந்து பூமிக்கு வந்த வெள்ளிக் கம்பி தரையில் பட்டதும் தாவி ஓடுது.
அது என்ன?
2. பூந்தோட்டத்தின் நடுவே ஒரு பெரிய பொன் முட்டை.
அது என்ன?
3. மூடி வைத்த முத்துக் கோர்வையைத் திறந்தாலும் கவலை இல்லை.
அது என்ன?
4. பூமியில் பிறந்தவன், புகையால் மறைவான்.
அவன் யார்?
5. கரைப்பார் யாருமின்றியே கரையும் கல்.
அது என்ன?
6. வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள்.
அவள் யார்?
7. வெடித்துப் பறப்பான், ஆடையாய்ப் பிறப்பான்.
அவன் யார்?
8. துடிக்க மறந்தால், துடிப்போர் ஆயிரம் பேர்.
அது என்ன?

விடைகள்

1. மழைத்துளி
2. நட்சத்திரங்கள்-நிலவு
3. பற்கள்
4. பெட்ரோலியம்
5. பனிக்கட்டி
6. ஆறு
7. பஞ்சு
8. இதயம்

தொகுப்பு: ஏ. அகல்யா.

சாதனை வானவில்

இங்கிலாந்தின் வடக்கு வேல்ஸ் பகுதியில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி ஒரு வானவில் தோன்றியது. இதில் என்ன சாதனை என்கிறீர்களா?

அன்று தோன்றிய வானவில் 3 மணி நேரம் காட்சியளித்தது. இவ்வளவு நீண்ட நேரம் வானவில் மிக மிக அபூர்வம் என்கிறார்கள் வானியலாளர்கள்

இரத்த தானம்

இரத்ததானம் செய்யும்போது, மருத்துவர்கள் இரத்தம் கொடுப்பவர்களின் உடலில் இருக்கும் மொத்த அளவு இரத்தத்தில் இருந்து இருபதில் ஒரு பகுதியையே எடுத்துக் கொள்கின்றனர். இதன் அளவு 300 கன சென்ரிமீட்டர் இருக்கும்.

இந்த இழக்கும் இரத்தத்தை இரத்த தானம் கொடுப்பவரின் உடல் மூன்றே மூன்று வாரங்களில் ஈடு செய்துவிடும்.

அதிசயம் - ஆனால் உண்மை!

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜுவான் வின்சென்ட் என்ற நூலகத் தலைவர் வரலாற்றிலேயே விந்தையாகப் புத்தகம் சேகரிப்பவர். இவர் 1830க்கும் 1835க்கும் இடையே 9 பேரைக் கொன்றார். ஏன் தெரியுமா? கொல்லப்பட்டவர்களிடமிருந்து ஒவ்வொரு புத்தகத்தைக் கைப்பற்றுவதற்காக.



'ஓல்ஸ்பைஸ்' (ALL SPICE) என்ற செடியின் காயில் இருந்து கராம்பு, சாதிக்காய், கறுவா ஆகிய கலவைகளின் நறுமணம் வீசும். இதனால் நறுமணச் செடி என்று பெயர் பெற்றது.



மகுடப்பறவை எனப்படும் ஒரு பறவை மிகச் சிறிய கூடு கட்டும். கூட்டினுள் ஒரு முட்டைதான் கொள்ளும். கூடு அமைந்துள்ள கிளைமீது அமர்ந்து இப்பறவை கூடு கட்டும்.

மெட்டல் டிட்டெக்டர்

விமான நிலையம், வங்கிகள் மற்றும் பல்வேறு இடங்களுக்கு வருபவர்கள் ஆயுதங்களை உடலில் மறைத்து வைத்திருக்கிறார்களா என்று காவலாளிகள் கையில் ஒரு கருவியை வைத்துக்கொண்டு சோதனை செய்வார்கள்.

இந்தக் கருவிக்கு 'மெட்டல் டிட்டெக்டர்' (METAL DITECTOR) என்று பெயர். இது ஒரு மின்னியக்கக் கருவி. இது மின்சார சமிக்ஞைகளை மிக அதிகமான அலைவரிசைகளில் வெளியிடுகிறது. இந்த மின்சார சமிக்ஞைகள் உலோகப் பொருட்களைத் தாக்கும்போது திரும்பி இருக்கும் அலாரம் தொடுகிறது. உடனே அலாரம் 'கிணிங் கிணிங்' என்று சத்தமிடும்.

ஆனால் உலோகம் அல்லாத பிளாஸ்டிக், மரப்பொருட்கள் மீது படும்போது அலாரம் எழுப்பப்படாது. இப்போது தெரிந்துகொண்டீர்களா இந்த 'மெட்டல் டிட்டெக்டர்' எவ்வாறு இயங்குகிறதென்று.

விமான நிறுவன சாதனை

ஒவ்வொரு வருடமும் 'பிரிட்டிஷ் எயார்வேஸ்' விமான நிறுவனத்தின் விமானங்களில் ஒரு கோடிப் பேர் பயணம் செய்கிறார்கள். இதில் ஒரு மணித்தியாலத்தில் 1200 பயணிகள் என்ற கணக்கிற்கும் அதிகம்.

இந்த நிறுவனத்தின் விமானங்களில் வருடம் ஒன்றிற்கு 40 தொன் பழச்சாறு பரிமாறப்படுகிறது. இதைவிட 125 தொன் ஆட்டிறைச்சியும், 41 தொன் கோழி இறைச்சியும், ஒரு கோடியே 2 இலட்சம் சொக்கிளேட் பார்களும், ஸ்ட்ரோபெர்ரி பழங்கள் 50 தொன் போன்றவையும் பரிமாறப்படுகின்றன.

அதிக பயணிகள் சாதனை மட்டுமன்றி, பயணிகளைச் சுமந்து செல்வதன் மூலம் உலகில் அதிக வருமானம் குவிக்கும் விமான நிறுவனமும் 'பிரிட்டிஷ் எயார்வேஸ்'தான்.

விலையுயர்ந்த வாயுக்கள்

சில அரிய வாயுக்கள் அதிக விலை மதிப்பு உடையவை. ஆர்கன், நியோன், ஹீலியம், கிர்ப்டன் ஜெனோன் என்பவை விலையுயர்ந்த வாயுக்கள் ஆகும். இவை ஈரப்பதம் அதிகமுடைய காற்றில் அதிகம் கலந்துள்ளன.

கடல் நீரிலும் காற்றுக் கலந்த கடல் நீரிலும் இவை உள்ளன. நியோன் வாயு விளம்பர விளக்குகளில் பயன்படுகிறது. ஹீலியம் விமானம் பறக்க பயன்படுகிறது.

இந்த வாயுக்கள் வானியல் மாற்றங்கள், இயற்கை மற்றும் வேதியல் தாக்கங்கள் ஆகியவற்றை எதிர்த்து அதிக சக்தியுடையதாகத் திகழ்கின்றன. கடுமையான வெப்பம் கூட இந்த வாயுக்களை ஒன்றும் செய்ய முடியாது.

இந்த அரிய வாயுக்சள் விலையுயர்ந்த தங்கம், பிளாட்டினம் போன்ற உலோகங்களைவிட விலை கூடியவை.

பனிச் சிறுத்தை

வேகமாக அழிந்துவரும் அபூர்வ விலங்குகளில் பனிச்சிறுத்தையும் ஒன்று. இமயமலையில் மட்டுமே இவை காணப்படுகின்றன.

12 ஆயிரம் அடி முதல் 16 ஆயிரம் அடி உயரமுள்ள இமயமலையின் பனி சூழ்ந்த பகுதிகளில் பனிச்சிறுத்தைகள் காணப்படுகின்றன. அடர்த்தியான ரோமங்கள் கொண்ட இவற்றின் தோல் கடுங்குளிரைத் தாங்கிக் கொள்வதற்கேற்ப நடித்துள்ளது. உடல் சாம்பல், பழுப்பு, வெள்ளைநிறம் கலந்து காணப்படும்.

சாதாரண சிறுத்தைகளின் உடலில் இருப்பது போல வட்டமான பெரும் புள்ளிகளும் இருக்கின்றன. நீண்ட வாலும் உண்டு. பனிப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் இவை மற்ற சிறுத்தைகளைப்போல வேகமாக ஓடுவதிலும், வேட்டையாடுவதிலும் திறமையானவை.

இவற்றின் விருப்பமான உணவு இமயமலையில் உள்ள நீல ஆடுகள். இவற்றின் நிறம் பெயரைப்போலவே நீல நிறம்.

படிப்பகம்

கைப்பிடியில் சிக்கிய மின்னல்

15



இதுவரை

பாக்கியத்தின் மகள்
வர்ணாவின் நாய் பிங்கிக்கு
'டிஸ்டெம்பர்' எனப்படும்
கொடிய நோய் வருகிறது.
அதனைக் காப்பாற்றவே முடியாது
என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர்.
ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர்
பிழைக்கிறது.
இதேவேளை, சொர்ணம், நீலமேகம்
தம்பதியின்
மகள் பூவிழி கொலையாகிறாள்.

இனி...

"கொஞ்சம் அதிர்ச்சியாயிருக்கும் பரவாயில்லையா?" என்று ஏ.ஓ. குருமூர்த்தி கேட்டதும், இன்ஸ்பெக்டர் பலராமன் திகைத்த மாதிரி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"சொல்லுங்க... விஷயம் வெளியே வந்தாத்தானே உண்மையைத் தோலுரிச்சுக் காட்ட முடியும்..."

"ஸார்..பூவிழி ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும், அது கேரக்டர் சரியில்லை ஸார்."

"கேரக்டர் சரியில்லைன்னா எப்படி...?"

"அவளுக்கு பாய்ஃப்ரண்ட்ஸ் அதிகம் ஸார். நானே நாலைஞ்சு தடவை இராத்திரி நேரங்கள்ல பீச்சுப் பக்கம் பார்த்திருக்கேன். கார்க்குள்ளே எந்த இளைஞனுக்கு பக்கத்தில யாவது உட்கார்ந்து பேசிட்டிருப்பா..."

"பூவிழியோட ஃபேமிலி பேக்கிரௌண்டை பார்த்தா அவளை ஒரு மோசமான பெண்ணா நினைக்க முடியலையே?"

"ஸார்...எனக்கும் ஆரம்பத்துல அந்த சந்தேகம் இருந்தது. ஒருநாள் பூவிழியைக் கூப்பிட்டு பீச்சுல உன்னை நாலைஞ்சு தடவை இராத்திரி நேரங்கள்ல பார்த்தேன்னு விஷயத்தை ஆரம்பிச்சேன். அதுக்கு அது, 'ஸார்... அது என்னோட பர்சனல் மேட்டர். அதைப் பத்தி நீங்க எந்த ஒரு கேள்வியைக் கேட்கறதையும் நான் விரும்பலை'ன்னு சொல்லிட்டா. அதுக்கப்புறம் நானும் அதைப்பத்தி பேசறதை விட்டுட்டேன்."

"சரி... பூவிழியோட கேரக்டர் எப்படிப்பட்டதுன்னு பின்னாடி பார்த்துக்குவோம். இப்ப அந்த மிதுனைப் பத்தி சொல்லுங்க. மிதுன் எதுக்காக வந்து இங்கே ரகளை பண்ணினான்? பூவிழிக்கும் அவனுக்கும் பர்சனலா ஏதாவது தகராறு இருந்ததா?"

"இன்ஸ்பெக்டர்...! நீங்க சொல்ற அந்த மிதுன் அவ்வளவு நல்லவன் கிடையாது. ஓர் அரசியல் புள்ளியோட கையாள்."

"யாரந்த அரசியல் புள்ளி...?"

"அவர் ஒரு மாஜி அமைச்சர். ஊழல் வழக்குகளில் மாட்டியிருக்கிற நபர்."

"பேரைச் சொல்லுங்க...?"

"செல்வபாண்டி..."

"செல்வபாண்டியோட கையாள் மிதுனுக்கும் உங்க கம்பெனிக்கும் என்ன தொடர்பு...?"

"ஸார்... எங்க கன்ஸல்டன்ஸி க்யூப் கம்பெனியில டிடெக்டிவ் ஏஜென்ஸி பிரிவு ஒண்ணு இருக்கு. பொலிஸுக்கு போக விரும்பாத சில வி.ஐ.பி.க்கள் எங்ககிட்ட அவங்க ளோட பிரச்சனைகளைக் கொண்டு வருவாங்க. நாங்களும் ஒரு தொகையை ஃபீஸா வாங்கிக்கிட்டு அந்தக் காரியத்தை முடிச்சுக் கொடுப்போம்... போன மாசத்துல ஒருநாள் இந்த மிதுன் என்னைப் பார்க்க வந்தான். மாஜி அமைச்சர் செல்வபாண்டி அனுப்பி வைச்சதா சொன்னான். நான் விபரம் கேட்டேன்."

"என்ன சொன்னான்...?"

"ஊழல் வழக்குகளில் மாட்டியிருக்கிற செல்வபாண்டிய... அந்த வழக்குகளில் இருந்து தப்பிக்க சில ஆதாரங்களைத் தேடிக்கிட்டிருக்கிறதாகவும், அவைகளைக் கண்டுபிடிச்சுக் கொடுத்தா பெரிய தொகை ஒண்ணை தர்றதாகவும் சொல்லிட்டு மிதுன் வந்தான்."

"பெரிய தொகைன்னா எவ்வளவு...?"

"ஒரு கோடி..."

"சரி அந்த வேலையை ஏத்துக்கிட்டீங்களா?"

"மொதல்ல மாட்டோம்னு சொன்னோம். ஆனா மிதுன் கேட்கலை. அட்வான்ஸா ஒரு தொகையைக் கொடுத்து எப்படியோ பேசி ஒத்துக்க வெச்சுட்டான். நாங்களும் அரைமனசோடு ஒத்துக்கிட்டு வேலையை ஆரம்பிச்சோம். இந்த வேலையில் பூவிழியை இன்வால்வ் பண்ணி ட்ரையல் பார்த்தோம். செல்வபாண்டி சொன்ன ஆதாரங்களைத் திரட்டறது அவ்வளவு சுலபமா தெரியலை... ஒருநாள் பூவிழி வந்து, 'இந்த வேலையை என்னால பார்க்க முடியாது'ன்னு சொல்லிட்டா... நாங்களும் உடனே மிதுனை காண்டாக்ட் பண்ணி அட்வான்ஸ் தொகையை திருப்பி வாங்கிட்டு போகச் சொன்னோம். அவனும் வந்து பணத்தை வாங்கிட்டு போனான்.

பிரச்சனை அதோடு முடிஞ்சதுன்னு நாங்க நெனைச்சோம். பட்.. அடுத்த ரெண்டு நாளிலேயே மிதுன் எங்க கம்பெனிக்கு திரும்பி வந்தான். மாஜி அமைச்சர் செல்வபாண்டியோட ஊழல் வழக்குகளுக்கு எதிரான ஆதாரங்களை பூவிழி கலெக்ட் செய்து அவைகளை ஒரு நல்ல விலைக்கு ஆளும் கட்சிக்கு விற்று விட்டதாக புகார் செய்தான். அந்தப் புகாரில் உண்மை இல்லை என்று எவ்வளவு எடுத்துச் சொல்லியும் மிதுன் கேட்கலை. அடிக்கடி வந்து என்கிட்டேயும் சில சமயங்களில் பூவிழிகிட்டேயும் தகராறு பண்ணிட்டிருந்தான்."

பலராமன் கோபமாய் குருமூர்த்தியை ஏறிட்டார். "நீங்க சொல்ற விஷயங்களை வெச்சுப் பார்க்கும்போது மிதுன்தான் பூவிழியைக் கொலை பண்ணியிருக்கணும்னு தோணுது."

"மே..பி...ஸார்..."

"நேத்திக்கு விசாரணைக்காக உங்ககிட்ட வந்தபோதே இந்த மிதுன் விவகாரத்தைச் சொல்லியிருக்கலாமே... எதுக்காக மறைச்சீங்க?"

"ஸார்... இது ஒரு மாஜி அமைச்சர் சம்பந்தப்பட்ட விவகாரம். அவர்க்கு உதவி பண்றதா சொல்லி பணம் வாங்கினதே தப்பு. இந்த விஷயமெல்லாம் வெளியே வந்தா எங்க கம்பெனியோட பேர் கெட்டுடுமே என்கிற காரணத்திற்காகத்தான் உங்ககிட்டயிருந்து விஷயத்தை மறைச்சேன்... மிதுன் விஷயம் உங்களுக்குத் தெரிய வந்ததினால்தான் நானும் விஷயத்தைச் சொல்ல வேண்டி வந்தது..."

பலராமன் எழுந்து கொண்டார்.

"மிதுனை இப்போ எங்கே பார்க்கலாம்?"

"கட்சி ஆபீஸில். அட்ரஸ் தர்றேன் நோட் பண்ணிக்குங்க ஸார்..."

குருமூர்த்தி அட்ரசை சொல்ல பலராமன் ஒரு சிறிய பேப்பரில் குறித்துக் கொண்டு புறப்பட்டார். பைக்கில் இருபது நிமிஷப் பயணம்.

மயிலாப்பூரில் ஜன சந்தடியற்ற ஒரு தெருவில் அந்தக் கட்சி அலுவலகம் இருந்தது. கொடிக்கம்பத்தில் சாயம்போன கொடி பறந்தது. இரண்டு கட்சித் தொண்டர்கள் ஒரு மரத்துக்குக் கீழே போடப்பட்டிருந்த சிமெண்ட் திட்டில் உட்கார்ந்து பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

பலராமனைப் பார்த்ததும் குழப்பப் பார்வைகளோடு எழுந்து நின்றார்கள்.

"மிதுன் எங்கே...?" பைக்கை ஸ்டாண்ட் போட்டுக்கொண்டே பலராமன் கேட்க, அவர்கள் கட்டடத்தின் வலப்பக்கம் கோடியில் இருந்த அறையைக் காட்டினார்கள்.

பலராமன் போனார்.

பாதிக்கதவு திறந்திருக்க அறைக்குள்ளே யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

கதவை இன்னமும் நன்றாகத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்தார். பரட்டைத் தலையோடு முகத்தில் முரட்டுத்தனத்தைக் குடிவைத்திருந்த அந்த இளைஞன் பலராமனை பார்வையில் வாங்கியதும் கொஞ்சம் கூட பதற்றப்படாமல் உட்கார்ந்த இடத்தை விட்டு கொஞ்சமும் அசையாமல் புன்னகைத்தான்.

"வாங்க இன்ஸ்பெக்டர் நீங்க தேடிட்டு வந்த மிதுன் நான்தான். பூவிழி கொலையான செய்தியைப் பேப்பர்ல படிச்ச நிமிஷத்திலிருந்து உங்களை நான் எதிர்பார்த்துட்டிருக்கேன்...ப்ளீஸ்... உள்ளே வாங்க..."

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

★★★

"நான் வர்ணாவோட தனியா பேசணும்..."

பார்கவி இப்படிச் சொன்னதும் டாக்டர் வர்ணாவை ஏறிட்டார்.

"நீயே பேசி வாக்குமூலத்தை வாங்கும்மா. பார்கவி தனக்குத்தானே தீ வெச்சுக்கிட்டாளா... இல்லை யாராவது மண்ணெண்ணையை ஊத்தி தீ வெச்சாங்களான்னு கேளம்மா!" என்று சொன்னவர் குரலை வெகுவாய்த் தாழ்த்திக் கொண்டு யார்க்கும் கேட்காத தொனியில் சொன்னார்,

"நெருப்பு உடம்புக்குள்ளே ஊடுருவி உள் உறுப்புக்களையும் தாக்கியிருக்கு. இந்தப் பொண்ணு உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. மீறி மீறிப்போனா இன்னும் பத்து நிமிஷம் உயிரோடு இருப்பா. அதுக்குள்ள அவகிட்ட பேசி உண்மையை வாங்கணும்..."

"நான் பேசிக்கிறேன் டாக்டர். உங்களுக்கு வேண்டிய வாக்குமூலத்தை நான் வாங்கித் தர்றேன்."

அறைக்குள் இருந்த அனைவரும் வெளியே போய்விட வர்ணா பார்கவியின் கையைப் பற்றிக்கொண்டு மண்டியிட்டு உட்கார்ந்தாள்.

"பார்கவி... நீ தற்கொலை பண்ணியிருக்கிற முடிவுக்கு போயிருக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினது யாரு...?"

"யா...யாருமில்லை..." மூச்சிறைத்தாள்.

"பின்னே எப்படி...?"

"ஷெ...ஷெல்ப்ல வெச்சிருந்த மண்ணெண்ணெய் கேன் கவிழ்ந்து உடம்பெல்லாம் எண்ணெயாகி பக்கத்துல ஸ்டவ் எரிஞ்சிட்டிருந்ததால..."

பார்கவிக்கு இப்போது மூச்சு வேகமாய் இறைத்தது.

"பொய் சொல்லாதே... உன் புருஷன் தானே இதுக்குக் காரணம்..."

"இ...இல்ல வர்ணா... அவர் மேல எந்தத் தப்பும் கிடையாது. அவர்க்கு கோபம் வந்தா அடிப்பார். ஆனா என் மேல அவர்க்கு பிரியம் அதிகம்...அவரை பொலிஸ்ல அடிக்க வேண்டாம்னு சொல்லிடு...!"

கண்களில் நீர் கோர்த்தது பார்கவிக்கு.

"வ...ர்...ணா..."

"சொல்லு...பார்கவி...நீ என்ன சொல்லணும்னு நினைக்கிறியோ சொல்லு..."

"இ...இனி...நான்... பிழைக்க மாட்டேன். என்னோட உயிர் பிரியறதுக்கு முன்னாடி உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். அந்த விஷயத்தை வெளியே யார்க்கும் சொல்லாமே உன் மனசுக்குள்ளே வெச்சிருந்து அது சம்பந்தமா நான் கேட்கப் போகிற ஒரு உதவியையும் செய்யணும்..."

"இதோ. பார்..பார்கவி..உனக்கு ஒண்ணும் ஆகாது. தைரியமா இரு! நீ சாக மாட்டே..! உன்னை ஹாஸ்பிடலுக்கு கூட்டிப்போய் ட்ரீட்மெண்ட் குடுத்தா எல்லாம் சரியாயிடும். நீ என்கிட்ட என்ன சொல்லணுமோ சொல்லு. உனக்காக நான் எதையும் பண்ணத் தயாராயிருக்கேன்."

பார்கவி வர்ணாவின் கையை இறுகப் பற்றிக்கொண்டு மூச்சிறைத்தாள். பின் மூச்சிறைப்பின் பின்னணியில் வார்த்தைகளைத் துண்டு துண்டாய் பேச ஆரம்பித்தாள்.

(தொடர்ந்து வரும்)

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது அஜ்மீர். அங்கு இருந்து ஆட்சி புரிந்த மகாராஜாக்களது அந்தப்புரக் கதைகள் சுவாரசியமானவை. அவைதான் இங்கு அரங்கேறுகின்றன.

அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்

06

புதிதாக எந்தப் பெண்ணை மகாராஜா மணந்து வந்தாலும் இதர ராணிகள் மணமகளை, 'அவள் பரிசுத்தமானவளோ, இல்லையோ... அழகாக இருந்தால் மட்டும் போதுமா?' என்பதுபோல் பேசிக்கொள்வார்களாம்.

மகாராஜா மணந்த ஒரு மணப் பெண்ணின் ஆடையில் துரதிருஷ்டவசமாக உதிரம் படியவில்லை. ராஜா தன்னைத் தண்டித்து விடுவாரோ என்று பயந்து தோழியின் உதவியோடு சிவப்பு மையைத் தெளித்து மகாராஜாவுக்கு அனுப்பி வைத்தாளாம்.

★★

கேரளாவில் ஒரு காலத்தில் இருந்து வந்த ஓர் அநாகரிக வழக்கம் போல அஜ்மீரிலும் இருந்து வந்தது. மகாராஜா தெருவில் பவனி வந்தாரென்றால் எதிர்ப்படும் எந்தப் பெண்ணும் உடனே தனது முட்டாக்கு மற்றும் மார்புச் சேலையை விலக்கித் தனது முகத்தையும் மார்பையும் மகாராஜாவுக்குக் காட்டவேண்டும்.

மகாராஜாவிடம் எதையும், மறைக்க யாருக்கும் உரிமை கிடையாது என்பதற்காக வகுக்கப்பட்ட சட்டம் இது.

மிக அழகான பெண்ணாயிருந்தால் மகாராஜா தனது அமைச்சரையோ திவானையோ அனுப்பித் தனதாக்கிக்கொண்டு விடுவார். சில பெண்கள் திருமணமாகியிருப்பர். அத்தகையவர்களின் கணவன்மார் வேறு பெண்ணை மணந்து கொள்ளும் திருமணச் செலவை மகாராஜாவே ஏற்றுக் கொள்வார். அத்துடன் நூறு பவுண் காசுகளும் கணவனுக்கு வழங்குவார்.

பிறத்தியாரது அழகிய மனைவிகளை அரசர் மணந்தால் தனியான அந்தப்புரத்தில்தான் வைப்பாரே தவிர இதர ராணிகளுடன் வசிக்கும் அந்தஸ்தை அவர்களுக்கு வழங்கமாட்டார்.

மகாராஜா எவ்வளவோ விழிப்புடனிருந்தாலும் அவரது கண்ணில் மிளகாய்ப் பொடி தூவிவிட்டு ஏமாற்றுகிற ராணிகள் நிறையப் பேர் இருந்தனர்.

ஒரு ராணி படுக்கையில் தலையணைகளை வைத்துப் போர்வை போர்த்துவிட்டுத் தன் இஷ்ட நாயகனைப் பார்க்க நழுவி விடுவாள். சிலர், பராக்காரர்களுக்கும் தோழிகளுக்கும் ஏராளமான லஞ்சம் கொடுத்துத் தன் அந்தப்புரத்துக்கு மகாராஜா வரும் சமயத்தைத் தெரிந்துகொண்டு அதற்கேற்பத் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வார்கள்.

மகாராஜா எத்தனையோ சமயங்களில் ராணிகளின் கள்ளக் காதலர்களை இரகசியமாகத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளியிருக்கிறார்.

அந்த மரணச் சடங்கில் மகாராஜாவும் வெகு அக்கறையாகப் போய்க் கலந்துகொள்வார். வருத்தப்படுவார். குற்றவாளியைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதாக உறுதி கூறுவார்.

அழகு எங்கேயிருந்தாலும் மகாராஜா ஆகர்ஷிக்கப்படுவார். ஆதலால் அரண்மனையைக் கூட்டிப் பெருக்கும் தாதிகளைக்கூட மிகவும் அழகிகளாகவே திவான் நியமிப்பார்.

அந்தப் பணிப் பெண்கள் மகாராஜாவின் கவனத்தைக் கவர மிகவும் கவர்ச்சியாகவே உடை அணிந்து வருவார்கள்.

ஒரு தடவை ஒரு ராணியிடம் மகாராஜா ஏதோ விஷயமாகக் கோபித்துக்கொண்டு அவளது அந்தப்புரத்துக்கு வராமலேயே இருந்தார்.

ராணி விரகம் தாளாதவளாகக் கடைசியில் பணிப்பெண்போல வேஷம் தரித்து மகாராஜாவுக்கு விசிறி போடுபவளாகப் பணியாற்றத் தொடங்கினாள்.

அவள் தனது ராணிகளில் ஒருத்திதான் என்பதை அறியாமல் மகாராஜா அவளிடம் மனத்தைப் பறிகொடுத்தார். அவளுக்கு அன்பளிப்புகள் நிறையச் செய்தார்.

அவளிடம் சமயம் நேரும்போதெல்லாம் உறவு கொண்டார்.

அந்த ராணி கர்ப்பமுற்றாள். மகாராஜா கேள்விப்பட்டதும் அவளைச் சிறையிலடைக்க உத்தரவிட்டார்.

ராணி அவர் அளித்த அன்பளிப்புகளை அவரிடம் காட்டி, பணிப்பெண்ணாக அவரது மனத்தைக் கவர்ந்தது ராணியாகிய தான்தான் என்று நிரூபித்த பிறகு மகாராஜா தண்டனையை ரத்து செய்தார்.

★★

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓர் அழகியை மகாராஜா தெரியாத்தனமாகத் திருமணம் செய்து கொண்டுவிட்டார்.

அவள் ஒண்ணா நம்பர் அழுமூஞ்சி ராணி. தன் அறையை விட்டு வெளியில் எங்கும் வரமாட்டாள். எப்போது பார்த்தாலும் அழுதுகொண்டே இருப்பாள். "நான் ஃபிரான்ஸுக்குப் போகவேண்டும்." என்று சொல்லி அழுவாள். 'நீங்களும் அங்கேயே வந்துவிடுங்கள்' என்பாள்.

மாகாராஜாவுக்கு இங்கே ஆயிரம் அழகிகள் இருக்க இந்த ஒற்றை அழகிக்காக ஃபிரான்ஸ் செல்ல இஷ்டமில்லை. அவளை ஃபிரான்ஸுக்கே அனுப்பிவிட்டார்.

பிற்காலத்தில் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து, அதுதான் மகாராஜாவின் சொத்துக்கு வாரிசு என்று வழக்குத் தொடர்ந்தாள்.

ஆனால் போதிய சாட்சிகள் இல்லாததால் அவளால் வெற்றிபெற முடியவில்லை.

பெரும்பாலான வெளிநாட்டுப் பெண்களை மகாராஜா வெறும் ஆசை நாயகிகளாகத்தான் வைத்திருந்தார்.

வாரிசு, கீரிசு என்று பிற்காலத்தில் யாரும் வழக்குப்போட முடியாதபடி சட்டரீதியாக ஜாக்கிரதையாகவே இருந்தார்.

(முற்றும்)

படிப்பகம்

கோகிலா என்ன செய்து விட்டாள்?

ஜெயகாந்தன்

14

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.

மு.க.சுருக்கம்

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கும் இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பின்னர் தற்செயலாக கடைத்தெருவில் சந்திக்கின்றனர். மறுபடி வீட்டுக்கு வருகிறாள் கோகிலா.

இனி

அவள் கொண்டு வந்து வைத்த காப்பியை அருந்தியபின் அவன் நாளையப் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் 'பாக்' பண்ண ஆரம்பித்தான்.

வெகு நாட்களாய்த் திறக்கப்படாமல் இருந்த அவனது குடும்பச் சொத்தான அந்தப் பழைய காலத்து முரட்டு மர பீரோவை அவன் திறந்த போது, அதனுள்ளிருந்த பல சாமான்கள் அவளைச் சேர்ந்ததா அல்லது தன்னைச் சேர்ந்ததா என்று வகை பிரிக்க முடியாமல் அவன் குழம்பினான். 'அந்த பீரோவின் கீழ்த்தட்டு நிறைய பழந்துணிகளால் சுற்றப்பட்டு வைத்திருக்கும் கொலு பெர்ம்மைகளை யாரிடம் கொண்டு போய்க் கொடுப்பது; ஒரு நூற்றாண்டுக்கு முன் வாங்கிய பொம்மைகள் முதல் இந்தப் பத்து வருஷ காலமாய்த் தனது பங்குக்குக் கோகிலாவும் வாங்கி சேர்த்து வைத்திருக்கும் பொம்மைகள் ஈறாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் மக்களின் கலாசார சம்பத்தே அதில் இருக்கிறது. இதற்குத் தான் எப்படிப் பாத்தியதைக் கொண்டாடுவது?'

அவனும் அவளும் திருமணம் செய்து கொண்டு இந்த வீட்டில் குடித்தனம் செய்ய முடிவு கட்டியவுடன் அவன் தனது பிறந்த ஊராகிய பாலக்காட்டை அடுத்த ஏதோ ஒரு கிராமத்துக்குச் சென்று அவனது பிதுரார்ஜித சம்பத்துக்களான இவற்றுக்காகத் தாயாதிகளிடம் உரிமைப் போரிட்டு வாங்கி வந்தான். 'அப்போது அந்த அதிசயப் பொருள்களையெல்லாம் பார்த்துக் கோகிலா எப்படிப் பரவசமடைந்தாள்! தன்னைப் பொறுத்தவரை அந்தரங்கமான தாம்பத்திய நெருக்கதில் அவள் எவ்வளவு முரண்பாடு மிகுந்தவளாக இருந்த போதிலும் ஒரு குடும்பத்தின் தலைவிக்குரிய சகல இலக்கணங்களுக்கும் சிறப்பாகப் பொருந்தியிருந்தாளே... இவற்றையெல்லாம் உரிமையின் பேரில் நான் எனதாக்கிக் கொண்டாலும் அவளைப் போல் பாதுகாத்து வைத்திருக்க என்னால் முடியுமா? அந்த நடுத் தட்டில் அவர்களது திருமணப் பரிசாக நண்பர்கள் தந்த பரிசுப் பொருள்கள் இருவருக்கும் பொதுவாக இருக்கின்றனவே.'

திறந்து கிடந்த பீரோவின் கதவைக் கூட மூடாமல் அனந்தராமன் கோகிலாவைத் தேடிப் பின் கட்டுக்கு நடந்தான். அவள் டைனிங் ஹாலில் டேபிள் அருகே அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவன் திடீரென்று அங்கே பிரவேசித்ததும் புத்தகத்துக்கு மேலே அவள் விழி உயர்த்திப் பார்த்தாள்.

“கொஞ்சம் எழுந்து வா!” என்று வாசற்படியைக் கூடத் தாண்டாமல் சொல்லிவிட்டு அவன் திரும்பி நடந்தான். அவள் அவனைத் தொடர்ந்து அந்த அறைக்குள் நுழைந்த போது திறந்து கிடந்த பீரோவிலிருந்த பொருள்களைப் பார்த்ததும் அவற்றின் மகிமையை உணர்ந்து எப்போதும் போலவே இப்போதும் பரவசமடைந்தாள்.

அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமலேயே அவளிடம் சொன்னான்:

“இந்தப் பீரோவை என்ன செய்வதென்றுதான் எனக்குத் தெரியவில்லை. இதற்கு விலை கிடையாது. இதை விற்கவும் கூடாது. வேறு வழி இல்லாவிட்டால் வீட்டுக்கார அம்மாளிடமே இதை விட்டு விட்டுப் போகலாம். ஆனால் இதன் உள்ளே இருக்கும் சாமான்களில் நீ சேகரித்தவையும் கலந்துள்ளன. அதனால் விரும்பினால் இது எல்லாத்தையுமோ அல்லது உன்னுடையது, உனக்குத் தேவையானது என்று நீ நினைக்கிற சாமான்களை மட்டுமோ நீ எடுத்துக் கொள்ளலாம்!” என்று அவன் சொல்லும்போதுதான் இது ஒரு பிரச்சனையே என்று அவளுக்கும் புரிந்தது.

அந்த அறையில் வேறு பெரிய சாமான்கள் ஏதுமில்லை. இரண்டு நாட்களாக அவன் வெறுந்தரையில் ஹோல்டாலைப் பிரித்துத்தான் படுத்துக் கொள்கிறான். டைனிங் ஹாலில் இருக்கும் மேஜை நாற்காலிகள் முன்ஹாலில் உள்ள ஸோபா செட் முதலியவற்றை அந்த ஏலக்கம்பெனிக்காரர் வந்து நாளைக்கு எடுத்துக் கொண்டு போவார். ஆனால் இந்த அலமாரியை?- ஆம். இவன் சொன்னது போல இதற்கு விலையும் இல்லை, இதை விற்கவும் கூடாது என்று அவளும் உணர்ந்தாள். 'ஆனால் இவர் மேலும் இன்னொரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறாரே, 'உன்னுடையது; உனக்கு வேண்டுவது' என்றெல்லாம்... எதற்குச் சொல்ல வேண்டும்?...'

“என்னுடையது, எனக்கு வேண்டுவது என்று இங்கு எதுவுமில்லை” என்று திடீரெனப் படபடப்போடு அவளும் ஆங்கிலத்தில் சொன்னாள்.

அனந்தராமன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

“நான் எவ்விதமான உள் நோக்கமும் இல்லாமல் நமது பிரிவுக்காக நாம் இருவருமே கொஞ்சங்கூட வருத்தப்படவில்லை என்ற நம்பிக்கையோடு உன்னிடம் ஒரு யோசனை கேட்கிறேன் என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். நீ எதற்கு இவ்வளவு பதட்டப்படுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை” என்று ஆத்திரமுற்றிருக்கும் அவளைப் பார்த்துப் பரிதாபப்பட்டுக் கூறினான்.

“எதுவுமே வேண்டாம் என்று உதறி விட்டுப் போனவளை இழுத்துக்கொண்டு வந்து 'இது வேண்டுமா அது வேண்டுமா' என்றால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது” என்று தன்னுள் முனகிக் கொண்ட போதிலும் தான் அவனிடம் அப்படி நடந்து கொண்டு விட்டதற்காக வருந்தித் தலை குனிந்து நின்றாள் கோகிலா.

அவன் அவளிடம் மேலும் சொன்னான்:

“நான் உன்னிடமோ நீ என்னிடமோ ஆத்திரப்படவோ ஆறுதல் கொள்ளவோ உள்ள உரிமைகளை இழந்து விட்டோம் என்பதை இன்னுமா நீ புரிந்து கொள்ளவில்லை?”

அவன் மேலும் அது பற்றிப் பேச வேண்டாம் என்று தடுப்பதைப் போல் அவள் தலைநிமிர்ந்து அவனைப் பார்த்துச் சொன்னாள்: “ஐ யாம் ஸாரி.”

“இட் இஸ் ஆல்ரைட்” என்று அந்தச் சூழ்நிலையின் முறுக்கேறிய கனத்தைக் குறைத்து சகஜ பாவத்துடன் அவன் சொன்னான்: “குறைந்தபட்சம் நாம் நல்ல நண்பர்களாகவாவது இருப்போம். இந்த இரண்டு மூன்று நாட்களாக நீ எனக்கு மிகவும் உதவி இருக்கிறாய். இந்த உதவியை நாம் நிரந்தரமாகப் பிரிந்துவிட்ட பிறகும்கூட நான் மிகுந்த நன்றியோடு நினைவில் வைத்துக் கொண்டிருப்பேன். 'நான் மதிப்பு வாய்ந்த பொருள்களாகக் கருதி நேசிக்கும் இவற்றை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போவது ஏதோ சிறப்பான காரியம் என்றெண்ணினேன்- அது உனக்கு இவ்வளவு எரிச்சலூட்டும் என்று எனக்குத் தெரியாது- சரி, நீ போகலாம்” என்று இந்த விவகாரத்துக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்து விட்டு அவன் தன் காரியங்களில் முனைந்தான்.

அவள் அங்கிருந்து நகர முடியாமல் அவனையே பார்த்தவாறு நின்றிருந்தாள். இந்தப் பத்து வருஷ தாம்பத்ய வாழ்க்கையில் தான் ஒரு தவறு செய்துவிட்டதாக இப்போதுதான் அவள் முதன் முறையாக உணர்ந்தாள். அந்தத் தவறை எவ்வளவு நாசூக்காக எவ்வளவு நாகரிகமாக அதை நானே உணரும் அளவுக்கு அவர் எடுத்துக்காட்டிவிட்டார்' என்று அவனை அவள் தன்னுள் வியந்தாள். அதைத் தொடர்ந்து, 'இந்தப் பத்து வருஷகாலத்தில் இவர் இவ்விதம் எடுத்துக் காட்டி இருந்தால் தான் எவ்வளவு தவறுகளை இவ்வாறு உணர நேர்ந்திருக்கும்' என்று எண்ணிப் பயந்தாள். ஒரு முறையாவது அவனது தவறுகளைத் தான் இவ்வாறு பெருந்தன்மையாக எடுத்துக் கூறியதில்லையே என்று வருந்தினாள். இந்த நிமிஷத்திற்கு முன்னால் வரை இந்தத் தாம்பத்திய முறிவுக்கு அவன் மட்டுமே காரணம் என்று எண்ணி இருந்த தனது தீர்மானமே ஓர் அநீதியோ என்று குழம்பினாள்...

அந்தப் பீரோவின் மேலேயிருந்து ஒரு பெரிய புத்தகக்கட்டை அவன் ஸ்டூலின் மேல் ஏறி நின்று இறக்கிக் கொண்டிருக்கையில் அவள் அவனருகே சென்று அவனை அண்ணார்ந்து பார்த்துக்கேட்டாள்: “மே ஐ ஹெல்ப் யூ?”

“ப்ளீஸ்” என்று அவள் உதவிக்கு வந்ததைச் சிலாகிக்கும் புன்னகையுடன் சற்று அவன் குனிந்தபோது அவன் கையிலிருந்த புத்தக அடுக்கு தபதபவெனக் கீழே சரிந்தது. சரிந்து நாலு வருஷத்துப் புழுதி கிளம்பியது.

கீழே விழுந்த புத்தகங்களை எடுத்துத் தூசு தட்டி அவற்றை ஒழுங்குற அடுக்கி வைத்தபோது அவற்றின் நடுவே அந்தப் போட்டோ ஆல்பம் கிடைத்தது. அதை அவள் எடுத்து ஒருபுறம் தனியே வைத்தாள்.

(கோகிலா.... தொடரும்)

அரங்கம் அந்தரங்கம்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

22

கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—

விஜயா வேதாசலத்தின் வருகைக்கு ரகசியம் ஏதும் கிடையாது.

குமாரசாமியும் லலிதாவும் ஒடிப்போன போது பல லட்சம் ரூபாய்களோடு போனார்கள் என்பதை அவள் அறிவாள்.

காரணம் நாராயணசாமி வீட்டில் ராஜசேகரனோடும் அவள் தொடர்பு வைத்திருந்தாள்.

ஆகவே அவர்கள் பெங்களூருக்குப் போனதிலிருந்து அவள் நோட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்களோடு தானும் போய்ச் சேர்ந்து கொண்டால் நகைகளோடும், பணத்தோடும் திரும்பி வரலாம் என்று எண்ணியிருந்தாள்.

குமாரசாமி தன் அண்ணி கற்பகத்தோடு டெலிஃபோனில் பேசியபோது தான் கல்கத்தாவுக்குப் போவதாகச் சொல்லியிருந்தான் அல்லவா? அதைக் கற்பகத்திடம் விசாரித்தறிந்த விஜயா வேதாசலம் கல்கத்தாவுக்குப் புறப்பட்டு வந்துவிட்டாள்.

எங்கே தங்கி இருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்து வந்துவிட்டாள்.

குமாரசாமியோ, லலிதாவோ அவளைக் கண்டு அதிர்ச்சி அடையவில்லை. அவர்கள் முழுக்க நனைந்து விட்டவர்கள்; இனி முக்காடு எதற்கு?

“வாருங்கள் !” என்று பணிவாகவே அழைத்தான் குமாரசாமி.

“ரொம்ப சந்தோஷம் உங்களை இப்படிப் பார்ப்பதற்கு!” என்றாள் விஜயா வேதாசலம்.

“நாங்கள் புறப்பட்டுக் கொண்டே இருக்கிறோம்” என்றான் குமாரசாமி.

“எங்கே?” என்று கேட்டாள் அவள்.

“காரிலேயே பம்பாய்க்குப் போகிறோம்!” என்றாள் லலிதா.

“ஏன். நாளைக்குப் போகலாமே. நானும் வருகிறேன்!” என்றாள் அவள்.

குமாரசாமிக்கு தர்மசங்கடமாகப் போய் விட்டது.

விஜயா வேதாசலம் என்ன சாதாரணப் பட்டவளா! பிரம்மாவையே கொஞ்ச நேரம் சிருஷ்டியை நிறுத்தி வைக்கச் சொல்லி வெற்றி பெற்று விடுவாளே!

“நீங்கள் இன்னும் தட்சணேசுவரத்துக்குப் போயிருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அது அவசியம் பார்க்க வேண்டிய ஸ்தலம். இன்று மாலை அங்கே போய்விட்டு, நாளைக் காலை பம்பாய்க்குப் புறப்படுவோம்” என்றாள் விஜயா.

அவள் தங்களோடு ஒத்துழைக்கிறாள் என்ற வகையில் திருப்தியுற்ற லலிதா 'சரி' என்று சம்மதித்து விட்டாள்.

விஜயா வேதாசலத்தின் முன்னிலையிலேயே தாங்கள் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்பது குமாரசாமிக்குத் தெரியும்; அவனும் சம்மதித்துவிட்டான்.

பகவான் ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் போற்றி வணங்கிய அந்தப் புனித ஸ்தலத்தில், அவர்கள் காலடிகளும் பட்டன.

கோவிலுக்கு வருகிறவர்கள்தான் ஒருவரை ஒருவர் இனம் கண்டு கொள்ள முடியாதே தவிர, கோவிலில் அமர்ந்திருக்கும் பகவான் கண்டு கொள்வார் அல்லவா!

பாவிகள் உடைக்கின்ற தேய்காய்க்கும், புனிதவான்கள் உடைக்கின்ற தேய்காய்க்கும் அவருக்கு வித்தியாசம் தெரியாதா?

அதே நேரத்தில் எல்லோரிடத்திலும் கருணை காட்டும் ஈசுவரன், அவர்களிடத்திலும் கருணை காட்டினார்.

அன்று இரவு விஜயா வேதாசலத்துக்கு ஒரு தனி அறை எடுத்துக் கொடுத்தான் குமாரசாமி.

அவளுக்கு லேசான குடிப்பழக்கம் உண்டு. அது இருந்தால்தானே சில காரியங்களைத் துணிந்து செய்ய முடியும்?

அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

அப்படியே 'பால்ரூம்'க்குள் நுழைந்தாள். அவளும் கொஞ்சநேரம் பல ஆடவர்களைக் கட்டிப் பிடித்து விளையாடினாள். வழக்கம்போல இரவு ஒரு மணிக்கு அறையில் வந்து தூங்க ஆரம்பித்தாள்.

அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் அவர்கள் மூவரும் பம்பாய்க்குப் புறப்பட்டார்கள்.

முன் சீட்டில் அமர்ந்து கொண்டாள் விஜயா.

காதலர்கள் பின்னால் அமர்ந்து கொண்டார்கள்.

பம்பாய் நகரத்தைப் பற்றி அவள் பேசிக் கொண்டே வந்தாள்.

தன்னுடைய டம்பப் பையைத் திறந்து பம்பாய் நண்பர்களின் விலாசத்தையெல்லாம் பார்த்தாள்.

பம்பாயில் ஒரு கோடீஸ்வரர், பெரிய ஜவுளி ஆலை அதிபர். பெயர் மதன்லால்.

அவருக்கும் அளவு கடந்த பெண் மயக்கம் உண்டு.

அவருக்குத் தமிழ்நாட்டில் இருந்தும், கேரளாவில் இருந்தும் பெண்களை அனுப்பி வைப்பது விஜயாவின் வழக்கம்.

விருந்தினர்கள் தங்குவதற்காக ஒரு ஒன்பது மாடிக் கட்டடத்தில் ஒரு முழு மாடியையே அவர் வாங்கியிருந்தார்.

“அங்கே போய்த் தங்கினால் எல்லா வசதிகளும் உண்டு” என்றாள் விஜயா வேதாசலம்.

வழியில் பல இடங்களில் நிறுத்திய பிற்பாடு மறநாள் இரவு ஏழு மணிக்கு பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள் மூவரும்.

முதலில் மதன்லாலைக்கூட விஜயா வேதாசலம் பார்க்கவில்லை. நேரே விருந்தினர் விடுதிக்கே காரை விடச்சொன்னாள். போய் இறங்கியதும் மதன்லாலுக்கு டெலிஃபோன் செய்தாள். உடனே குமாரசாமியிடம் டெலிஃபோனைக் கொடுத்துப் பேசச் சொன்னாள்.

“ஹலோ! பிரதர்! உங்கள் பிரதர் நாராயணசாமி நமக்கு மிகவும் வேண்டியவர். நீங்கள் அங்கேயே தங்கலாம். சமையல்காரனும் இருக்கிறான். என்ன வேண்டுமோ சொல்லுங்கள்!” என்றார் மதன்லால், ஆங்கிலத்தில்.

பிறகு மீண்டும் விஜயா வேதாசலம் பேசினாள். அப்போதும் அவள் இந்தியிலேயே பேசினாள்.

டெலிஃபோனை வைத்துவிட்டு குமாரசாமியிடம், “இன்றிரவு கீ சேஞ்சுக்குப் போகலாமா? மதன்லால் கூப்பிடுகிறார்!” என்றாள்.

“'கீ சேஞ்ச்' என்றால் என்ன?” என்று கேட்டான் குமாரசாமி.

(அந்தரங்கம் வரும்)

படிப்பகம்

கண்ணி!

ஜெ. சூரியன்

கடல் நுரைத்து புரண்ட மடிப்புக்களை அடுக்கடுக்காக புரட்டிவந்து எட்டும்வரை மேட்டுப்பரப்பில் விரித்து நனைத்துவிட்டு மீளவும் தன்னிருப்பிடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தது. நனைந்த மணல் பரப்பில் கால்களைப் பதிய வைத்திருப்பது அந்த எரிக்கும் மாலை நேரத்து வெயிலின் சூட்டுக்கு இதமாக இருந்தது அவர்களுக்கு!

ஆங்காங்கே சில ஜோடிகள் தணிக்கை செய்யப்பட வேண்டிய காட்சிகளை அரங்கேற்றிக் கொண்டிருந்தனர். சுண்டல் விற்பவன் ஆவி பறக்கும் கடலையுடன் கடந்து போனான்.

ஆளுக்கொரு பொட்டலமாக நான்கு பொட்டலங்கள் வாங்கிக் கொண்டவர்கள் சுவாரசியமாகப் பேசியவண்ணம் சுண்டலை சுவைத்தனர்.

திடீரென்று "ஸ்..ஆ...!" என்றொலி கிளம்பியது, "என்னடா, என்ன... மிளகாயைக் கடிச்சுட்டியா?" என கேலியாகக் கேட்டனர் வினித்திடம். பதில் பேசாத வினித்தின் பார்வை வேறு திசையிலோடி ஊஞ்சலாடுவதைக் கவனித்ததும், அவர்களது உற்சாகம் கடலலையாகப் புரண்டது. காரணம் இரண்டு அழகான பெண்கள் அவர்களிருந்த பக்கமாக நடந்துவந்து கொண்டிருந்தனர்.

காற்றில் பறக்கும் முடிக்கற்றைகளை தம் அழகிய நீண்ட விரல்களால் அடிக்கடி இலாவகமாக ஒதுக்கிவிட்டவண்ணம், ஈரலிப்பிலிறுகிக் கிடந்த கரையோடு செருப்பு புதைந்துவிடாமல் ஒயிலாக நடந்துவரும் காட்சி 'ஸ்லோமோஷனில்' சினிமா கதாநாயகி வருவது போல அத்தனை கவர்ச்சியாக இருந்தது. அதைப்பார்த்துத்தான் வினித் தன் நிலை மறந்தானென்பது புரிந்தது.

வினித் இலேசில் பெண்களின் வலையில் சிக்கமாட்டான். நல்ல பர்ஸனாலிட்டி. சிவந்த நிறம். உயர்ந்த, திடமான உடல்வாகு, கவர்ச்சியான விழிகள், பார்த்தவர்கள் மீளவொரு தடவை, திரும்பிப் பார்ப்பதில் தன் தோற்றத்திலவனுக்கு அலாதியான நம்பிக்கையுண்டு.

அதைவைத்து, எத்தனையோ பெண்களை அழவைத்திருக்கிறான். தனது நண்பர்களுக்கு விரும்பிய பெண்களை ஜோடி சேர்த்திருக்கிறான். அதேநேரம் பலவீனப்பட்ட ஒரு சிலரைப் பயித்தியமாகவும் அடித்திருக்கிறான். அவன் அரட்டையில் பொழுது போவதே தெரியாது.

இருந்தவர்களில் சற்று விதண்டாவாதமாக பேசும் சுபாஷ் சொன்னான்: "டேய், வினித் அந்தப் பச்சைச் சுடிதாரை கொஞ்சம் மடக்கிக்காட்ட முடியுமா"ன்னு, அவனுக்கு எப்பவாவது வினித்தை மாட்டி வைத்துப் பார்க்க ஆசை.

சுபாஷின் கேள்வி வினித்தின் ரோஷத்தைக் கிளப்பியது. பத்துப் பெற்றவளுக்கு ஒரு பிள்ளை பெற்றவள் பாவனை காட்டுவது போலிருந்தது. "இப்ப பார் என்ன நடக்கிறதென்று" என்றவன் நெற்றியில் புரண்ட முடிக்கற்றைகளைக் கோதி தலையை வெட்டி நிமிர்த்தியபோது, சுடிதாரின் நுனிமோதி விலகியது.

"ஹலோ, எக்ஸ்கியூஸ் மீ!"

மென்மையாக கூறினான். ஒரு கணத்தாமதம் நடையில். நின்றவர்கள் கிட்டத்தில் இன்னும் அழகாகத் தெரிந்தார்கள். 'என்ன?' என்று பார்வைகள் வினாவின. குறிப்பாக பச்சை சுடிதாரை பார்த்து சொன்னான் வினித். "உங்களை உங்களை எங்கோ பார்த்த மாதிரியிருக்கே."

"ஓ! பார்த்திருக்கேன் பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலென்று!" பட்டென்று கூறியவள் தன் சிநேகிதியுடன் கலகலத்து சிரித்த வண்ணம் நகர்ந்தாள். சிரிப்பில் கேலி வழிந்தது. நண்பர்களிடையேயும் அந்தச் சிரிப்பு இழைந்தது. யானைக்கும் அடி சறுக்கும். வினித்துக்கு இது முதல் தோல்வி. அதை சமாளிக்க முடியாமல் நெளிந்தபோது கூட்டத்திலிருந்த நண்பன் ஜெகன் எழுந்து வேகமாக அருகிலிருந்த தண்டவாளத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

"ஏதடா வினித் அவமானப்பட்டதுக்கு இவன் தற்கொலை பண்ணப் போகிறானா?" குழம்பிய நண்பர்கள் பின்னால் விரைந்தனர்.

அங்கே ஜெகன் நாலைந்து பெண்கள் மத்தியில் பேந்தப், பேந்த விழித்துக்கொண்டு நின்றான். ஒன்றும் புரியாதவர்களாக அவர்கள் திகைத்து நின்றபோது ஒருத்தி சொன்னாள்: "நாம தண்டவாளத்திலை நடக்கிறபோது கைகளை விரித்து தடுமாற்றத்துக்கேற்ப பலன்ஸ் பண்ணினா இவர் ஓடிவர்றார் என்னைக் கூப்பிட்டீங்களான்னு?" அவர்களிடையே பலத்த சிரிப்பொலி கைதட்டலுடன் சுழன்றடங்கியது.

"மன்மதனென்கிற நினைப்பு இவர்களுக்கெல்லாம். பெண்கள் வெளியே வருவது ஆண்களைப்பார்க்கிறதுக்குத்தான்னு சும்மா அலைகிறார்கள்." என்றாள் இன்னொருத்தி.

"ஐயோ பாவங்களடி. அப்பிடியெதுவுமில்லை. இவர்களோட கொஞ்சம் முன்னாடி பேசினோம். அங்கொடையிலை இருந்ததாக ஒப்புக் கொண்டார்க"ளென்றாள். அங்கே வந்து சேர்ந்த பச்சை சுடிதார்காரி.

அவர்களிருவருக்கும் எதுவும் பேச நாவரவில்லை. இது நாள்வரை இல்லாத தடுமாற்றம் வார்த்தைகளைத் தேடவ்வைக்க, சிரிப்பொலி தேய்ந்து கொண்டிருந்தது. தூரப்போய்க் கொண்டிருந்த தண்டவாளத்து கிளிகள் கூட்டம்.

"இன்றைக்கு எவர் முகத்திலை முழிச்சோமோ நேரமே போதலை!" என்றவர்கள் முடியைப் பிய்த்துக்கொண்டனர். நின்றால் நிஜப் பயித்தியமாகி விடுவோமென எண்ணியவர்களாக திரும்பி நடந்தனர்.

அந்த மௌனத்தை கலைத்தது எப்போதும் கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளும் ரகுவின் பேச்சு. "எல்லாக் கிளிகளும் கண்ணியிலை சிக்குமென்று கணக்குப்போடக்கூடாது என்பதை நாம நல்லா நினைவில் வைச்சிருக்கணும்!"

அதை ஆமோதிப்பது போல மௌனமாகவே நடந்துகொண்டிருந்தனர், நண்பர்களெல்லோரும் கடலோரமாக. திரும்பத் திரும்ப வந்து மோதிப்போன அலைகளில் காலடித்தடங்களெல்லாம் அழிந்து புத்தம்புதுத் தரையாக இறுகிக்கிடந்த மணற்பரப்பில் அவர்களது தடம் புதிதாக பதிந்து கொண்டிருந்தது. அவர்களது அப்போதைய சிந்தனை மயான வைராக்கியம், பிரசவ வைராக்கியம் வரிசையில் கடலோர வைராக்கியமாகி கரைந்தும் போகலாம். வைராக்கியம் மட்டும் நிலைத்தும் நிற்கலாம். அது அவர்களைப் பொறுத்தது. உணர்த்துவபோல அலைகள் மோதியடங்கிக் கொண்டிருந்தன-தம் பாட்டுக்கு. ○

காலை உதயப் பொழுதிலே மட்டக்களப்பு நாடுநகரமெங்கும் கதிர்காமம் போகிற சாமிகள் கூட்டம் புறப்பட்டு, தெண்டலுக்கு வீடுவீடாய்ச் செல்லும் வழக்கம் இந்த யுத்த காலத்திலும் குறைந்த பாடாயில்லை. வீடிழந்து நாடிழந்து எத்தனையோ உயிரிழந்து, உடுக்க உடையும் உண்ண உணவும் இன்றி அகதிகளாக அலைமோதும் கூட்டங்கள் கருணையுடையோனிரக் கண்ணீர் வடிக்கச் செய்யுங் காலத்தில்...?

அரோஹரா!

பன்குடாவெளி-மூர்த்தி

"அரோஹரா! அரோஹரா! கதிராம சாமிக்கு அரோஹரா! கந்தசாமிக்கு அரோஹரா! அந்த முருகனுக்கு அரோஹரா! அரோஹரா!" என்று பலரது வாயும் அலறிக்கொள்ள வீடு வீடாய்வரும் குடும்பமான கூட்டங்களும் பக்தியைப் பகட்டாய்க் காட்டுவன. இதே பக்தி வழிபாட்டைக் காட்டி ஆண்டுக்காண்டு பணஞ் சேகரிக்கும் கூட்டத்தாருள்ளே மன்னம்பிட்டியிலிருந்தும் ஓர் அனாதைச் சிறுவனும் ஒரு சிறுமியும் தாய் தந்தையரைப் பறிகொடுத்தவர்களும் சேர்ந்து கொண்டனர்.

மட்டக்களப்பு அமிர்தகழி கோவிலுக்கு வந்தபோது இரக்கங்கொண்ட ஒரு பெரியவர் விசாரித்து, அவர்களைத் தன்னுடைய பொறுப்பிலே விட்டுச் செல்லுமாறு விநயமாக வேண்டினார். ஆனால் வந்த கூட்டத்தினர் அவர்களைக் காட்டிக் காட்டிப் பணம் சேகரிக்கும் எண்ணம் கொண்டதால் கூட்டத்தால் விலகவிடவில்லை. மன்னம்பிட்டியில் மூன்று இனத்து மக்களும் வாழ்ந்து கொண்டிருந்ததால் பல மொழிகளையும் பேசிப்பயிற்சியுற்றிருந்தனர். இந்தச் சிறுவன் சிறுமியர்க்குச் சிங்கள மொழி நன்றாகப் பேச்சில் இடம் பிடிக்கும்.

சிங்கள மொழி பேச்சறிவினாலே இடைமிடையே ஏற்படும் ஆமி போன்றோர் தொல்லையால் தப்பிக்கொண்டு காசு பணம் சேகரித்துக் கொண்டும் யாத்திரை போய்க்கொண்டிருந்தனர். இதனைவிடச் சாந்தி சமாதானம் வேண்டிய கூட்டமும் உழைப்புக்காகச் சேர்ந்து கொண்டது. கதிர்காமப் பெயராலே எதிர்காலம் நாடு நலம்பெறுமா? ○

புதுமுகம்

கல்குடா
க. பரமானந்தராஜா

பத்தாவது தடவையாக அந்தக் கடிதத்தை படித்து முடித்திருந்தான். 'ம்...யாராக இருக்கும்?' இந்தக் கேள்வியைக் கேட்டுக் கேட்டு மனதும் சலித்துவிட்டது. 'ச்சீ... இதை எழுதியவள் தன்னுடைய முகவரியை எழுதியிருந்தால்....'

மீண்டும் கடிதத்தை எடுத்தான். அந்த முத்து முத்தான எழுத்து... முத்துக்கள் சேர்ந்த மாலை போல் வரிசையாக எவ்வளவு அழகு. அதில் உள்ள வரிகள் கூட எவ்வளவு நளினம்.

பிரியமானவரே!

வெற்றுக் குளமாய் இருந்த என் மனதில் கல்லெறிந்து குழப்பிய என் இனியவரே. தங்களின் அன்பை... இதயத்தில் ஓர் இடத்தை யாசிக்கிறேன். கிடைக்குமா?

அறிமுகமில்லாத புதுமுகம்.

கடிதத்தைப் பார்க்க பார்க்க ஆகாஷின் மனமும் குழம்பிப்போனது. நிச்சயம் இது ஒரு பெண்தான். கடிதத்தை பிரிக்கும்போது முகத்தில் அடிக்கும் அந்த இனிய ரோஜா வாசனை, அவளை நேரில் பார்க்க வேண்டும் என்னும் ஆவலைத் தூண்டிக் கொண்டிருந்தது. எப்படி? எப்படி சந்திப்பது...யாரென்று கேட்பது...?

'கடிதம் தானே' என்று தூக்கி எறியவும் மனம் மறுத்தது. முகம் காணாத அவள் மீது கற்பனையோடே காதல் வளர்த்தான் ஆகாஷ். எந்த அழகிய பெண்ணைக் கண்டாலும் 'இவளாக இருக்குமோ?' என்று சிந்திப்பதே நாளாந்த வேலையாகிப் போனது. அவனது நண்பர்கள் கேலி செய்தும் அவனால் அந்த மடலுக்குரியவளை பார்க்க வேண்டும் என்னும் ஆவலை கட்டுப்படுத்த முடியவில்லை.

"உண்மையிலேயே அவ யாரோ எனக்கு தெரியாது மச்சான்... ஆனா... நிச்சயம் என்னை விரும்புற ஒரு பெண்தான். நான் அவளைப் பார்க்க வேணும்..." ஆகாஷ் இந்த விடயத்தில் உறுதியாக இருந்தான்.

அன்று புதன்கிழமை. அலுவலக வேலையில் மூழ்கியிருந்தவன் தொலைபேசி செல்லமாய் சிணுங்கியதும் மெதுவாய் அள்ளி காதுக்கு கொடுத்தான்...

"ஹலோ...!" அவனது குரல் ஒலித்ததும் திடீர் மௌனம்.

"ஹலோ நான் ராம்நாத் எக்ஸ்போர்ட் கம்பெனி மனேஜிங் டிரக்டர் பேசுறன்...!" சற்று நேர அமைதிக்குப் பின் சங்கீதமாய் ஒரு குரல் ஒலித்தது.

"ஆகாஷ் இருக்காரா... அவரோட பேசணும்..."

"ஆகாஷ்தான் பேசுறன்.. யார் நீங்க...?"

"நா...நான் உங்கள விரும்புற புது முகம்..!" லைன் கட்டாகியது. ஆகாஷ் தவியாய் தவித்தான்.

'ஓ...என் இனியவளே... நானும் உன்னை விரும்புகிறேனே. என் மனதை உன்னிடம் எப்படிச் சொல்லுவது.. என் முன்னே வர மாட்டாயா...? நான்தான் உன் புதுமுகம் என்று அடையாளம் காட்ட மாட்டாயா...? என் இதயத்தை இப்படிக் கசக்கிப் பிழிகிறாயே பெண்ணே... நீ எங்கிருக்கிறாய்..? உன்னை எப்படிச் சந்திப்பது...!' குழம்பிப் போனேன்.

'ஓ.. குரல் கூட எவ்வளவு இனிமை. என் கற்பனைத் தேவதையே ஓடிவந்து உன் முகம் காட்ட மாட்டாயா..?'

அதன்பின் எந்தவித தொடர்புகளும் கிடைக்கவில்லை. ஆகாஷ் கவலையுடன் காலத்தைக் கடத்தினான். சாப்பிடப் பிடிக்கவில்லை. கண்ணை மூடித் தூங்க முடியவில்லை. எந்த நேரமும் அவளது குரல் ஒலித்துக்கொண்டே இருப்பதுபோல் ஒரு பிரமை.

அன்று அவன் தாய் ஆகாஷை அழைத்தாள். "தம்பி. ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்..?" கவலையுடன் கேட்ட தாயிடம், "இ...இல்ல ஒன்றுமில்லையம்மா... லேசா தலைவலி. அதுதான்..." கூறி நழுவப் பார்த்தவனை, அர்த்தத்துடன் பார்த்து சிரித்தாள் தாய்.

"தம்பி! நீ எங்களுக்கு ஒரே பிள்ளை. நீ நல்லா இருக்க வேணும்... அதுதான் என்ரயும் அப்பாவின்ரயும் விருப்பம்... நீ யாரையாவது விரும்பிறியா மகன்..?"

தாய் திடீரென இப்படிக் கேட்பாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. தலையைக் குனிந்து கொண்டான்.

"நான்...நான் ஒரு பெண்ணை விரும்புறன் அம்மா... ஆனா..." தயக்கத்துடன் தாயைப் பார்த்தவன்; தன் புதுமுகம் பற்றிக் கூறினான்.

"தம்பி! இவ்வளவு படிச்ச பொறுப்பான உத்தியோகம் பார்க்கும் நீ இப்படி யோசிக்காமல் கதைக்கிறியே... அந்தப் பெண் யார் என்றே உனக்குத் தெரியாது. பிறகு எப்படி அவளை தேடிப்பிடித்து கல்யாணம் கட்டப் போகிறாய்..! அதை விடு மகன். இந்தா இதுல ஒரு பிள்ளையோட ஃபோட்டோ இருக்கு. பார்... அழகான நல்லா படிச்ச பிள்ளை..." தாய் ஃபோட்டோவை என்வலப்புடன் நீட்ட, அதை வேண்டா வெறுப்பாக வாங்கி மேசை மீது வைத்தான். அதைப் பிரித்துப் பார்க்கவும் அவனால் முடியவில்லை.

துக்கம் தொண்டையை அடைக்க 'ஓ' வென கத்த வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

'அவள் ஒருத்தி மனதில் ஆசையை வளர்க்கவைத்து வேடிக்கை பார்க்கிறாள்... இந்தப் பக்கம் அம்மா... கடவுளே...நான் என்ன முடிவை எடுப்பது...?'

மனதில் நிறைந்த சுமையுடன் வேலைக்குப் போனான். எதிலும் மனம் இலயிக்கவில்லை. சிந்தனை ஆட்கொள்ள தன்னை மறந்து இருந்தான் ஆகாஷ். டெலிஃபோன் மணி சிணுங்கியது. வேண்டா வெறுப்பாக ரிஸீவரை கையில் எடுத்தான்.

"ஹலோ...." என்றான்.

"ஹாய் ஆகாஷ்...குட்மார்னிங்...!" அவள்... ஆம், அந்த சங்கீதக் குரல்.

"ஹலோ.... பிளீஸ் லைனைக் கட் பண்ணிடாதீங்க... நீங்க யார் என்று சொல்லுங்க...."

"என்னை தெரியாதா உங்களுக்கு..?" மறுபக்கத்தில் மென்மையான ஒரு சிரிப்பு...

"நான் உங்கள் புதுமுகம்..."

"விளையாடியது போதும்... நான் உங்களப் பார்க்க வேணும்... உடனே பார்த்தாகணும்...."

"ஆ... இன்னும் நீங்க என்னை பார்க்கவே இல்லையா...?"

"விளையாடாத சொல்லு... யார் நீ...?"

"உங்க வீட்டில உங்களுக்கு பெண் பார்த்திட்டாங்களாமே...!"

"அது எப்படி உனக்குத் தெரியும்.... நான் யாரையும் விரும்பல்ல. உன்னை விரும்புறன்... உன்னைக் கல்யாணம் கட்ட ஆசைப்படுறன்... சொல்லு... இப்பவாவது உன்னைப்பற்றி சொல்லு...?"

"தாங்க் யூ ஆகாஷ்... ஐ லவ் யூ... எங்க நீங்க என்னை வெறுத்திடுவீங்க என்று பயந்து போயிட்டன். இப்ப நீங்க வீட்டுக்குப் போய் உங்க அம்மா வைச்சிருக்கிற சந்தியா என்ற பெண்ணின் ஃபோட்டோவை பாருங்க... அதுதான் நான்..."

ஆகாஷ் ஒரு தரம் தன்னை மறந்து போனான், 'அம்மா சொன்ன பெண் இவள் தானா?'

அடுத்த அரைமணி நேரத்தில் ஆகாஷின் கார் அவர்களது போர்டிகோவில் நின்றது. வேகவேகமாய் அறைக்குள் சென்றவன் பிரிக்கப்படாமல் கிடந்த என்வலப்பை எடுத்துப் பிரித்தான்.

ஓ.. அவள்... உண்மையிலேயே தேவதைதான்...! அழகுச் சிலையாக பட்டுச் சாறியில் ஜொலித்தாள்.

'சந்தியா... உன்னைப போல... உன் குரலைப் போல, உன் பெயர்கூட எவ்வளவு அழகு?' ◢◢◢

கொள்ளிக் கட்டைகள்

ஜெ. பாஸ்கரன்

பல விழா கண்ட மண்டபத்திற்கு ஒரு மரண வீட்டை சுமப்பது கஷ்டமாக இருந்தது.

அது வன்னியில் இருந்து வரும் மக்களுக்கு அடைக்கலம் அளிப்பதுடன் உள்ளூர் விழாக்கள், திருமண வைபவங்கள் போன்றவற்றிற்கும் பயன்படுகின்றது அந்த விடுதி.

உமாபதியாரும், வன்னியில் இருந்து வவுனியா வந்தால் இங்குதான் தங்குவார். நகரத்தின் மையத்தில் விடுதி அமைந்திருப்பதால் அங்கு தங்குவது அவருக்கு இலகுவாக இருந்தது.

உறவு வீடுகள் எத்தனையோ இருந்தாலும் அங்கெல்லாம் அவர் தங்குவது இல்லை. ஊரில் இருக்கும்போது அவர் உறவு வீடுகளுக்குச் செல்வது குறைவு. அவருக்கு அப்போது நேரமும் இருப்பது இல்லை.

பிரபல்யமான பாடசாலை அதிபராக இருந்தாலும் பெருமிதம் கொள்ளாதவர். கோயில் தொண்டு,வாசிகசாலை,தன் சார்ந்தவர்களுக்கு அறிவு ரீதியாக பல விடயங்களில் உதவியவர்.

இரண்டு மகன்களும் இரண்டு மகள்களுமாக, குடும்பத்தில் ஆறு உறுப்பினர்கள். மகன்கள் இருவரும் அகதி அந்தஸ்துகோரி இருக்கின்றனர் ஃபிரான்ஸில்.

அவரது மனைவியும் இரண்டு பெண் பிள்ளைகளும் வன்னியில் வசிக்கின்றனர்.

பென்சன் எடுத்து ஒரு வருடமாகியும் பென்சன் பணம் கிடைக்கவில்லை. இடம் பெயர்வுகளால் பல இடம்மாறி தொழில் புரிந்தமையால் அவரது 'ஃபைல்' அங்கும் இங்கும் பறந்து திரிந்ததேயொழிய பென்சன் வேலை முடிந்த பாடாக இல்லை.

இதனால் பிள்ளைகளிடம் அடிக்கடி பணம் பெற்றுக் கொள்ள வவுனியாவுக்கு வருவார். இம்முறை வந்து இரண்டு மாதங்களாகிவிட்டன. பாதை இன்று திறக்கப்படும். நாளை திறக்கப்படும் என்று தினமும் காத்திருந்து அலுத்துப்போய்விட்டது. அவரைப் போன்றவர்களுக்கு, ஐ.பி.சி., பி.பி.சி. உடனேயே பொழுது போகிறது. வியாழக்கிழமை என்றால் 'தினமுரசு' எடுப்பதையும் மறப்பது இல்லை.

அன்றும் அப்படித்தான் பி.பி.சி. செய்தியைக் கேட்டுப் போட்டு 'அலுவான்கள் போட்டிட்டாங்களாம் மனிசி பிள்ளையள் என்ன பாடோ தெரியாது. கிட்ட விழுந்த மாதிரி உதில் சொன்னது. என்ன நடந்துதோ ஏது நடந்துதோ?' என்று தனக்குப் பக்கத்தில் இருந்தவர்களுக்கு கூறி கவலைப் பட்டு விட்டுப்; படுத்த மனிசன் காலையிலே எழுந்திருக்கவில்லை.

அவர் வாங்கி வைத்திருந்த ஒவ்வொரு லீற்றர் மண்ணெண்ணையும், தேங்காய் எண்ணையும் அவரைப் பார்த்த வண்ணம் இருந்தன.

இரண்டு மாதங்களாக அவருடன் தங்கியிருப்பவர்கள், அவரது உடலை எப்படியாவது வன்னிக்கு அனுப்ப முயற்சி செய்தார்கள். முடியவில்லை. மகன்களின் தொலைபேசி இலக்கங்களையும் அவர்களால் பெற முடியவில்லை.

முகாமையாளருக்கு விருப்பமில்லை, மரண வீட்டை விடுதியில் நடாத்த. அதனால் அவர் உடலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்க முயற்சி செய்தார். அங்கு தங்கியிருந்தவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. இறுதியில் விடுதியிலேயே மரண வீடு நடாத்த முடிவாயிற்று.

பலருக்கு பண உதவி செய்ய வேண்டும் என்கின்ற விருப்பம் இருந்தாலும் அவர்களால் முடியாமல் போனது. விடுதிக்கும், உணவுக்கும் செலவு செய்து பணம் கரைந்து விட்டது.

இருவர் மட்டும் பெரிதாக அழுது கொட்டினார்கள். அவர்கள் உமாபதியாருக்கு அறிமுகமானவர்கள்.

"பச்சைத் தண்ணி மனிசன் போட்டுது. நாங்கள் இருக்கிறம். நல்லவர்களைத்தான் ஆண்டவனும் எடுக்கிறான். மனிசிகூட பாக்க ஏலாமல் போச்சுதே. எப்பதான் நாங்கள் எங்கட குடும்பங்கள். ஒன்று சேரப் போகுதோ?" மது வெறியில் இருவரும் இருந்தாலும் அவர்களில் உறுதி இருந்தது. வீதிக்கு வீதி அமைத்திருக்கும் திருத்தலங்களாலும் அவர்களின் கவலையை போக்கும் நிலை இல்லை. இதே நேரத்தில் தங்களையும் அழித்துக் கொள்கிறார்கள்.

ஊராரின் பணத்தில் அதிபர் ஒருவரின் உடல் தகனமாகப் போகிறது. கொள்ளி வைப்பதற்கு பிள்ளைகள் இல்லை என்ற குறை அவருக்கு இருக்கவில்லை. அனைவருமே கொள்ளி வைத்தனர்.

ஊரில் என்றால் எவ்வளவு ஆரவாரங்கள். எல்லார் மனங்களும் ஒரு கணம் யாவற்றையும் நினைத்து முணுமுணுக்கிறது. நாளைக்கு எங்களுக்கும் இப்படியா என்று!

படிப்பகம்

இன்பம் தருவது

ரசிகன்

இலக்கிய நயம்

"**கு**ழி பறிப்பவர்களை
கூட வைத்திருக்கிறீர்!
தவறான வழி நடப்போரை
உறவென பிடித்திருக்கிறீர்!"
பலரும் சொன்னார்கள்- நாக்கு
உலரும் வரை சொன்னார்கள்!
மன்னன் தன்
எண்ணத்தில் கொண்டானில்லை!
"என்றாவது ஒரு நாள்
நன்றைக் கூறினோம்
என்று உணர்வாய்!"
அதற்கும்
ஓர் புன்னகைதான்!
"பலாப்பழத்தை
ஈக்கள் மொய்ப்பது
இயல்புதானே!
மரம் பழுத்தால்
வவ்வால்கள்
வருவதும் வழக்கம்தானே!
பூ மலர்ந்தால்
வண்டுகள் நாடுவது
இயற்கைதானே!"
மன்னன்
வினாக்களை விடுத்தான்!
அத்தனை வினாக்களும்
அவன் உள்ளத்தில்
ஒலித்தனவே தவிர
வெளியே வரவில்லை!
'அபிஷேக மண்டபத்தில்
விஷப் புகை!
நந்தவனத்திற்குள்
நச்சுப் பாம்புகள்!
நல் ஆற்றுக்குள்
கொல்லும் முதலைகள்!'
மன்னன் நலவிரும்பிகள்
வேதனை கொண்டனர்!
அரச சபையில்
ஒரு அபலை தோன்றினாள்!
"குறை என்ன
கூறு!" என்றான்
கோவேந்தன்.
களனியில்
களையெடுப்பது
என் தொழில்!
நாட்டுக்குள்
களையெடுப்பது
உம் தொழில்!
கடமை மறந்துவிட்டீர்
கயவர்கள் நிறைந்துவிட்டார்!"
அவள் குமுறினாள்.
"சுற்றி வளைக்காதே
சோதரி!
குற்றம் விளக்கு"
மன்னன் பணித்தான்.
"நங்கையர் வீதியில்
நடமாட முடியவில்லை!"
அவள் சொன்னதும்
மன்னன் சிவந்தான்.
"காரணம் யார்
கூறு சோதரி!- அவர்களை
தோரணமாய் தொங்கவிடுகிறேன்!"
அவள்
நெருப்பைக் கொட்டினாள்.
"குற்றம் புரிந்தவர்கள்
தங்கள்
சுற்றத்தில் இருக்கிறார்கள்!"
சபையில்
மயான அமைதி!
"யார் என்று
பார் சோதரி,
அடையாளம் காட்டு
உடைவாளால் சீவுகிறேன்!"
அவள் சுட்டுவிரல்
சுள்ளென்று நீண்டது!
"அதோ! அவன்தான்
நங்கையர் வாழ்வை
பங்கம் செய்யும் பாவி!"
'மன்னனின்
உற்ற நண்பன்மீது
பெண்ணிவள்
குற்றம் சாட்டிவிட்டாள்
இவள் கதி என்னாகும்?'
சபையோர்
கலங்கினர்!
மன்னன் புன்னகை
மாறாது
நண்பனை நோக்கினான்!
"உன் பதில் என்ன
உடன் கூறு!" என்றான்.
நண்பன் எழுந்தான்.
"யாவும் பொய்
இவள் பேய் என்பதே மெய்!"
என்று சீறினான்.
'பேய் என்றாய்
பெண்ணை!
உன் தாயும் பெண்!
பெண்ணால் முடியாதது
எதுவுமில்லை!
முட்டி மோதி
புயலாக்காதீர்!"
கூறிய மன்னன்
ஓங்கி உரைத்தான்:
"நண்பனேயாயினும்
தண்டனை உண்டு!
முதலில் உனக்கு சிறை
பின்னர் விசாரணை!"
அடுத்த குற்றச்சாட்டும்
சபைக்கு வந்தது!
கொண்டு வந்தவர்
ஒற்றர் படைத் தலைவர்.
"மன்னரின்
நண்பர்கள் இருவர்
பகை நாட்டோடு
கை கொடுத்துள்ளனர்!"
குற்றத்தை கேட்ட
மன்னன்
குறுநகை புரிந்தான்!
"பண்டிதர்கள்
பல நூல் பயின்றவர்கள்
ஆனால் பண்பாளர்களலல்ல,
பழக உகந்தவர்களுமல்ல
அப்படித்தானே?"
என்று கேட்டான்
மன்னன்!
"ஆம்! மன்னா!
நச்சுப் பாம்புகள்!"
என்றான் ஒற்றர் தலைவன்!
மறு நொடியே
உயர்ந்தது மன்னன் குரல்:
"அவர்கள் இருவரையும்
இருட் சிறையில் இடுங்கள்!"
நண்பர்களுக்கே
தண்டனை கொடுத்த
மன்னன் மனது
என்ன பாடுபடும்?"
சபையோர் சோகித்தனர்.
ஆனால் மன்னனின்
வீர உதடுகள்
புன்னகை தொலைக்கவில்லை!
சபையோரின் குறிப்பு
உணர்ந்து
மன்னனே விளக்கினான்:
"தீயோரின் நட்பு
தீதல்ல! தீஞ்சுவையே!"
மன்னன் விளக்கம்
சபைக்கு புரியவில்லை.
'பட்டும்கூட
பாடக் கற்கவில்லையோ?
என்று நினைத்தனர்.
மன்னன் விளக்கினான்;
தீயோர் நண்பரானால்
அவர்களை இழக்கையில்
துயரம் நேராது.
இன்பம்தான் நேரும்!
நல்லோர் நண்பரானால்
இழக்கும் நிலை வந்தால்
இதயமே வெடித்துவிடும்!
அதனால்தான் சொன்னேன்
தீயோர் நட்பு இன்பம்
அவர்களை பெற்றால் என்ன
தொலைத்தால் என்ன?"

உறின் நட்டு அறின் ஒரூ உம் ஒப்பிலார்
கேண்மை
பெறினும் இழப்பினும் என்
அதிகாரம்: 82.குறள்:812

சிந்தியா பதில்கள்

♠ **சிந்தியா! பாராளுமன்றத்தில் பொதியை சமர்ப்பிக்கப்போவதாக செய்திகள் வெளியிட்டுள்ளன பத்திரிகைகள். இதே பத்திரிகைகள் தான் முன்பு பொதியை பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்ததாக செய்தி வெளியிட்டன. அப்படியானால் இனிமேல் சமர்ப்பிக்கப்போவது எந்தப் பொதியை?**

கே. கோபாலசிங்கம், கொழும்பு-06.

திரு. கோபாலசிங்கம், உங்கள் ஞாபக சக்திக்கு பாராட்டுக்கள்! அப்போதே 'முரசு' மட்டும், ஆம் முரசு மட்டும் அது தீர்வு யோசனையல்ல, தெரிவுக்குழு அறிக்கை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. தமிழ் மக்களையும், உலகையும் திருப்தி செய்ய குழப்பமாக வெளியிடப்பட்ட தகவல்களை சீர்தூக்கி ஆராயாதும், கல்விமான்கள், புத்திஜீவிகள் என்று நாம் பிரமிக்கும் சில தமிழ்ப் பிரமுகர்கள் கூறியவற்றை நம்பியும் சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளே அவை! இதுவரை பாராளுமன்றத்தில் பொதி சமர்ப்பிக்கப்படவில்லை! ஆகஸ்ட் மாதத்தில் சமர்ப்பிக்க அரசு தயாராகவும் இல்லை! அப்படி சமர்ப்பித்தாலும் அந்த அரைகுறைப் பொதியை சமர்ப்பிப்பதை எதிர்க்க வேண்டுமே தவிர, பெரிய காரியம் ஏதோ நடக்க உள்ளதாக வியக்கத் தேவையில்லை!

★★

♠ **டாக்டர் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டது பற்றி உமது அபிப்பிராயம் யாது?**

பி. மாதவன், கொழும்பு-11.

மனித உயிர் இழப்பு என்பதால் வருந்தத்தக்க நிகழ்வு! ஒரு குடும்பத் தலைவர் என்ற ரீதியில் அவரது குடும்பத்திற்கு பேரிழப்பு! மற்றப்படி அவர் இறந்துவிட்டதால் தமிழர் தலைவராக பொய்ப் புகழ்ச்சி கூறுவதும், இல்லாததையெல்லாம் சொல்லி மிகையாகப் புகழ்ந்து தள்ளப்பட்டதும் சகிக்க முடியவில்லை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவா? புளொட் ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளது அரசியல் யாப்பை வரைய உதவியதாக போற்றியிருந்தனர்.

அதற்கு முதல்நாள் செய்தி ஒன்றில் எதியோப்பியா, கசகிஸ்தான் நாடுகளது அரசியல் யாப்பை வரைய உதவியதாகக் கூறப்பட்டது. அதனை அரைகுறையாக விளங்கி எழுதித் தள்ளிவிட்டனர். எதியோப்பியா என்பது தென்னாபிரிக்கா என்று காதில் விழுந்துவிட்டதாக்கும்.

ஏனைய பல புகழாரங்களும் இப்படித்தான். வெறும் சம்பிரதாயமும் பாசாங்குகளும் கலந்தவையே அதிகம்!

★★

♠ **மனிதர்களை ஆராய வழியே இல்லையா?**

மா. செல்வராஜ், மன்னார்.

வழி இல்லை, யாரோ சொன்ன அனுபவ மொழி இருக்கிறது:

"உண்மையான நண்பனை ஆபத்துக் காலத்திலும், மனிதனின் வீரத்தை போர்க்களத்திலும், நேர்மையைக் கடன் பெற்ற காலத்திலும், மனைவியின் அன்பை வறுமையிலும், சுற்றத்தார் அன்பை துன்பம் ஏற்படும்போதும் காணலாம்.

அத்தோடு எவன் உற்சாகத்திலும், துன்ப காலத்திலும், பஞ்சத்திலும், கலகம் ஏற்படும்போதும், மயானத்திலும் உதவியாக இருக்கிறானோ, அவனே உத்தமமான உறவினன்."

★★

♠ **சிந்தியா! கூட்டணித் தலைவர்களில் ஒருவரது மறைவுக்கு அமெரிக்க ஜனாதிபதியே கண்டனம் தெரிவிப்பது இதுதானே முதற்தடவை. இதுபற்றி என்ன நினைக்கிறீர்?**

பா. ரமணன், வத்தளை.

தமிழர் தரப்பில் தமக்கு மிக மிக உண்மையான ஒருவரை அமெரிக்கா இழந்ததும் இதுதான் முதற்தடவை! அவர்களது வருத்தம் உண்மையானது. நம்மவர்கள் சிலரது அறிக்கைகள் போல பாசாங்கானதல்ல!

★★

♠ **'அந்தப்புரம்' படம் பார்த்தீரா? பிரகாஷ் ராஜ், பார்த்திபன் இருவரில் யார் அசத்தல்?**

கி. தயாளன், நீர்கொழும்பு.

பார்த்திபனுக்குத்தான் எனது முதல் விருப்பு வாக்கு! சௌந்தர்யா இதில் சோகந்தர்யா! பிரகாஷ்ராஜ் இருமல்ராஜ். வில்லத்தனம் ஜோர்!

★★

♠ **சென்றவாரம் கடி ஜோக் ஒன்றும் இல்லையே?**

ஆ. யாழினி, திருமலை.

கேட்கவில்லையே!

"தென்னாபிரிக்காவில் இருமல் வந்தால் என்ன செய்வார்கள்?"

"தெரியாது?"

"இருமுவார்கள்!"

(உபயம்- 'சுயம்வர'த்தில் பார்த்திபன்)

★★

'மலபார் பொலிஸ்' படத்தில் சத்யராஜ்-அல்போன்ஸா

♠ **'மலபார் பொலிஸ்' எப்போது திரைக்கு வருகிறது?**

எம். கல்யாணி, வத்தளை.

ஆகஸ்ட 6ம் திகதி வெண் திரையில்!

★★

♠ **தி.மு.க., ம.தி.மு.க. உறவு நிலைக்குமா?**

பா. சதீஸ்குமார், பதுளை.

அது நிலைக்கிறதோ இல்லையோ வை.கோவும், கலைஞரும் கூறுகின்ற கருத்துக்கள் இனிக்கின்றன.

கலைஞரைச் சந்திக்க அவரது வீட்டுக்குச் சென்ற வை.கோ, "தந்தையைக் காண தனிக்குடித்தனம் சென்ற தனயன் வருவதில்லையா?" என்று சொன்னார்.

வை.கோ.வின் கட்சி மாநாட்டுக்கு சென்ற கலைஞர்: "என் மகனது தனிக்குடித்தனத்தை காண்பதற்கு வந்திருக்கிறேன்!" என்றார்.

★★

♠ **பொல்லைக் கொடுத்து அடி வாங்குவதற்கு உதாரணம் கூறுங்களேன்?**

எஸ். ரிஸ்வான், கொழும்பு.

தன் வீட்டுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று ஒருவர் விளம்பரம் கொடுத்தார்.

"ஓர் அழகான மாளிகைக்கு திடகாத்திரமான, துப்பாக்கி அனுமதிப்பத்திரம் உள்ள காவலாளி தேவை!" என்று குறிப்பிட்டிருந்தார்.

விளம்பரம் பத்திரிகையில் வந்த மறுநாள் நாலுபேர் வேலை கேட்டு வந்தனர்.

வீட்டு உரிமையாளர் அவர்களிடம் கூறினார்: "காவலாளியை வைத்துக் கொள்ளும் அளவுக்கு என்னிடம் வசதியில்லை!"

வந்தவர்களுக்கு ஆச்சரியம்: "பின்னர் ஏன் செலவு செய்து பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு உரிமையாளர் கூறினார்: "அந்த விளம்பரத்தால்தான் வந்தது வினை. விளம்பரத்தைப் படித்துவிட்டு, 'ஓஹோ இந்த வீட்டுக்கு இன்னமும் காவலாளி வைக்கவில்லை.' என்று தெரிந்துகொண்டு உள்ளே புகுந்து மொத்தத்தையும் கொள்ளையடித்துப் போய்விட்டார்கள்!"

★★

♠ **அறிவுரைகள் எல்லா சந்தர்ப்பத்திலும் பொருந்துமா? பொய் சொல்லக் கூடாது என்பது அறிவுரை. நல்ல காரியத்திற்கு தேவையானால் பொய் சொல்லலாம் என்கிறது திருக்குறள்?**

ஆர். குகநாதன்,
கனடா.

சூழ்நிலையைப் பொறுத்து முடிவு எடுக்க வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்தும் போது மாணவர்களிடம்:

"எதனையும் பேசுவதற்கு முன்னர் யோசித்துப் பேச வேண்டும். யோசிக்காது பேசினால் துன்பம் வரும். ஏதாவது பேச விரும்பினால் 1,2,3... என்று 50 வரை சொல்லுங்கள். அதற்குப் பிறகும் முக்கியமான விஷயம் என்று நினைத்தால் மட்டுமே சொல்லுங்கள்" என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

இரண்டு நாட்களின் பின்னர் அதே ஆசிரியர் வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார்.

திடீர் என்று சகல மாணவர்களும், 1,2,3.. என்று எண்ணத் தொடங்கினார்கள்.

மாணவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று ஆசிரியர் எதிர்பார்ப்புடன் காத்திருந்தார்.

மாணவர்கள் நிதானமாக 50வரை எண்ணி முடித்துவிட்டு, "சேர்! உங்களுக்கு பின்னால் ஒரு பாம்பு படம் எடுத்தபடி நிற்கிறது!" என்று கூறினார்கள்.

★★

♠ **வன்னிக்கு புலிகளது அனுமதி இல்லாது மக்களை அனுப்பியது தவறு என்று இராணுவ அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளாரே?**

பி. சாரங்கன், வவுனியா.

நாடகம் எடுபடாத நிலையில் தமக்கு பாதகம் இல்லாதவாறு கருத்துக் கூறியிருக்கிறார்.

★★

ஸ்போர்ட்ஸ்

உலகின் சிறந்த வீரர்

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய கப்டனாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சச்சின் டெண்டுல்கர் உலகின் சிறந்த டெஸ்ட் வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் உலகில் அதிகம் மதிக்கப்படுவதும், இலண்டனில் இருந்து வெளியாவதுமான புகழ்பெற்ற 'விஸ்டன்' கிரிக்கெட் மாத இதழ் டெஸ்ட் தரப்பட்டியலை அண்மையில் வெளியிட்டது. இப்பட்டியலில் டெண்டுல்கர் முதலிடம் பிடித்திருக்கிறார்.

இதுவரை முதலிடத்தில் இருந்து வந்த இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். இலங்கையின் புதிய கப்டன் சனத் ஜெயசூரிய மூன்றாவது இடத்தில் உள்ளார்.

இந்தியாவின் ராகுல் ட்ராவிட், சௌரவ் கங்குலி ஆகியோர் முறையே நான்காம், ஐந்தாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளார்கள்.

ரீபிள் இடத்திற்கு டேல்

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்யும் அவுஸ்திரேலிய அணியில் அடம் டேல் சேர்க்கப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் போல் ரீபிள் ஓய்வு பெற்றதை அடுத்து இவரது இடத்திற்கு டேல் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து அணிக்காக விளையாடி வரும் டேலுடன் ஸ்ருவர்ட் லோவும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த வருடத்தில் மேற்கிந்தியத் தீவுக்கு அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் செய்தபோது அடம் டேல் உடல் நலக்குறைவால் இடையில் அவுஸ்திரேலியா திரும்பினார்.

இருப்பினும் நடந்து முடிந்த உலகக் கோப்பைப் போட்டியில் கலந்துகொண்டார். 31 வயதான வேகப்பந்து வீச்சாளரான அடம் டேல் 25க்கும் மேற்பட்ட ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

குற்றமற்றவர்கள்

உலகக்கோப்பைப் போட்டிக்குப்பின் பாகிஸ்தான் அணியின் 12 வீரர்களிடம் ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் நடந்து வருகின்றன. இதில் 4 வீரர்கள் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மொயின்கான், இன்ஸமாம்-உல்-ஹக், வக்கார் யூனுஸ், முஷ்டாக் அகமட் ஆகிய நால்வரும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தற்காலிகத் தலைவர் முஜிபுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

ஏனைய வீரர்களில் ஏற்கனவே வாஸிம் அக்ரம், இஜாஸ் அகமட், சலீம் மாலிக் ஆகியோர் அணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் வாஸிம் அக்ரம் தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ள இன்னொரு வீரரான இஜாஸ் அகமட், "நான் எவ்வித தவறும் செய்யவில்லை. அணியில் இருந்து நீக்கியதை எதிர்த்து வழக்குத் தொடர்வேன். எனது சொத்துப்பட்டியலையும் வெளியிடத் தயார்!" என்று கூறியுள்ளார்.

ஓய்வு பெறுகிறார்

உலகக் கிரிக்கெட் அரங்கில் 'கறுப்பு அச்சம்' என வர்ணிக்கப்படும் கென்யா அணியின் கப்டன் ஆஸிப் கரீம் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

36 வயதான ஆஸிப் கரீம் தலைமையில்தான் அண்மைய உலகக் கோப்பைப் போட்டியில் கென்யா அணி விளையாடியது.

சுழற்பந்து வீச்சாளரான இவர் உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்னதாகவே ஓய்வு பெறும் முடிவை எடுக்க இருந்ததாகவும், கென்யா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கேட்டுக்கொண்டதற்கு இணங்க உலகக்கோப்பை முடிவடைந்ததும் தான் ஓய்வு பெறும் முடிவை அறிவித்ததாகவும் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவர்தான் அவர்

பெப்ஸி உங்கள் சொய்ஸ்
உமா

படிப்பகம்

திருமறை தரும் பொது நெறி

புதிய ஆகமம்

12

இராஜகுமாரன்

ஆண்டவருடைய விண்ணரசினை பூவுலகிலும் நிலைநிறுத்தும் பொருட்டு மாநிட உருவில் வந்துதித்த இயேசுபிரான், மக்களிடம் மலிந்து கிடந்த மாசினை அகற்றும் பணியில் அல்லும் பகலும் பணி புரிந்தார். அவருடைய பணியினை விரிவாக்கும் பொருட்டு, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு சீடர்களையும் பல இடங்களுக்கும் அனுப்பி வைத்தார். சீடர்களுக்காக இயேசுபிரான் அருளிய போதனைகளில், மனிதர்களில் அன்று மலிந்து கிடந்த பதர்களைப் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

“நீர் தாமா மேய்ப்பர்?”

இத்தகைய கெடுமதியாளர்கள் இன்னும் எம்மிடம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இறைவனின் மகனே இம்மாநிலத்தில் அவதரித்து, மக்களுக்கு எவ்வளவோ அறிவுரைகளை வழங்கினார். ஆனால் அவற்றைச் செவிமடுத்து, அதற்கேற்ப வாழ்ந்தவர்கள் மிகக் குறைவானவர்களே.

இயேசுபெருமானின் அருளுரைகள் இன்றும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. தேவாலயங்களில் தினமும் அவருடைய கருத்துக்களும் அவருடைய சீடர்களுடைய போதனைகளும் மக்கள் மத்தியில் பரிமாறப்பட்ட வண்ணமே உள்ளன. பயபக்தியுடன் கேட்கின்றோம். ஆனால் அத் தெய்வத் திருந்தலங்களின் எல்லையை விட்டு வெளியேறும்போது, அத்தேவாலய எல்லையைக் கடப்பதற்கு முன்னமே, செவிமடுத்த வாக்கியங்களில் பொதிந்து கிடந்த பொருளையும் அவ்விடத்திலேயே விட்டுவிட்டு வெளியேறுகிறோம்.

கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின் பற்றுபவர்கள் மட்டுமல்லாமல், ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களும் இவ்வாறே நடக்கின்றனர். இதன் காரணமாகத்தான் இயேசு பெருமான் அறிவித்த விண்ணரசு பற்றிய கூற்றுக்கள் விடியலைக் காணாது, அந்தகார சூழ்நிலை எம்மிடையே இன்றும் நிலைத்து நிற்கிறது.

இயேசுபிரானால் அவருடைய சீடர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளை திருவிவிலியத்தில்- திருத்தூதர் மத்தேயுவால் தொகுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை அப்படியே தருகிறோம்.

சீடர்களுக்கான அறிவுரைகள்

“நீங்கள் எந்த நகருக்கோ ஊருக்கோ சென்றாலும் அங்கே உங்களை ஏற்கத் தகுதியுடையவர் யாரெனக் கேட்டறியுங்கள். அங்கிருந்து புறப்படும்வரை அவரோடு தங்கியிருங்கள். அந்த வீட்டுக்குள் செல்லும் பொழுதே, வீட்டாருக்கு வாழ்த்துக் கூறுங்கள். வீட்டார் தகுதி உள்ளவராய் இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவர்கள் மேல் தங்கட்டும்; அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்தால் அது உங்களிடமே திரும்பி வரட்டும். உங்களை எவராவது ஏற்றுக் கொள்ளாமலோ, நீங்கள் அறிவித்தவற்றுக்குச் செவிசாய்க்காமலோ இருந்தால் அவரது வீட்டை, அல்லது நகரைவிட்டு வெளியேறும் பொழுது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். தீர்ப்பு நாளில் சோதோம் கொமோராப் பகுதிகளுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட அந்நகருக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

துன்பங்கள்

“இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப் போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப் போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும் பொழுது, ‘என்ன பேசுவது, எப்படிப் பேசுவது’ என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப் படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார். சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரி களையும் தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.

“அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்குப் போங்கள். மானிட மகனின் வருகைக்குமுன் நீங்கள் இஸ்ரயேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்க மாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன். சீடர் குருவை விடப் பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப்போல் ஆகட்டும்; பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப் பற்றி இன்னும் தரக்குறைவாகப் பேச மாட்டார்களா?

“எனவே, அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை; அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல் தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்.

“காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்தல்

“மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக் கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்.

“உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார். இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக் கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.”

இவ்வாறு அறிவுரைகளைத் தமது சீடர்களுக்கு வழங்கி அவர்களை வழியனுப்பி விட்டு இயேசுபிரான், ஏனைய இடங்களுக்குச் சென்று தமது அருளுரைகளை வழங்கப் புறப்பட்டுச் சென்றார்.

இயேசுபெருமானின் போதனைகள் பற்றியும் அவர் மக்களின் துன்பங்களைப் போக்குவதற்காகப் புரிந்த அற்புதங்கள் பற்றியும், ஏரோது மன்னரால் சிறையிலடைக்கப்பட்டிருந்த திருமுழுக்கு யோவான் கேள்வியுற்றார். இறைவனால் தமக்கு அறிவிக்கப்பட்ட மீட்பர்-இயேசுபிரானாகத்தானிருக்க வேண்டும் என்று கருதினார். உண்மையை அறிவதற்காக யோவான், தனது சீடர்கள் சிலரை இயேசுவிடம் அனுப்பினார். அவர்கள் இயேசுவிடம் வந்து, “இறைவனால் அறிவிக்கப்பட்ட மேசியா நீர்தாமா? அல்லது வேறு யாரையாவது எதிர்பார்க்க வேண்டுமா?” என்று வினவினர். இயேசுபிரான் அவர்களுடைய வினாவுக்கு அளித்தவிடை இவ்வாறு அமைந்துள்ளது:

“நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்; தொழுநோயாளர் நலமடைகின்றனர்; காது கேளாதோர் கேட்கின்றனர்; இறந்தோர் உயிர் பெற்று எழுகின்றனர்; ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. என்னைத் தயக்கம் இன்றி ஏற்றுக் கொள்வோர் பேறுபெற்றோர்!” (தொடர்ந்து வரும்)

திருமறை [பு-ஆ] 09 விடை: ☛ **விண்ணுலகில்**

பரிசு பெறுவோர்:

1. **சரோஜினி பர்னாந்து,**
10/6, கிராமோதய மாவத்தை, ஒபயசேகரபுர, ராஜகிரிய
2. **டி.எஸ்.கிறிஸ்டோபர்,**
இல.1, சமகிகம, பவ்வாகம, நாவலப்பிட்டி.
3. **எஸ். சர்மிளன்,**
250, கரியாலை, நாகபடுவான், முழங்காவில்.
4. **தினகரன் இஸ்மாயில்,**
அல்அர்சத் வித்தியாலயம். சம்மாந்துறை.
5. **ஆர். கவிதா,** எலதலுவ தோட்டம், உனுகொல்ல பிரிவ, ஆலி-எல.

திருமறை [பு.ஆ] 12 வினா :- **இயேசுபிரான் யாராக இருக்க வேண்டும் என்று யோவான் கருதுகிறார்?**

ஆகஸ்ட் 14 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

திருமறை பு.ஆ.12—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.

அந்த ஒருநாள் மட்டும்!

தமிழ்க் கட்சிகளது தலைவர் எவருக்காவது ஒரேயொரு மணி நேரம் மட்டுமாவது உண்மையைப் பேசவேண்டும் என்று ஆசை ஏற்பட்டால் என்னாகும்? காதிலை பூ கந்தசாமியார் கற்பனை செய்யட்டுமேன்.

கா.பூ.க: வணக்கம். இனப்பிரச்சனைக்கு எப்போதய்யா தீர்வு வரும்?

த.க.தலைவர்: அந்த யோசனையே ஆளுகின்றவர்களுக்கு கிடையாது!

கா.பூ.க: பொதியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

த.க.த: பொதி அது தமிழ் மக்களுக்கு எதிரான சதி. என்ன செய்வதப்பா எங்கள் விதி. அதனை எதிர்க்கவும் முடியாமல், ஆதரிக்கவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்பாக தவித்துக் கொண்டிருக்கிறோம்.

கா.பூ.க: பொதி செத்துவிட்டது என்று அமைச்சர் அஷ்ரப் கூறிவிட்டாரே?

த.க.த: அவர் உண்மையைத்தான் கூறியிருக்கிறார்.

கா.பூ.க: அப்படியானால் நீங்கள் ஏன் பொய்யைக் கூறுகிறீர்கள்?

த.க.த: பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது என்பது ஏட்டுச் சுரைக்காய்! பொய் சொன்னால்தான் பெரிய இடத்து கடாட்சம் கிடைக்கும். இது நாட்டு நடப்பு!

கா.பூ.க: அரசில் இருந்து கொண்டே அஷ்ரப் மட்டும் எப்படி உண்மையைக் கூறமுடிந்தது?

த.க.த: அதனை அவரிடம்தான் கேட்க வேண்டும். எங்களை விட அந்த மனிதர் சாணக்கியர்தான்.

கா.பூ.க: ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணக்கம் காணமுடியும் என்று நம்புகிறீர்களா?

த.க.த: அப்படி நம்புமளவுக்கு நான் ஒன்றும் அடி முட்டாளில்லை.

கா.பூ.க: (ஆச்சரியத்தோடு) அப்படியானால் தாங்கள்தானே இரு கட்சிகளும் இணக்கம் காணவேண்டும் என்று கூறிவருகிறீர்கள்?

த.க.த. அதுவா? (சங்கடமாக நெளிந்தபடி) வேறு கேள்வி கேளுங்களேன்?

கா.பூ.க: இல்லை ஐயா, இதற்குத்தான் பதில் தேவை?

த.க.த: தமிழ் ஈழம் கேட்டோம். பின்னர் கைவிட்டு விட்டோம்! பாராளுமன்றத்தை பிரசார மேடையாக மட்டும் பயன்படுத்துவோம் என்றோம். இப்போது பாராளுமன்றத்தில் அரசை ஆதரித்து உபகாரம் செய்கிறோம்! ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக என்றோம். இப்போது வாழ்க என்கிறோம்! வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்து என்றோம்! நடக்காது என்று தெரிந்ததும் நாவை அடக்கிக் கொண்டோம்! குறைந்த பட்சம் உள்ளூராட்சி தேர்தலாவது கேட்டோம். கொடுப்பதாக இல்லை என்று தெரிந்ததும், குரலை அடக்கிக்கொண்டோம்.

கா.பூ.க: தாங்கள் என்ன கூற வருகிறீர்கள்?

த.க.த: நாங்கள் கேட்பது எதுவும் கிடைத்ததில்லை. எந்தக் கோரிக்கையிலும் நாங்கள் உறுதியாக நின்றதில்லை! எங்கள் சொந்தக் காரியங்களில் மட்டும் குறியாக இருக்கிறோம். நீண்டகாலத்திற்கு கைவிட முடியாத ஒரு கொள்கையாவது வேண்டாமா? நம்மிடமும் திட்டம் இருக்கிறது என்று மக்களை நம்பவைக்க வேண்டாமா? அதுதான் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணக்கம் காண வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறோம். அதற்கான முயற்சிகளில் குதித்திருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கிறோம். இந்த யுகத்தில் இணக்கம் ஏற்படப்போவதில்லை. அதனால் இந்த யுகம் முழுக்க நாம் அக் கோரிக்கையை கைவிட வேண்டிய கட்டாயமும் ஏற்படாது! எப்படி எங்கள் சாணக்கியம்?

கா.பூ.க: பேஷ் பேஷ். கொள்கையில் உறுதியானவர்கள் என்று இந்த யுகம் முழுக்க மக்களை ஏமாற்றலாம். நல்ல கொள்கை! நல்ல கோரிக்கை!

த.க.த: ஆட்சி மாறினால்கூட இந்தக் கொள்கையை நாம் மாற்றவேண்டி இருக்காது. ஹி.ஹி.ஹி.

கா.பூ.க: ஆமாம். ஆமாம். உங்கள் தந்திரம் யாருக்கும் வராது!

த.க.த: அப்படிப் புகழாதீர்கள். சக கட்சித் தலைவர்களும் சளைத்தவர்களல்ல! நாமெல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

கா.பூ.க: அப்படியானால் ஒரே கட்சியாக மாறலாமே? கொள்கை வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லையே?

த.க.த: கொள்கை இருந்தால்தானே வேறுபடுவதற்கு?

கா.பூ.க: வேறு என்ன வேறுபாடு?

த.க.த: யார் தலைவராக இருப்பது என்று வேறுபாடு. உதவித் தொகைகளை அரசிடம் இருந்து யார் பெறுவது என்பதில் வேறுபாடு. அடுத்த தேர்தலில் யார் தலைமையில் போட்டியிடுவது என்பதில் வேறுபாடு... இப்படிப் பல வேறுபாடுகள் நமக்குள் ஏற்படக்கூடாது என்றால் நாம் தனித் தனியாக இருப்பதே மேலானது.

கா.பூ.க: ஒரே கட்சியாக மாறினால் இன்றுள்ளதை விட உங்களுக்குள் முரண்பாடுகள் அதிகரிக்கும் என்கிறீர்கள். ஐக்கியத்துக்கு ஐக்கியமே எதிரி. விசித்திரமான நிலைதான்.

த.க.த: இதைவிட பல விசித்திரங்கள் உள்ளன. தயவு செய்து என் வாயைக் கிளறாதீர்கள். நான் இரண்டு பெரிய தவறுகளை செய்துவிட்டேன்.

கா.பூ.க: என்ன..என்ன தவறுகள்?

த.க.த: ஒரே ஒரு மணிநேரமாவது உண்மையை பேச முடிவு செய்தது முதல் தவறு. அப்படி பேசினாலும் அரசியல் பேச முன்வந்தது இரண்டாவது தவறு. நன்றி. வணக்கம்.



இந்த விளம்பர வாசகங்களுக்குள் ஒரு குறும்பு இருக்கிறது. படித்துப் பாருங்கள்.


அறிக்கைகள், அம்மாவுக்கு முறையீடுகள் வெளியிடாதிருக்கும் விரதம் இருந்து பார்க்கிறார் தலைவர்.

புதுமையான விரதம்

காதிலை பூ கந்தசாமி

படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகளின் மின்னிப்பேசுகின்றன.
கிளை:
106, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

மதுபானம் போதை தருவதுதான். மதுகுடிக்கப் பழகி விட்டால் பெரும்பாலானவர்கள் மதுவிலேயே நீச்சலடிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

மேலை நாடுகளில் உல்லாசமாகப் பொழுதைக் களிப்பதற்காகவே மதுவைப் பயன்படுத்துகிறார்கள். விஸ்கி, உவைன், பிராந்தி என்றுள்ள பலவகையான மதுவகைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை ருசியையும், ஒவ்வொரு அளவான போதையையும் தரவல்லது. இத்தகைய பல்வேறு ரகங்களை அளவோடு ஒன்றாகக் கலப்பதை 'கொக்ரெயில்' என்று கூறுவார்கள்.

அமெரிக்கா பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள ஃபிலடெல்ஃபியாவில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி மௌனி களியாட்ட மையத்தில், கலப்பு மதுபானத் தயாரிப்பில் ஒரு சாதனை நிலை நாட்டப்பட்டது.

ரஷ்யாவின் மதுபானமான வோட்கா, கிரேன் பேரிப்பழச்சாறு, கிரேப்ஃபுருட்சாறு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்தார்கள். 11,102 லீட்டர் (2 ஆயிரத்தி 442.2 கலன்) பானம் தேறியது.

இதற்கு 'ஃபின்லாண்டியா கடற்காற்று' என்று பெயர் சூட்டினார்கள். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலப்பு மது புட்டிகளில் அடைக்கப்பட்டும், தாங்கிகளில் சேகரிக்கப்பட்டும் விநியோகிக்கப்பட்டது. இதனைக் கலந்தெடுக்க 10 மணி நேரம் செலவிடப்பட்டதாம். கலப்பு மது (கொக்ரெயில்) தயாரிப்பில் இன்று வரை உலக சாதனை இதுதான்.

சாதனை

வெண்ணிலா

எழிலாகத் தோன்றும் இந்த நங்கை தேவலோக மங்கையோ? என்று எண்ணத் தோன்றும். இந்த நளின மேனிக்கு சொந்தக்காரி ஐரோப்பிய அழகுராணி.

25.06.99இல் ஐரோப்பிய அழகு ராணிப் போட்டி நடைபெற்றது. 39 ஐரோப்பிய நாட்டு அழகிகள் போட்டியில் குதித்து புரிந்த எழில்களை காண்பித்தனர். இறுதியில் அழகிய புயலாக வீசி வென்றவர் இவர்தான். 17 வயதான இந்த அழகி ரசியாவைச் சேர்ந்தவர். பெயர்: எலினா. எடை 58கிலோ. உயரம் 168 சென்றி மீட்டர். (58 கிலோ தாஜ்மஹால்)

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் இப்போட்டி நடைபெற்றது. இப் போட்டி நடப்பதற்கு முதல்நாள்தான் இரவு 9மணி முதல் மறுநாள் காலை 5 மணிவரை இஸ்ரேல் விமானங்கள் பெய்ருட்டை தாக்கின. 8 பேர் பலியானார்கள். 63 பேர் காயமடைந்தனர். அவ்வாறிருந்தும் அழகிப் போட்டியும் நடந்து முடிந்தது. (படமும் தகவலும் எம்.சந்திரவதனி லெபனான். ○

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

நேற்று நீ இன்று நான்

1996 இல் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் சச்சின் டெண்டுல்கர்.

அண்மையில் நடந்த உலகக் கோப்பைப் போட்டியிலும் சச்சின் சாதனை படைப்பார் என்று பலரும் நினைத்தனர்; எதிர்பார்த்தனர்.

ஆனால் சச்சின் ஏமாற்றி விட்டார். அந்த ஏமாற்றத்துக்கு பரிகாரம் செய்தவர் ராகுல் திராவிட். உலகக்கோப்பை போட்டிகளில் இம்முறை அதிக ஓட்டம் குவித்தவர் அவர்தான்.

இந்திய அணி சூப்பர் சிக்ஸுடன் நாடு திரும்பியபோதும், அதிக ஓட்டம் குவித்த வீரர் தமது அணியைச் சேர்ந்தவர் என்ற பெருமையை இந்திய அணி பெற்றது.

அதுமட்டுமன்றி இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் ராகுல் திராவிட்டும், கங்குலியும் இணைந்து ஆடி 318 ஓட்டங்கள் குவித்து ஒரு நாள் போட்டியில் அதிகபட்ச இணைப்பாட்ட சாதனை படைத்தனர்.

இதே உலகக் கோப்பை போட்டியில் டெண்டுல்கருடன் இணைந்து கென்யாவுடன் மோதி 237 ஓட்டங்கள் குவித்தார். (திராவிட் ஆட்டமிழக்காது 104 ஓட்டங்கள்)

11.01.1973இல் பிறந்த 26 வயதான இந்த இளைஞருக்கு பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கிறது. ○

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி சாதனா 06.08.1999

கனடாவில் வசிக்கும் அலவாயைச் சேர்ந்த செந்திலகுமரன் வசந்தகுமாரி தம்பதிகளின் செல்வபுதல்வி சாதனா தனது முதலாவது பிறந்தநாளை 06.08.1999 அன்று TORONTO வில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் வசிக்கும் அப்பப்பா, அம்மப்பா அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், அத்தை, சித்தப்பா, ஜேர்மனியில் வசிக்கும் மாமா, சித்தப்பாமார், குமுதெனியில வசிக்கும் அம்மப்பா குடும்பத்தினர், நியூசிலாந்தில் வசிக்கும் அப்பப்பா குடும்பத்தினர், மற்றும் கனடாவிலுள்ள உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் சாதனாக் குட்டியை, அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் வே. தேவராசா, கொழும்பு.

அதுவல்ல



பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் மிகப் பிரபலமாக விளங்குவது 'ஈஃபில் ரவர்' என்றழைக்கப்படும் கோபுரம். உலகின் ஏழு அதியசங்களில் ஒன்று தொலைக்காட்சி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களின் பரிவர்த்தனைக்கும் இந்தக் கோபுரம் பயன் படுத்தப்படுகிறது. ஆனால் இங்குள்ள கோபுரம் அதுவல்ல. ஆனால் அசப்பில் அது மாதிரி இருக்கிறது. என்ன குழப்பமாக இருக்கிறதா?

ஈஃபில் கோபுரத்தைப் போலவே இங்கிலாந்தின் பிளாக்பூல் நகரிலும் இரும்பினால் ஒரு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. பிளாக்பூல் நகரம், இங்கிலாந்தின் மேற்கே லங்காஷயர் பிரிவில், ஐரிஷ் கடற்கரையோரமாக விளங்கும் உல்லாசப் பொழுதுபோக்கு பகுதி.

பிரெஸ்டின் நகரின் மேற்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்நகரில் மிக நீளமான அகன்ற மணல் செறிந்த கடற்கரை பரந்து விரிந்து கிடக்கிறது.

பிளாக்பூல் கோபுரம் 158 மீட்டர் உயரமுடையது. இக் கோபுரமும் தகவல் பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்படுகிறது. ○

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்
'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'
இலங்கைக்கு 18 நிமிடம் பேசுவதற்கு,
10 கனேடியன் டொலர் மட்டுமே!

படிப்பகம்